

புகை

புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை
புகை

திரை நாடகம்

புகை

ஷாஜகான்

ஓ! வெளியீடு.

புகை

PUKAI

RAI NAADAGAM' A NEW TECHNIQUE IN TAMIL 'THIRAI NAADAGAM' A NE

by
v m shajahan gani
assistant professor of tamil
dr zakir husain college
ilayangudi 623702

cover design
by
the author

published by
'o!'
2 rengasamy servai lane
north avani moola street
madurai 625001

printed at
al ameen printers
ilayangudi

wrapper printed & bound
by
uma printers
ilayangudi

RST EDITION OCTOBER 1979 FIRST EDITION OCTOBER 1979 FIRST EDITI

Price Rs. 4-50 ரூ. 4-50 விலை

முன்னுரை

இது எனக்கு இரண்டாவது பிரசவம். என் முந்தைய படைப்பில் நான் 'கற்புகள் கற்பனைகள்' என்று சொல்லப்போய், இந்தச் சமூகத்தின் நீதிபதிகளாய்த் தங்களை வரித்துக்கொண்டவர் களால் நான் நன்றாகவே வாங்கிக் கட்டிக்கொண்டேன்.

இலக்கியமும் சரி, சமுதாய ஒழுக்கமும் சரி இவர்களுக்குப் பாரம்பரியம் முக்கியம். பரிணாமம் பற்றிக் கவலை இல்லை.

இவர்கள் 'பீ' என்று சொல்லிவிட்டாலே வாய் நாறுவதாய்க் கூசி, 'பகர ஈ' என்பதிலே தூய்மை காணும் பவணந்தியாரின் சீடர்கள்! இத்தகையவர்களின் வாய்களுக்கு எனது இந்த இரண்டாவது படைப்பிலும் அவல் இருக்கிறது. இதிலே மலம் அள்ளும் தோட்டிகளையும் அவர்களின் தொழில் முறையையுமே கதையாக்கிவிட்டதைக் கூட இவர்கள் 'நாறுகிறது' என வருணிப்பார்கள்!

தங்கள் மலத்தைப்பற்றிச் சொல்லவும் கேட்கவுமே அருவருக்கும் இவர்கள், அதை இன்னொருவன் தொட்டுத் தூக்கித் தோள் சுமந்து செல்லப்பார்த்திருந்து, அவனுக்கு அதனால் பசி தீர்த்து வாழ்வளிக்கும் எஜமானர்களாய்த் தங்களைப் பாவித்து இறுமாந்து, அதையும் ஒரு தொழிலாக நியாயப்படுத்தி வருகிறார்களே, அது மட்டும் நாறவில்லையாக்கும்?

ச்சீ! இது தன் மலத்தால் பிறர்க்குச் சோறுபோடும் சமுதாயம்!

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மொஹஞ்சதாரோ, ஹரப்பா முதலிய நகரங்களில் வாழ்ந்த மனிதன் இந்தத்தோட்டி வேலையை அநாகரிகம் என்று கருதித் தான் அப்போதே சுரங்கக் கால்வாய்த் திட்டத்தை அமல்படுத்தியிருந்தான். ஆனால் இன்று, கம்ப்யூட்டர் சாதனை மலிந்த இந்த விஞ்ஞான யுகத்தில் நாம் இன்னமும் எடுப்புக் கக்கூஸ்களையும் சாக்கடைத் தொட்டி களையும் கட்டி அழுதுகொண்டு, அதை அள்ளிச் சுமக்க ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தையே உருவாக்கியும் அதை நிரந்தரப் படுத்தியும் மனித நாகரிகத்தையே அவமதித்து வருகிறோம்.

முதல் குரங்கு வால் குறைந்து மனிதனானது இந்த இந்தியாவில் தானாம்! ஆனால் நாம் இன்னமும் பழைய காட்டுமிராண்டிகளே!

போலீஸ் ஸ்டேஷன் இல்லாமல் நமக்கு ஒற்றுமையாக வாழத் தெரியாது. தோட்டிகள் இல்லாமல் நம் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கத் தெரியாது. 'இந்திய தேசமே ஒரு திறந்தவெளி கக்கூஸ்' — India is an open latrine — என்று வெளி நாட்டான் நம்மைப்பார்த்துக் கேலிசெய்வது நமக்கெல்லாம் 'கிச்சுமுச்சு'க் காட்டுவதாய் இருக்கிறதே தவிர, ரோஷம் மானம் வெட்கம் இல்லை!

இந்தியாவில் பன்றிகள் மலம் உண்ணப் பழகிக்கொண்டது கூட நம்முடைய ஒழுங்கீனத்தால் தான் என்பேன்.

நமது நாட்டில் எத்தனை தொடக்கப்பள்ளிகளில் குறைந்தபட்சம் சிறுநீர் கழிக்கவாவது முறையான ஒதுக்கிடங்கள் கட்டப்பட்டுள்ளன? அங்கே ஆரம்பப்பாடமே சாலைகளில் சிறுநீர் கழிக்கப் பழக்குவதே ஆகும். அதனால்தான் அதற்குப் பெயரே ஆரம்பப் பாட 'சாலை'!

ஹெஹ்ஹெஹ்ஹெஹ்ஹே ...!   ஆரம்பமே கோணல்!

நமது நாட்டில் கக்கூஸே இல்லாத கல்லூரி விடுதிகளைக் கூட என்னால் காட்டமுடியும். இங்கே, நான் 'எம். ஏ.' படிக்கிற போது நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்லிக்காட்ட வேண்டும். மதுரையில் ஒரு புகழ்பெற்ற மகளிர் கல்லூரிக்குப்போய் நாங்கள் வாரம் ஒருநாள் (காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை) கூட்டு வகுப்பு (Inter-Collegiate Class) முறையில் பாடம் படிக்க நேர்ந்தபோது 'அவசர' காரியங்களுக்காகக் கல்லூரி காம்பவுண்டைக் கடந்து சாலையோரங்களை நாட வேண்டியிருந்தது. பிறகு பல நாட்கள் கழித்துச் சண்டை போட்டு 'அந்த' வசதியைப் பெற்றோம். இப்படி, கலாச்சாரத்தைக் கற்றுக்கொடுக்கும் நமது கல்வி நிலையங்கள் கூட இந்த விஷயத்தில் சொரணையற்று மரத்துப்போயிருப்பது தான் நமது துரதிர்ஷ்டம்!

வீட்டிலே கக்கூஸ் இருந்தாலும் வீதியோரங்களை நாறடிப்பதில் தான் நமக்கு இஷ்டம். அது தானே நாம் கற்ற அனுபவம்! கற்றபின் நிற்க அதற்குத் தக.

சரி போகட்டும். இப்படி நாறுகின்ற பாரதத்தைத் தூர்

எடுக்கும் அந்தத் துப்புரவுப் பணியாளனை ஒரு மனிதனாக வேனும் மதிக்கிறோமா? அவன் பார்க்கும் வேலைக்கு ஒரு தொழிலுக்குரிய அந்தஸ்துக் கொடுக்கிறோமா?

வேறு ஜாதியாரில் ஒருவன் அந்த வேலை பார்க்க முன்வராத செயல் ஒன்றே போதும், அதற்குத் தொழில் அந்தஸ்து இல்லை என்பதற்குச் சரியான அத்தாட்சி. அது ஒரு அடிமைச் சேவகம். அடிமைச் சேவகம் மட்டுமே! இதுவா ஒரு வளர்ச்சி யடைந்த நாகரிகத்தின் லட்சணம்?

இன்னமும் பல ஊர்களில் அவன் தீண்டடத்தகாதவன் என்றே தள்ளிவைக்கப்பட்டிருக்கிறான். நம் வீட்டுக் குப்பைகளையும் நம் பிள்ளைகளின் மலத்தையும் அள்ளிச் சுத்தம் செய்யும் நம் மனைவியைத் தீண்டடத்தகாதவள் என்று நினைக்கவே தெரியாத நாம் தான், நம் வீட்டின் அதே வகைக் கழிவுகளை அகற்றும் அந்தச் சமூகத்தவனை மட்டும் அப்படி ஒதுக்கிவைத்து முகஞ் சுளிக்கிறோம்! ஏனும்? அவன் நம் வீட்டுக்கு மட்டுமன்றி ஊருக்கெல்லாம் அள்ளுகிறானும்! என்ன பொறுமை பாருங்கள்!

எனக்கு ஒரு குரூரமான கற்பனை வருகிறது. நமது வீட்டு மலத்தையும் மூத்திரத்தையும் அள்ளித் துப்புரவு செய்யும் தோட்டி, நமது வீட்டுப் பெண்டுகளுக்குக் 'கால் கழுவி' விடும் சேவகமும் செய்யத் தயாராய் இருப்பதாகச் சொல்கிறான்! நமக்கு எவ்வளவு ரோஷம் வரும்? எவ்வளவு அருவருப்பு வரும்? ஆத்திரம் தரும்?

அவ்வளவு அருவருப்பும் ஆத்திரமும் அவன் நம் வீட்டு அசிங் கங்களைத் தொட அனுமதிக்கிற போதும் வரவேண்டும். ஏனெ னில், 'கால் கழுவுவது' போலவே நம் அசுத்தங்களை நாமே அகற்றுவதும் ஓர் அந்தரங்கக் கடமை ஆகிறது. நாமே உரிமை யாகவும் சரியாகவும் செய்ய முடிகிற ஒரு காரியத்தை ஒரு வேலைக்காரனைக் கொண்டு உரிமையின்றியும் சரியில்லாமலும் செய்ய அனுமதிக்கிற 'மூக்குச்சிந்த ஆள் நியமனத்தனம்' (delegated nose blowing) நமக்கு வேண்டாமே!

''பறையருக்கும் இங்குத் தீயர் புலையருக்கும் விடுதலை'' என்று பாட்டுப் பாடிவிட்டு, இன்னமும் அவர்களை இப்படியே கொத்தடிமைக்குள்ளாக்கி வைத்திருக்கிறோம். கொடுமை!

இதற்கொரு மாற்று கண்டுபிடிக்க வேண்டும்.

''ஒவ்வொருவரும் உங்கள் வீட்டுக்கு முன்னால் துப்புரவு செய்யுங்கள்; ஊரே துப்புரவாகிவிடும்'' என்ற அராபியப் பழமொழியையும், ''the cleanest city in the world'' என்று பெயர் பெற்ற சிங்கப்பூரின் நகராட்சிக் கொள்கையையும் நம் நாட்டில் பழகிப்போன நடைமுறையாக்கிவிட முடியாதோ?

முடியும். அதை யார் ஆரம்பிப்பது?

அரசியல்வாதிகளையோ, 'ஐ. ஏ. எஸ்.' திட்டங்களையோ இன்னமும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதில் பாதிக்கப்பட்டவர்களை உசுப்பிவிடுவதற்கே எனக்கு இஷ்டம்.

ஆனால் துரதிஷ்டவசமாக, அவர்கள் அதைப் 'பாதிப்பு' என்று உணரும் அறிவு கூட இல்லாமல் மழுங்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்! அவர்களைப் படிக்கவைத்துவிட்டால் தீர்வு வந்துவிடும் என்பதெல்லாம் பசப்பல்கள். எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்களிலே படித்தவன் கூட இதிலே உணர்ச்சி பூர்வமாய்ச் சூடு கண்டு கிளர்ந்து எழும் சொரணை இன்றி எருமையாயிருக்கிறான்! சுயநல நாயாயிருக்கிறான்! எலும்புத்துண்டு கிடைத்தால் வாலாட்டும் நன்றியைத்தான் ஒழுக்கம் என்று இவன் படிப்பு இவனுக்குப் போதித்திருக்கிறது. யாசகமும் அடிமைச் சிறுமதியும் இவனிடம் அற்றுப்போய்விடக்கூடாது என்பதற்காகவே ஸ்காலர்ஷிப் என்றும் சலுகைகள் என்றும் ராஜாங்க நரிகளால் சர்வ ஜாக்கிரதையுடன் இவன் பாதுகாக்கப்பட்டு வருகிறான். இவன் ஓர் அடிமை என்பதை இவனே அங்கீகரித்துக்கொண்ட வெற்றிக்காகவே தந்திரத்தோடு முதுகு தட்டி சன்மானம் கொடுக்கப்படுகிறான் என்பதனை இவன் என்றைக்கு உணரப்போகிறான்? அரசியல் வியாபாரத்தில் இவனை நிரந்தர கஸ்டமராக்கிவிட அவர்கள் தரும் 'கொசுறு'கள் தாம் இவை என்பதனை இவனுக்கு யார் உணர்த்துவது?... சரி,

நம் ராஜாங்கம் தான் இவனுக்காக என்ன செய்திருக்கிறது? ஊரெல்லாம் கக்கூஸ் அள்ளும் இவனுக்காக, ஊர் ஓரத்தில் கட்டிக் கொடுக்கப்படும் காலனி வீடுகளில் கக்கூஸ் இல்லை!

ஒரு தோட்டியின் மகனைக் கலெக்டராக்குகிறார்களாம்! இதுவே அந்தத் தோட்டியை உயர்த்திவிட்ட செயலாகி விடாது! அவனே, அவனைப் போன்ற மற்றவனே இந்தக்காட்டுமிராண்டி சேவகத்திலிருந்து நிரந்தரமாக விடுபட வேண்டும்.

புதிய காலனி ஆதிக்கங்களை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கும்

நமது கம்யூனிஸ்ட் புரட்சிக்காரர்களுக்குக் கூட இதுமாதிரிப் பிரச்சனைகளில் அக்கறையைக் காணோம். அவர்களுக்கு இதெல்லாம் தூவானங்கள்! அவர்கள் பின்வரும் பெரும் மழைக்காக வருண ஜபம் செய்கிறார்களாம்! லெனின் என்ற அறிஞனால் 'பன்றித் தொழுவம்' என்று வருணிக்கப்பட்ட பாராளு மன்றத்தில் குடியேறிச் சுகங் காண இவர்களுக்குக் கொள்ளை ஆசை! ராஜபோக அபிலாஷைகளுக்கு ஆட்பட்ட இவர்களும் அவனைத் தங்கள் தலைவன் என்று வெட்கமில்லாமல் சொல்லிக்கொள்கிறார்கள்! கம்யூனிஸ்டுகள் அரசியல் வியாபாரத்தில் பகிரங்கத் தரகர்களாகிவிட்ட சீரழிவை இந்தியாவில் தான் பார்க்க முடிகிறது!

பிறகு, இதற்குத் தீர்வு தான் எப்படி?

இரண்டு வழி இருக்கிறது. ஒன்று, இந்தத் தோட்டிகள் இதே வேலையை ஒரு வியாபாரமாகப் புனரமைத்துக்கொள்வது. இரண்டு, வேலை நிறுத்தம் செய்வது.

இவை சாத்தியம் ஆகுமா?

முன்னொரு காலத்தில்—'ஸேஃப்டி ரேஸர்' கண்டு பிடிக்காத காலகட்டத்தில்— ஒரு ஊருக்கு ஒரு நாவிதன் இருப்பான். அவனுக்கு வருஷக் கூலிதான். ஊருக்குக் கட்டுப்பட்டவன் அவன். அந்த ஊரிலுள்ள அத்தனை ஆடவர்க்கும் 'எல்லா வகை'ச்சவரமும் அவன் செய்யவேண்டும். இதனாலேயே அவன் 'அம்பட்டப்பயல்' என்று இளக்காரமாக மதிக்கப்பட்டான். இன்றைக்கு அந்தச் சரித்திரத்தின் சுவடு கூடத் தெரியாத அளவிற்கு நிலைமை மாறிப் போயிருக்கிறது! இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?...

மக்கள் தாங்களே சவரம் செய்துகொள்ளும் (self shaving) நாகரிகம் உருவானதால், முடிதிருத்துவது, முகம் வழிப்பது என்பதெல்லாம் ஒரு கலையாக மதிக்கப்பட்டு, அதுவே ஒரு போட்டிக்குரிய தொழிலாகி, இன்றைக்கு நகர்ப்புரங்களில் எல்லா ஜாதியாருமே 'பார்பர்'களாகிப் பணம்பெருக்குகிறார்கள்!

ஊருக்கு அடங்கி 'ஏகாலி' என ஏளனமாய் மதிக்கப்பட்ட வண்ணான் 'ட்ரை கிளீனிங்' எஜமானன் ஆனதும் ஜாதிமத பேதமின்றி அந்தத் தொழில் பரிணமித்திருக்கிறது!

நாவிதத் தொழிலோடு ஐக்கியமாகியிருந்த மருத்துவத் தொழில் மேலைக்கல்வியின் கலப்பால் இன்று வெள்ளைச் சட்டையும்

ஸ்டெதாஸ்கோப்புமாய் 'டாக்டர்' என உருமாறி அந்தஸ்தின் உச்சாணிக் கொப்புக்கே போயிருக்கும் அதிசயத்தைப் பார்க்கிருேம்!

இந்த மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணம், அவர்கள் ஊர்க்கட்டுக்கு அடங்கிக் கூலி பெருமல் அதை மீறியதும், சுதந்திரமாய்த் தொழில் நடத்தத் தொடங்கியதும் தான்! இந்த ரோஷம் இந்தத் தோட்டிகளுக்கு என்றைக்குத்தான் வரப் போகிறது?

நான் ஒரு கோடு காட்டுகிறேன்... சில நகரங்களின் பஸ் நிலேயங்களில் பார்க்கலாம். கழிப்பறைகளில் ஒரு தோட்டி நின்றுகொண்டு, தலேக்குப் பத்துக்காசு வீதம் வசூல் செய்வான். அங்கே பிற இடங்கள்போல் அல்லாமல் சுத்தமாகவும் இருக்கும். தண்ணீரும் வேண்டிய அளவு கிடைக்கும். சந்தோஷமாகப் பத்துக் காசு கொடுக்க நமக்கும் மனசு வரும். இக்கட்டான சந்தர்ப்பமாகி அங்கே போகும் பட்சத்தில் அந்த வசதிக்காக அந்தத் தோட்டியை மனத்திற்குள் வாழ்த்தவும் செய்வோம். அப்போது நாம் ஒரு கஸ்டமராகவும் அவன் ஒரு முதலாளி யாகவும் தோன்றுவான். இந்த மனோதத்துவத்தை ஆராய்ந்து, இதையே ஒரு வியாபாரமாகப் புனரமைத்துக்கொள்ள அவன் திட்டம் தீட்டினுல் என்ன?

இதனே வியாபாரமாய் ஆக்கிக்கொள்வதுகூட தாற்காலிகமான, ஓர் இடைக்கால ஏற்பாடாக மட்டுமேதான் நான் சிபாரிசு செய்கிறேன். நான் வலியுறுத்துவதெல்லாம் அந்த இரண் டாவது வழியான வேலே நிறுத்தத்தையே. எனவே அதைத் தான் என் கதைச் சிக்கலின் தீர்வாகவும் சொல்லியிருக்கிறேன்.

'வேலே நிறுத்தம்' என்கிறபோது அதுபற்றிய என் கொள்கை யினே நான் தெளிவுபடுத்த வேண்டும். வேலே நிறுத்தம் என்ற பெயரில் நாட்டில் நடக்கும் இன்றைய போராட்டங்கள் எல்லாம் தனது கூலி உயர்வு கருதியோ அல்லது தனது வேலேயைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவோ தான் நடைபெறுகின்றன. அவையெல்லாம் சுய நல ஓலமாய் என் காதைக் குடைகிறது...

ஏன்...

தான் சார்ந்த நிறுவனத்தின் தரம் பாதிக்கப்பட்டதை எதிர்த்து யாராவது எங்காவது போராடியிருக்கிருர்களா? போனஸ் உயர்வுக்காகப்போராடும் தபால்ஊழியன் தபால்காகிதங்களின்

தட்டுப்பாட்டை எதிர்த்துப் போராடியிருக்கிருனு? சம்பள உயர்வுக்காகக் குதிக்கும் கல்லூரி ஆசிரியன், 'இந்தப் போலியான பாடத்திட்டத்தைக் கல்வி என்ற பெயரில் போதிக்க முடியாது' என்று கல்வியின் அக்கறையின் பேரில் என்ருவது போராட்டத்தில் குதித்திருக்கிருனு? இதெல்லாம் தங்கள் பொறுப்புக்கும் உரிமைக்கும் புறம்பானது அல்ல என்பதை அவர்கள் புரியாமல் இருக்கிருர்கள்; அல்லது புரிந்திருந்தும், வேண்டுமென்றே புறக்கணிக்கிருர்கள்.

இங்கு என் கதாபாத்திரங்களும் போராடுகிருர்கள். அவர்கள் போராட்டம் இவற்றிலெல்லாம் மாறுபட்டது. ஒரு பெரீஇய சமூக மாறுதலுக்கே அடிகோலுவது.

சென்னையிலும் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் தோட்டிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலைகளை நிறுத்திக்கொண்டதோடு நில்லாமல், அவர்களே குப்பைகளைத் தேடிக்கொண்டுவந்து வீதிகளிலே குவித்து ... நெருக்கடியை உண்டுபண்ணி ... ச்சே! அடுத்தவரைக் குத்திச் சுகங்காணும் (Sadism) குறுகிய நிலைக்குத் தரம் தாழ்ந்துபோனுர்கள்! வேளாங்கண்ணிக் கோயில் குஷ்டரோகிப் பிச்சைக்காரர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்கள் இரவு நேரங்களில் தாங்கள் யாசிக்கும் யாத்திரிகர்கள் காசு தராதுபோனுல், மொத்தமாகச் சூழ்ந்துகொண்டு அவர்களைத் தொட்டணைத்து அருவருப்பூட்டிப் பணம்போடச் செய்வார்களாம்! அத்தகைய செயலுக்கு ஈடானதே இதுவும். சீச்சீ! இதுவா போராட்டம்?

தூத்துக்குடித் திரையரங்குத் தீவிபத்தில் கருகிப்போன பிணங்களை அப்புறப்படுத்தத் தோட்டிகள் ஏவப்பட்டபோது மனபலவீனத்தால், அதனை மறுத்தவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்! (4—8—'79 'தினமலர்'ச் செய்தி) மனிதாபிமானம் தெரியாத அந்தக் குருட்டுச் சட்டத்தை எதிர்த்து, அந்த சந்தர்ப்பத்திலாவது நாட்டின் தோட்டிகள் அத்தனை பேரும் ரோஷத்தோடு எழுந்து இந்த தோஷமான தொழிலைத் 'தூ' வென்று தள்ளித் தங்களைத் துப்புரவுப்படுத்த முதன் முதலாக முயன்றிருக்கலாம். சமூகத்தில் எல்லோரும் தோட்டிகளே என்பதை அனுபவபூர்வமாகக் காட்டியிருக்கலாம். ஆனுல் தவறி விட்டார்கள். அதை என் கதையில் வரும் தோட்டிகள் ஆரம்பித்துவைக்கிருர்கள்.

இந்தக் கதையின் இறுதியில், புலவர் தோட்டிகளைப் பார்த்து

"நாமெல்லாம் வைசியர்களாகிவிட்டோம்" என்கிருர். இதற்கு விளக்கம் வேண்டுபவர்களுக்காக, ஸ்ரீமத் பகவத் கீதைக்கு சுவாமி சித்பவானந்தர் எழுதிய வியாக்கியானத்தி லிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறேன்.

> இன்றைக்குச் சமூகத்தில் உள்ள நிலைமையில் பிறப்பை அனுசரித்து வர்ணத்தை நிர்ணயிப்பது சிறிதும் பொருந்தாது. அத்யாத்ம வித்தைக்கு ஏற்ப நான்கு வருணங்கள் மனபரிபாகத்தை ஒட்டி யனவாம். அதன்படி நான்கு சகோதரர்களுக்கிடையில் மனபரி பாகத்துக்கு ஏற்ப ஒருவன் பிராம்மணனுகவும், இன்னெருவன் க்ஷத்திரியனுகவும், மற்றெருவன் வைசியனுகவும் வேறெருவன் சூத்திரனுகவும் இருக்க முடியும் ...... வாழ்க்கை முறையில் ஒரு வர்ணம் மற்றெரு வர்ணமாய் பரிணமிப்பது சர்வ சாதாரணம்.
>
> (அத். 4—13)

> சுதந்திர வாழ்க்கை வாழ்ந்து பணத்தைப் பெருக்குபவர்களெல்லாம் வைசியர்கள்.
>
> (அத். 18—44)

என் தோட்டிகள் சுதந்திர வாழ்க்கையை எதிர்நோக்கி நடை போடத் தொடங்கிவிட்டார்கள். எனவே அவர்கள் வைசி யர்களே! இங்கே அவர்களை ஜாதிமாற்றம் செய்துவிடுவதில் எனக்கு திருப்தி இல்லை. என் நோக்கமும் அது ஆகாது. நந்தனுரைத் தீயில் புடம் போட்டு பிராமணனுக்கித் தில்லையம் பலத்தானேடு சந்திக்க வைத்த சேக்கிழார்த்தனம் எனக்கு உகந்ததல்ல. அவர்கள் சுதந்திர ஜீவிகளாகிவிட்டார்கள் என்பதையே புலவர் தமக்கே உரிய பாஷையில் அப்படி வருணிக்கிருர். அம்மட்டே.

இறுதியாக ...

இந்தத் திரை நாடகக் கதைக்கு விவேகமான எதிர்ப்பும் வலுவும் தந்து இதனைச் செம்மைப்படுத்திய என் நண்பர்களுக் கெல்லாம் இதன் வெற்றி தோல்விகளில் பங்குண்டு எனப் பிரகடனப்படுத்துகின்றேன்.

வெ. மு. ஷாஜகான் கனி ■ இளையான்குடி ■ அக்டோபர் 2, 1979.

கலை வளர்ப்போம் வாருங்கள் என்று கச்சை கட்டிக்கொண்டு இறங்கும்போது, இந்தக் சினிமாக்கலையில் மட்டும் என்னையொத்தவர்களால் கால்வைக்க முடியவில்லையே ஏன்?

என் திரையில் இது இரண்டாவது நாடகம்

ஒரு நாட்டின் கலை ஆற்றுகிற கலைஞர்கள் எல்லோராலும் தீண்ட முடியாதபடி இருப்பது என்ன துரதிர்ஷ்டம்!

'சினிமாவின் நுணுக்கங்களைப் பேசுகிற நீ எந்த பிலிம் இன்ஸ்ட்டிட்யூட்டில் படித்திருக்கிருய்?' என்று சிலர் தர்க்கம் பேசுகிருர்கள். சிலர், 'நீ கோடார்ட் ஸ்கிரிப்ட் படித்ததுண்டா? சார்ல்ஸ் பிரான்ஸனைத் தெரியுமா?' என்றெல்லாம் கூட ஏதேதோ சொல்லிக் குழப்புகிருர்கள்.

இதெல்லாம் என்ன? சினிமாவைப் பற்றிச் சிந்திக் கவும் பேசவும் இப்படியொரு தகுதியை இவர்கள் ஏன் எதிர்பார்க்கிருர்கள்?

சிக்மண்ட் ஃபிராய்டு எந்த உளவியல் கல்லூரியில் படித்துவிட்டு மனேதத்துவம் பேசினர்? அவர் சந்தித்த மனிதர்களே அவருக்குப் பாடப் புத்தகங் களாய் ஆகிவிடவில்லையா? (The world of knowledge Encyclopedia, Vol. x.) அதுபோல, நாம் பார்க்கும் திரைப்படங்களே நமக்குப் பாடங் களாக, தியேட்டர்களே வகுப்பறைகளாக ஆவது சாத்தியமில்லையா என்ன?

நான் இந்தச் சினிமாவை மூன்று கண்களால் பார்க்கிறேன். சராசரிகளுக்குத் தெரியாத சங்கதிகள் எனக்குப் புலப்படுகின்றன. நல்ல சினிமாவோ கெட்ட சினிமாவோ, நான் அதைப் பார்க்கிறபோது நானே ஒரு கதாசிரியனுய், இயக்குநனுய் மாறி, அந்தப் படத்தின் உரிமைப் பட்டவர்களோடு என்னை ஒப்பிட்டுப்பார்த்து என் பலத்தை, பலவீனத்தை உணர்ந்துகொள் கிறேன்.

பொருளாதாரத்தில் நான் நடுத்தரவாதி. சினிமாத் துறைக்குள் பிரவேசிக்கும் பொறுமையோ அல்லது பணவலிமையோ எனக்கில்லை. எனவே என் அரிப்பை இப்படிச் 'சீலைக்கு மேல்' சொறிந்து கொள்கிறேன். இந்தத் 'திரை நாடக' உத்தி எனக்கு வசதியாயிருக்கிறது.

திரை நாடகத்தை ஒரு 'புதிய இலக்கிய வகை' என்று சொல்லி விட்டதில் பலருக்குக் கோபம். இது நாவலின் ஒரு வடிவமே என்பது அவர்கள் வாதம். இத்தகையவர்கள், சிறுகதையும் நாவலின் சுருக்கமே என்று கூடச் சொல்வார்கள். போகட்டும். இதிலாவது பேதம் காட்டும் பேதைமை ஒழித்தார்களே என்று சந்தோஷப்படுவோம். ''நாவலை சினிமாவினுடைய மொழியில் மொழிபெயர்க்க வேண்டியிருக்கிறது ... It is not mere translation; trans-creation'' என்று கூறுகிறார் சத்யஜித் ரே. ('பிலிமாலயா' தீபாவளி மலர் '77) இது அவர்களுக்கு உதவலாம்.

அவர்கள் தர்க்கத்திலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இப்படி எழுத்தில் காட்டிவிடுவதே சினிமா ஆகிவிடாது என்பது எனக்குப் புரிகிறது. 'படிப்பதற்குரிய நாடகம்' என்பதைப் போல இது ஒரு கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடே. இதிலே எனக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. இனி நான் 'திரை நாடகம்' என்று எழுதி இப்படி அச்சிடப் போவதில்லை. கையாலாகும் காலம் ஒரு நாள் வரும். அன்று என் திரைக்குரிய 'திரை நாடகம்' திரையிலேயே வரும்! நம்பிக்கை இருக்கிறது.

இந்த எனது இரண்டாவது திரை நாடகத்தில் பஞ்சதந்திரக் கதைகளையும் ஈசாப் கதைகளையும் சில பழமொழிகளையும் கதை நிகழ்ச்சிக்கு ஒட்டும் சங்கேதக் குறியீடுகளாக்கி கார்ட்டூன் காட்சியாக அமைத்திருக்கிறேன். வேறொன்றும் நான் புதுமை செய்திடவில்லை. திரை நாடக குணத்திலிருந்து சற்று விலகி இதில் சில இடங்களில் அதிகப்பட்சமாய் வருணித்திருக்கிறேன் —ஒரு காம்ப்ரமைஸாக. சப்தங்களையும் காகிதத்தில் தரமுடிகிற 'டெக்னலஜி' வளரும் காலத்தில் 'திரை நாடகம்' ஒரு முழுமையான நிலைக்குப் பரிணமிக்கும்.

இதில் இடம்பெற்றுள்ள நாட்டுப் பாடல்கள் இதுவரை அச்சில் வராதவை. என் மாணவர்களோடும் டேப் ரிக்கார்டரோடும் சுற்றுப்புறக் கிராமங்களில் சேரிகளில் நான் அலைந்து சேகரித்தவை. அந்தப் பாடல்களின் ஜீவனுள்ள கிராமிய மெட்டையும் இந்த எழுத்துக்களில் தரமுடியாமல் போன மொழியின் பலவீனத்தை என்ன சொல்ல! ...

— வெ. மு. ஷாஜகான் கனி



0

வேள்வித்தீ வளர்க்கும் ஓமகுண்டம் அண்மைக் காட்சியாகத்தெரிகிறது. அதில் நெருப்பு இல்லே. நீறுபூத்து புகைந்து கொண்டிருக்கிறது. இது காட்சியாக....

பின்ஞெலியாய் ஒரு கனத்த குரல்—

குரல்: சாதுர் வர்ணயம் மயா ஸ்ருஷ்டம்
குணகர்ம விபாகச:
ஜனங்களின் குணங்களுக்கும் கர்மங்களுக்கும்
ஏற்ப நான்கு ஜாதிகளேயும் நானே படைத்தேன்!

இப்போது ஒரு அகப்பையிலிருந்து நெய் வழிய, ஓமகுண்டம் 'குப்' என்று தீப்பற்றி எரிகிறது.

'ஹோ...' என்ற ஓலம்...
தொடர்ந்து பலரின் ஆரவாரம்...

ஒரு குழப்பத்தை உண்டுபண்ணும் பெருங்கூட்டத்தின் அர்த்தம் புரியாத பேரிரைச்சல்...

திடீரென்று—

ஒரு விநோதமான தபேலா இசை, பின்னணியில் முழங்க, திரையில் அலைஅலையாய்க் கோடுகள் விழுந்து காட்சி மாறுகிறது- (கார்ட்டூன் காட்சி)

ஆழம் குறைந்த ஒரு பாழடைந்த கிணறு. உள்ளே ஒரு நரி.

மேலே ஒரு வெள்ளாடு. (நிறத்தில் அது கறுப்பு ஆடு.) உள்ளே எட்டிப் பார்க்கிறது.

நரி அதை உள்ளே அழைக்கிறது. வெள்ளாடு கீழே இறங்க, அதன் தலையில் கால் வைத்து ஏறி, நரி மேலே வந்து கூத்தாடுகிறது...

வெள்ளாடு விவரம் புரியாமல், உள்ளே முளைத்துள்ள அற்பமான புல்லை ருசித்து மேய்கிறது.

பழைய பின்னணி இசையில் காட்சி இன்னொன்றுக்கு மாறுகிறது—

ஏதோ ஒரு அரசாங்க அலுவலகம். அதன் முன்னால் ஹரிஜனத் தோட்டிகள் அடிமைகளைப் போலக் கைகளைக் கட்டிக்கொண்டு— ஆனால் சந்தோஷத்துடன்— வரிசையாக நின்று சம்பளமோ, சலுகையோ பெறுகிறார்கள்.

மகிழ்ச்சி ஆரவாரம்...

அதிகாரிகளின் அதட்டல்...

அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அதட்டி அடங்கிக்கொள்கிறார்கள்— தங்கள் அடிமைத்தனத்தை அங்கீகாரம் செய்துகொண்டவர்களைப் போல.

□□

பறைமேளம் எக்காளமிடுகிறது.

இரவு.

அது ஒரு சேரி. அந்தக் கறுப்பு நிற மனிதர்கள் தங்களுக்கே உரிய பாணியில் பறைமுழக்கத் திற்கேற்ப மகிழ்ந்து ஆடுகிறார்கள்...

□□

காலை நேரம்.

ஊரில் பல்வேறு காட்சிகள்.

ஒரு தோட்டி குப்பை சுமக்கிறான்...
ஒருத்தி மலம் அள்ளுகிறாள்...
ஒருவன் சாக்கடை இறைக்கிறான்...
ஒருவன் தெருக்கூட்டுகிறான்...
இன்னொருவன் பிணம் எரிக்கிறான்...
எல்லோருமே உற்சாகமாய்...உற்சாகமாய்...

இத்தனை காட்சிகளும் ஒட்டுப் போட்டதைப் போல ஒரே காட்சியாகத் தெரிய— பின்னொலி யாய் அந்தப் பழைய கனத்த குரல்—

குரல்: பரிசர்யாத்மகம் கர்ம
சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம்...
குற்றேவல் செய்வது சூத்திரனுக்கு சுபாவத்தில் உண்டான கர்மம் ஆகும்!

அந்த ஒட்டுப்போட்டதுபோல் தெரியும் அத்தனை காட்சிகளிலும், பிணம் எரியும் காட்சி மட்டும் அண்மைக் காட்சியாய்ப் பாய்ந்து நெருங்கு கிறது (dollying).

'ஹோ...' என்ற ஓலம்...
தொடர்ந்து பலரின் ஆரவாரம்...

ஒரு குழப்பத்தை உண்டுபண்ணும் பெருங்கூட் டத்தின் அர்த்தம் புரியாத பேரிரைச்சல்... முன்னைவிட அதிகமாய்.

இப்போது, அந்தச் சிதை நெருப்பின் ஊடகமாய் ஒரு காட்சி—

மண்டியிட்டு ஒரு கறுப்பு மனிதன் நெருப்புக்குள் உட்கார்ந்திருப்பது போல் தெரிகிறது. அவன் கால்களில் விலங்கு போடப்பட்டிருக்கிறது. நெருப்பில் அந்த விலங்கு எரிந்து தெறிக்க, அவன் நிமிர்ந்தெழுந்து சிதையை விட்டிறங்கி எட்டி நடைபோடுகிருன்.

பின்னணியில்—

ஹை—ஹை! ஹை—ஹை!... என வெற்றி ஆரவாரக் குரல்கள் வானம் கிழிபட ஒலிக்கின்றன. அவன் பீடுநடை போடுகிருன்...

□□

நிசப்தம்.

அண்மைக் காட்சியாக—
ஒரு அகலமான சிமிண்ட் தொட்டி, ஒரு தெரு முச்சந்தியில் ஓரமாய் இருப்பது தெரிகிறது.
அழகான காலித்தொட்டி.

திடீரென்று—

அந்தத் தொட்டி நிறையத் தண்ணீர்!
யாரோ ஒருவர் வந்து தண்ணீரைக் கைகளால் அள்ளிக் குடிக்கிருர்.
பிறகு ஒரு சிறுவன் வந்து குடிக்கிருன்.
பிறகு ஒரு பெண்...
இன்னும் ஒருவர்...
இப்படியே பலர். அந்தத் தொட்டியைச் சுற்றிச் சூழ்ந்து...

ஒரே ஆரவாரம்!
பின்ஞெலியாக அவர்களின் குரல்—

குரல்-1: எல்லோருக்கும் வேணும். பார்த்துக் குடிங்கோ.

குரல்-2: ஆருடா அவன் கையை ஓட்டுறது? தொடாதே. படுவா!

குரல்-3: இந்தாடா லோட்டா. மோந்து குடி.

குரல்-4: ஆமா ஆமா. வரிசையிலே வாங்கோ.

குரல்-5: சுத்தமான தீர்த்தம்!

குரல்-6: எல்லாம் பகவான் புண்ணியம்!

குரல்-7: தொட்டி வச்ச புண்ணியவான் நல்லாருக்கோணும்.

குரல்-8: ஸ மம ப்ரிய!

□□

அந்த சப்தங்கள் அடங்குகின்றன.

அதே தொட்டி.

இப்போது அதில் தண்ணீர் இல்லை. அழகான தொட்டி. திடீரென்று அதில்—

யாரோ வந்து குப்பையைத் தட்டுகிறார்கள். ஒரு எச்சில் இலை வந்து விழுகிறது.

ஒரு நாய் உள்ளே குதித்து, வாலை ஆட்டிய வாறே சிறிது நேரத்தில் எழுந்து வெளியே ஓடு கிறது.

ஒரு சிறுவன் அந்தத் தொட்டியின் பின்னே ஒதுங்கி, கால்சட்டையை முழங்கால் வரை இழுத்துவிட்டுக் கொண்டு உட்கார்ந்து மறைகிறான்.

மீண்டும் குப்பைகள்...
எச்சில் இலைகள்...
எச்சில் சிகரெட், பீடித்துண்டுகள்...
அந்தக் குப்பைத்தொட்டி நிறம் மாறிக் கறை படிந்து, கறுத்து, நாறி ஈ மொய்த்து... யாரோ அதை நோக்கித் துப்புகிறார்கள்!

காறித் துப்புகிறுர்கள்!
காறிக் காறிக் காறிக்...
பல பேர் தொடர்ந்து துப்புகிறுர்கள்!
ஒரு குரல்—

குரல்: நிறுத்துங்கள்!

காறித்துப்பும் ஓசை நிற்கிறது.
அந்தக் குப்பைத் தொட்டிக்கு திடீரென்று கண்கள், மூக்கு, வாய் முளைத்துவிட்டது போல ஒரு தோற்றம். அதுதான் பேசுகிறது.

குரல்: நான் நாறுகிறேன்தான். அவ்வளவும் உங்கள் நாற்றம்!

கூடிநிற்போரின் 'கசா முசா' ஆரவாரம்...
மீண்டும் அதே குரல்—

குரல்: நான் நாருவிட்டால்... நீங்கள் நாறிப்போவீர்களே!


'ச்சீ!'
'ப்த்தூ!'
'க்க்கா... ப்த்தூ!'
காறித்துப்பும் ஓசைகள்...
காறிக் காறிக் காறிக்...
பலபேர் தொடர்ந்து துப்புகிறுர்கள்.
திடீரென்று—

புகை

என்ற எழுத்துக்கள் தோன்றி மறைகின்றன.
மறுகணம்—

பட்டாசோ துப்பாக்கியோ வெடிக்கிறது!
அந்தக்குப்பைத்தொட்டி தீப்பற்றி எரிகிறது.
எரிந்து புகை பரப்பிச் சாம்பலாகிக் காற்றில் பறந்து கரைந்து மறைகிறது...

அந்தக் குப்பைத் தொட்டியை இப்போது காணும்!



1

சுடுகாட்டில் ஒரு பிரேதம் எரிந்து கொண்டிருக்கிறது. பின்னணியில்—

மெல்லிய குரலில் ஒரு பெண்ணின் ஒப்பாரிப் பாடல் நெஞ்சு நெகிழ ஒலிக்கிறது.

பாடல்: விரிச்சேன் மயி(ல்)கூந்தல் விட்டெறிஞ்சேந் தாம்பாலம்
புடிச்சேன் புயல்க்காரு பொறந்த எடம் போணுமினு
அப்பவும் பாக்கலியே அருச்சுணரு திருமொகத்த...

இடையிடையே நாயோ நரியோ தூரத்தில் ஊளையிடுவது விட்டுவிட்டுக் கேட்கிறது.

இரவு நேரம்.

எரிந்து புகை பரப்பும் சிதைக்கு அருகில் வெட்டியான் நிற்கிறான். வயது 60 இருக்கும். ஒட்டி உலர்ந்த மேனி, குழி விழுந்த கன்னங்களில் குத்திட்டு நிற்கும் நரை ரோமங்கள்.
காட்சி எட்டத்தில் நகர—

தலையில் துண்டைப் போட்டவாறு அதுவரை அங்கே நின்றிருந்த கும்பல் நகர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. அந்தக் கும்பலிலிருந்து ஒரு பெரியவர் விலகி வந்து அந்த வெட்டியானிடம் 'கட்டளைப்பண' த்தை நீட்டுகிறார்.

அது அவனுக்குரிய சம்பளமே என்ற உணர்வின்றி, அவன் யாசகம் பெறுவது போல மண்டியிட்டு பவ்யமாய் அதை வாங்கிக் கொள்ளக் கையேந்துகிறான்.

□□


புகைச்சுருளின் பின்னணியில், அண்மைக் காட்சியாக—

கீழே யாசிக்கும் கறுப்புக் கரங்கள்...
மேலே பணம்போடும் சிவந்த கை...

பணம் கை மாறும்போது, காட்சி அசையா நிலையாகி (freezing) சில விநாடிகளுக்குச் சிலை போல் தெரிகிறது.

பின்னணியாய் ஒரு குரல்—

குரல்: மனிதப் பிணங்களைச் சாம்பலாக்கும் உன் கரங்கள் மனிதக் கொடுமைகளை எரிக்க எப்போது எழும்? (எதிரொலி போல) எப்போது எழும்?... எப்போது எழும்?... எப்போது எழும்?...



2

ஒரு குப்பை மேடு எரிந்து புகைந்து கொண்டிருக்கிறது...

அதன் பக்கத்தில் ஒரு தோட்டி (வயது 28) மண்டியிட்டு அமர்ந்து, வாயில் கடித்துள்ள பீடிக்கு எரியும் குப்பையிலிருந்து நெருப்பெடுக்கிறான். பீடியைப் பற்றவைப்பதற்கு முன் தயக்கத்துடன் திரும்பிப் பார்க்கிறான்.

□□

அந்தக் குப்பை மேட்டையொட்டி ஊருக்குச் செல்லும் தார் ரோட்டில்—

முன்னங்கால்கள் பிணிக்கப்பட்ட ஒரு கழுதை குதித்துக் குதித்து முன்னேறிக் கொண்டிருக்கிறது...

அங்குமிங்குமாய்ச் சில எருமைகள்...

அவனது குப்பை வண்டி குப்பை கொட்டிய நிலையில் சாய்த்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த வண்டிக்குரிய நோஞ்சான் மாடு ரோட்டை ஒட்டி மௌனமாய் நிற்கிறது.

□□

அவன் இப்போது சுதந்திரமாய்ப் புகைத்துக் கொண்டிருக்கிறான். அவன் பீடியை வாயில் வைத்துப் புகையை சுவாரஸ்யமாய் உறிஞ்சும் போது—

தூரத்தில் ஒரு வில்லுவண்டி வருவதற்கு அடையாளமான சலங்கை சப்தம்...

அவன் 'சடக்'கென்று வாயிலிருந்து பீடியை எடுத்துத் தன் உள்ளங்காலில் தேய்த்து அணைத்து, அதைத் தன் முண்டாசுக்குள் திணித்து மறைக்கிறான்.

□□

சலங்... சலங்... சலங்...

ரோட்டில் இரட்டை மாடுகள் பூட்டிய ஒரு வில்லுவண்டி கம்பீரமாக வருகிறது. குப்பை வண்டி மாட்டை எதிர்நோக்குவது போல் வந்து நிற்கிறது. வண்டிக்குள் கைலி கட்டிய ஒரு தடித்த மனிதர். வயது 45 இருக்கும்.

அவர்: டே வீரபத்ரா!

அவன்: ஐயா!

குப்பை வண்டிக்காரன் வீரபத்திரன் வில்லு வண்டியை நோக்கி ஓடிவந்து கைகட்டிய வனாய்க் கூனிக்குறுகி நிற்கிறான்.

அவர்: இங்க என்னடா செய்யுற?

வீர: குப்பைக்கி தீ வைக்கிறேங்க மொதலாளி.

அவர் வாய் ஓயாது வெற்றிலை குதப்புகிறது. உடலை அலட்டாமல் எச்சிலை வெளியே துப்புகிறார்.

அவர்: இன்னிக்கிப் பொழுசாயம், கொத்தனார வரச் சொல்லிருக்கேன்'டா. நம்ப வூட்டுக் கக்கூஸை இடிச்சுக் கட்டணும். அசிங்கமாக் கெடக்குதுல்ல? ஒரு தோட்டியும் நின்னாத்தான் கொத்தன் வருவேன்னான். நீயும் வந்து நில்லுடா. சொல்றது தெரியுதா?

வீர: சரிங்க மொதலாளி.

சலங்... சலங்... சலங்...
சலங்கை மாடுகள் கர்வத்துடன் நகர்கின்றன.

□□

அண்மைக் காட்சியாக—

குப்பை வண்டி மாட்டின் முகம். கண்களில் நீர் வழிய... வாயில் நுரை வழிய... சலங்கை சப்தம் தூரத்தில் நகர்ந்து நகர்ந்து கரைகிறது.

□□

வீரபத்திரன் முன்போல அந்தப் பீடியைப் பற்ற வைத்து நெஞ்சு நிரம்பப் புகையை உறிஞ்சி, வானத்தை வெறித்து வாயைத் திறக்கிறான். புகை சுருள்சுருளாய் எழுந்து நெளிகிறது.

அவன் முகம் அண்மையில் நெருங்கி அசையாக் காட்சியாக (freezing)—
பின்னணியாய் ஒரு குரல்—

குரல்: உன் வாய் புகைகிறதே, உன் வயிறு எரியவில்லையா?... (எதிரொலி போல) வயிறு எரியவில்லையா? ... வயிறு எரியவில்லையா? ... வயிறு எரியவில்லையா?...

3

அண்மைக் காட்சியாக, ஒரு எடுப்புக் கக்கூஸ் (dry-latrine)... ஒரு இரும்பு அகப்பை மலத்தை வாரி ஒரு தட்டில் அள்ள, சாம்பல் புகை போல் பரவுகிறது...

காட்சி நகரும் போது—

அவள் ஒரு தோட்டிப் பெண். வயது 45 இருக்கும். (அது ஊருக்குள் ஒரு தெரு.) அவள் அருகில் ஒரு மலவண்டி நிற்கிறது. தட்டில் அள்ளிய மலத்தை அந்த வண்டியில் தட்டுகிருள்.

வண்டி ‘கிறீச்’சிட்டு உருள்கிறது. அடுத்த சுவரில் தெரியும் மலக்குழிக்கு நேராக வண்டி நிற்கிறது.

குழியை மறைத்துத் தொங்கும் துருப்பிடித்த தகர மூடியைத் தூக்கிச் சாத்தி விட்டு— தட்டையும் அகப்பையையும் எடுத்து ... முன் போலவே அதே மாதிரி...

சாம்பல் பறக்க...

□□

ஆவி பறக்க...

(அண்மைக் காட்சியாக) ஒரு சோற்றுப் பானை... அதிலிருந்து ஒரு அலுமினிய அகப்பை சோற்றை அள்ளித் தட்டில் போடுகிறது.

காட்சி எட்டத்தில் நகர—

ஒரு குடிசையின் உட்புறம்,

அதே கக்கூஸ் அள்ளும் பெண், சோறு போட்டுக் கொண்டிருக்கிருள். அவள் எதிரே ஓலைத் தடுக்கில் 18 வயது இளைஞன் (அவள் மகன்?) அமர்ந்திருக்கிருன். படித்தவன் போலத் தோற்றம். அவள் சோறு வழிப்பதையே வெறித்துப் பார்த்தவாறிருக்கிருன். அவன் முகத்தில் (அண்மைக் காட்சி) எதையோ நினைத்துப் பார்ப்பவன் போல ஒரு பாவம்...


○○○ அந்தப் பழைய காட்சி—
எடுப்புக் கக்கூஸ்...
அந்த இரும்பு அகப்பை...
சாம்பலுடன் மலத்தை வாரி...○○○

அவன் முகத்தில்—
அருவருப்பு! ஆதங்கம்! எரிச்சல்!

அவன்: ஆத்தா! இனிமேலிக்கி நீ வேலைக்கு போகாதே!

அவள் அகப்பைக்கையுடன் திரும்பி அவனை ஆச்சர்யத்துடன் பார்க்கிருள். அவள் முகத்தில் சுடுசோற்றின் ஆவி பரவுகிறது...
இதுவே அசையாக் காட்சியாக (freezing), பின்னணியாய் ஒரு குரல்—

குரல்: உன் மகனே உன்னை அருவருப்பாய்ப் பார்க்கிருனே, ஏன்? யோசி! (எதிரொலி) யோசி... யோசி... யோசி...



4

ஒரு டீக்கடை பாய்லர் புகைமூச்சு விடுகிறது.

டீக்கடை மைனர் லாவகமாய்க் கையுயர்த்தி டீ ஆற்றுகிறுன்.

அத்தக் கடை ஊர்க்கோடியில், பஸ் போகும் தார் ரோட்டை ஒட்டி அமைந்திருக்கிறது. தார் ரோட்டில் ஒரு சாக்கடை வண்டி வருகிறது.

அந்த வண்டியோட்டி ஒரு கிழத்தோட்டி. வயது 60-க்கு மேல் இருக்கலாம். வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு அந்தக் கிழவன் மெல்ல மெல்ல நடந்து டீக்கடை முன்ஞல் வந்து நிற்கிருன்.

மைனர்: யாருடா, சங்கிலியா?

தோட்டி: (சங்கிலி) ஆமா எசமான்.

மைனர்: என்னடா, சாயா குடிக்க சில்லரை கெடைச்சு தாக்கும்?

சங்கிலி: ஆமா எசமான்.

மைனர்: போ. ஒங் கிளாஸை எடுத்துட்டு வா.


அவன் அந்த அனுமதியைக் கொண்டாடுபவன் போலக் குதித்தோடி, ஒதுக்கமாய் ஒரு கம்பி வளையில் தொங்கும் அழுக்கேறிய கண்ணுடி டம்ளர்களுள் ஒன்றை எடுத்து வந்து நீட்டி, காசை மேஜை மீது வைக்கிருன்.

சந்தோஷிக்கும் முகத்தோடு அவன் நீட்டிய கண்ணுடி டம்ளரில் ஆவி பரவ, டீ விழும் காட்சி...

இதுவே அசையாக் காட்சியாக (freezing)—

பின்ஞெலியாய் ஒரு குரல்—

குரல்: உனக்கு என்றைக்குத்தான் ரோஷம் வரும்? (எதிரொலி) ரோஷம் வரும்?... ரோஷம் வரும்?... ரோஷம் வரும்?...



5

மயானம்.

விடியலுக்கு முந்திய இருட்டு.

பின்னணியாய், தூ ர த் து க் காக்கைகளின் ஓசை...

ஒரு சிதை முற்றிலுமாக எரிந்து சாம்பலாகிக் கிடக்க, அந்த வெட்டியான் நீண்ட கம்பினை ஊன்றி அதோ மெல்ல நடந்து போய்க்கொண் டிருக்கிறான்.

அவன்முகத்தில் சிரமத்தின் அடையாளம் இல்லை. தன் தொழிலை நியாயப்படுத்தும் முகபாவம்...

□□

அந்த மங்கிய விடியலில் ஒரு நீரோடைத் துறையில், வண்ணான் ஒருவன் து ணி வெளுப்பது நிழலுருவமாய்த் தெரிகிறது. பக்கத்துப் பு ல் வெளியில் ஒரு கழுதை மேய்ந்தவாறு தும்மிக் கொள்கிறது.

அங் கே வந்த வெட்டியான், கரையோர ஈர மணலை எடுத்துக் 'கரகர'வென்று பல் தேய்க்கிறான்.

கறுப்பேறிய பற்களில் (அண்மைக்காட்சி) மணல் உராயும் காட்சி...

□□

கரிப்பிடித்த மண்சட்டியை (அண்மைக் காட்சி) ஒரு பெண்ணின் கரம் 'கர கர' வென்று தேய்த்

துத் துலக்குவது தெரிகிறது. அந்தக் கரங்களில் குலுங்கும் கண்ணாடி வளைகள்... காட்சி நகர—

அவள் நன்றாகவே தெரிகிறாள். வயது, மிஞ்சிப் போனாலும் 18-க்கு மேல் இராது. அளவாய் மெலிந்து ஒசிந்த திரேகம். குழந்தை முகம். அதைத் தொட்டுச் சுகங்காணும் கூந்தல் முகப்பு...

ஒரு கூரை தாழ்ந்த குடிசைக்கு முன்னால் விசால மான பொட்டல் வெளி. அங்கே சட்டிபானை களைத் துலக்கிக் கொண்டிருக்கிறாள் அவள். துலக்கும் கை முன்னும் பின்னும் அசைவதால் வளையல்கள் சிணுங்குகின்றன...

அது ஒரு சேரி.

விடிகாலை வெளிச்சம்.

சற்றுத் தூரத்தில் யாரோ ஒரு முதியவர் பாடுவது கேட்கிறது. அவரே அதை ரசித்து ரசித்துப் பாடுகிறார் என்பதற்கு அடையாளமாய் அந்தப் பாடல் ஒவ்வோர் எழுத்தாய் நின்று நின்று நிதானமாய் ஒலிக்கிறது.

பாடல்: ஈச்சங் குருத்துப் போலே—ஏ பொண்ணே
இடை சிறுத்த சிவத்தப் புள்ளே... இந்த
எட்டுப்பன மட்ட போலே—ஏ பொண்ணே
வளையு தம்மா ஒங்கூந்த...ல்!

அவள் ஏதோ சிந்தனையில் பானைகளைத் துலக்கிக் கொண்டிருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சம் தள்ளி, மூன்று கற்களால் ஆன அடுப்பில் வெந்நீர் தயாராகிக் கொண்டிருக்கிறது. அவள் குடிசைக்குள்ளிருந்து ஒரு சிறுவனின் அழுகுரல் விட்டு விட்டுக் கேட்கிறது. அதை அவள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

பக்கத்துக் குடிசை வாசலில், அந்த கக்கூஸ்காரி (3-வது அத்தியாயத்தில் அறிமுகமானவள்) அமர்ந்திருக்கிறாள். அவள் குமட்டில் வெற்றிலை

ஒதுக்கியிருப்பது துருத்திக் கொண்டு தெரி கிறது. நெற்றிப் பொட்டை அழுத்திப் பிடித்த வாறு உட்கார்ந்திருக்கிருள்.
மீண்டும் அந்த வயோதிகக் குரல்—

பாடல்: —ஏ புள்ள நா,
காளங் கண்ட காணே மிண்டு—நா
கரைநெடுகத் தேடி வர... நீ
விறகு வெட்டப் போறே னிண்டு—ஏ பொண்ணே நீ
வேலீருக ஓடி வா மா...

அவள் இப்போது பானைகளைக் கழுவி ஒதுங்க வைத்துவிட்டு, வெந்நீர் அடுப்புக்கு முன்வந்து குந்தி, எரியும் தீயைச் சரிசெய்கிருள். பக்கத் துக் குடிசைக்காரி இவளைக் கவனிக்கிருள்.

அவள்: ஏண்டி குஞ்சரம். புள்ள அழுவுருனே, அமத்தேன்.

இவள்: (குஞ்சரம்) ஆங்...கெடக்கு வீம்பய புள்ள! விடிஞ்சி விடியாம அதுக்கு அவிச்ச கெழங்கு வேணுமாம். அப்பன் தேடிக் குடுக்குருன்ல? அதனுல கேக்குது! கழுத, வக்கத்த கழுத!

அவள்: புள்ளய வய்யாத குஞ்சரம். அது என்ன செய்யிம், பாவம்! தலையெழுத்துக்குத் தலையச் செரைச்சாப் போயிடுமா? என்னமோ, ஒந் தலையில மட்டும் மொட்டையா எழுதிருக்கான். வயித்தில புள்ளயக் குடுத்துட்டுப் போனவன் இன்ன கடவுல இருக் கான்னு தெரியல...

குஞ்: தெரிஞ்சாப் போயிக் கூட்டியாரப் போறியாக்கும் அய்த்தே?

அவள்: ஆங், அது என்ன அப்படிச் சொல்றே? என்னிக்-காவது ஒரு நாளிக்கி ஒங்கிட்ட வராமயா போப் போருன்?

குஞ்: ஆமா, அவன் வரலேன்னு தான் நா' அழுதுக் கிட்டிருக்கேன்.

'சடக்' என்று ஒரு விறகுக் குச்சியை முறித்து

அடுப்பில் திணிக்கிருள்.

□□

வெந்நீர் 'தளதள' வென்று கொதிக்கிறது...
பின்னணியில் முன்பு பாடிய அதே குரல்—

பாடல்: செம்பூல சிலே எழுதி... ஏ பொண்ணே
சிவத்தப் புள்ள பேரெழுதி—இப்ப
வம்புல தாலி கட்டி...ஏ பொண்ணே
நம்ம வாழுறது எந்த விதம்...?

ஆத்திரம் தோய்ந்த குஞ்சரத்தின் முகம்... உதடுகளே ஒட்டி மஞ்சளாய் அரும்பிய பூனே ரோமங்களில் முத்து முத்தாய் வேர்வைகள்...

□□

அந்த கக்கூஸ்காரி தலேயைப் பிடித்தவாறு முனங்கிக்கொள்கிருள்.

அவள்: காலங் காத்தாலயே பொலவரு ஆரம்பிச்சுட்டாரு... ஹாங்!

அருகே நெளிந்து வளேந்தோடும் சாக்கடையில் சில பன்றிக் குட்டிகள் குடைந்து ஜலக்கிரீடை செய்கின்றன.

அப்போது வெட்டியான் தண்டுகால் ஊன்றி தளர்ந்த நடையோடு அங்கே வருகிருன்.

அவள்: அண்ணே, இப்பத்தான் வாரீயலா?

அவன் நின்று நிதானித்து அவளேத் தன் இடுக்கிய கண்களால் பார்க்கிருன்.

வெட்டி: ஆரு... செவப்பியா?

அவள்: (செவப்பி) ஆமா'ண்ணே.

வெட்டி: இன்னும் வேலேக்குப் போவலே?

செவப்பி: ந்தா போவணும். மண்டக்குத்துத் தாங்கல!

வெட்டி: ஒம் புள்ளய வேல வெட்டிக்கு அனுப்புற'தானே?

செவப்பி: இதுக்கு மேலயும் படிக்கணுங்கிருன்'ணே!

வெட்டி: காலேசிக்கி மேல என்ன படிப்பு, கழுதப்படிப்பு! நாலு காசு சம்பாரிக்க வாணும்?

செவப்பி: நாம சொன்ஞ கேக்குருஞ? நம்ப பஞ்சாத்து போர்டாப்சில பெரசண்ட்ஐயாகிட்டச்சொன்ஞக்க, இவம்படிப்புக்கு மேஸ்திரி வேல கூட குடுப்பாக.

இப்போது அவள் குடிசைக்குள்ளிருந்து அவள் மகனின் குரல்—

குரல்: வாய மூடு!

□□

குடிசைக்குள்—

கிழிந்த பாயில், அழுக்குப் போர்வை தோளில் வழிந்து பாயில் பரவ, அவன் உட்கார்ந்திருக் கிருன். அவன் கண்களில் பூளை பூத்து முகம் கடுகடுத்திருக்கிறது.

அவன்: தெருக்காட்ல கக்கூஸ் அள்றது ஒன்னேடதாஞ போவட்டும் ஆத்தா.

செவப்பி: ஒன்ன கக்கூஸ் அள்ளச்சொல்லலேடா என்ராசா. மேஸ்திரி வேலேன்ஞ— கக்கூஸ்காரிங்க, குப்ப வண்டிக்காரங்க, சாக்கட வண்டிக்காரங்க எல் லாரையும் கட்டி மேய்க்கற வேல! சும்மாவா? ஹக்காங்!

அவன்: ஆமா, கட்டி மேய்க்கிற வேல. அதுக்கு, பன்னி மேய்க்கிற வேலேக்குப் போவட்டுமா?

□□

(அண்மைக் காட்சியாக) செவப்பியின் முகம். அவள் எதையோ நினைத்துப் பார்ப்பது போன்ற முகபாவம்...

○○○பரந்த சாக்கடைத் தேக்கம். பாசம் பிடித்துக் கறுத்த தண்ணீர்... வேலிக் கருவை மரங்கள் அங்கும் இங்குமாக... நான்கைந்து பன்றிக் குட்டிகள். அவள் மகன் அவற்றை மேய்க்கும் தோரணையில் நிற்கிறுன்.

திடீரென்று 4 பன்றிகளாயிருந்த இடத்தில் 10 பன்றிகள்... 20 பன்றிகள்... 40 பன்றிகள்... 80... 100... 200... ஒரே பன்றி மயமாக... ○○○

செவப்பியின் முகம் ஆனந்தத்தால் மலர்கிறது. பரவசத்துடன்—

செவ: தனக்கோடி! பன்னி மேச்சாலும் நல்ல சம்பாத்தியந் தான்'டா! இப்படித் தான் நம்ப...

அவன்: (ஆத்திரத்துடன்) ஆத்தா!

அவள் வாய் வெற்றிலை மெல்லுவதை நிறுத்துகிறது. அவள் மூக்கு மேல் விரல் படர்ந்து ஆச்சர்ய அபிநயம் காட்டுகிறது. ஓரிரு விஞடிகள் மௌனம்...

அவன்: (தனக்கோடி) ஊர்ல எங்கூட சண்டைக்கு வர்ரவன்க எல்லாம் என்ஞ இதுவாப் பேசுருன்க தெரியுமா ஒனக்கு? எங்க வூட்டுப் பீ அள்றவ மகன் தானடா'ங்கிருன்க!

□□

'தள தள' வென்று வெந்நீர் கொதிக்கிறது.

□□

குஞ்சரம் இன்னும் அந்த அடுப்புக்கு முன்ஞல் தான் உட்கார்ந்திருக்கிருள்.
குடிசைக்குள்ளிருந்து அந்தக்கிழ வெட்டியான் ஒட்டுக் கோவணத்துடன் வருகிருன்—குளிக்கத் தயாரானவன் போல. (அவன் குஞ்சரத்தின் தகப்பஞக இருக்கவேண்டும்.)

வெட்டி: ந்தா! சுடுதண்ணி வையின்ஞ, இப்படிக் கொதிக்க வைக்கிறியே?

அவள் கனவிலிருந்து விழிப்பவள் போல, பரபரப் புடன் நெருப்பை இழுத்து நூர்க்கிருள்.

வெட்டி: நொண்ணன் வீரவத்ரன் எங்க? வேலேக்கிப் போயிட்டாஞ?

குஞ்: ம்.

அவள் மெல்ல நகர்ந்து குடிசைக்குள் போகிருள்.

வெட்டி: நேத்திக்கி ராவுத்தரு எசமான் ரெம்ப கோவிச்சிட் டாரு! அவரு வயல குந்தக்கேடு பண்ருப்பல, எட்டியே பாக்குருனில்லியாம்! இட்பிடி ஈட்டிக்குப் பூட்டியா நடந்தான்ஞ, எருதாவுக்கு இவன ஆரு சீண்டுவாக? இவனுக்கு வேற வேல என்ன'ங் கறேன்? காத்தால குப்ப வண்டி அடிச்சான்ஞ, மத்தியானம் ஆசர் குடுக்குறது தான, அப்புறம் என்ன செய்யிருன்? செரைச்சுக் குமிக்கிருனே?

அவள் இப்போது வெளியே வந்து, கழுவி வைத்த பானைகளே ஒவ்வொன்ருக எடுக்கிருள்.

வெட்டி: நீயும் அவரு வூட்டுக்குப் போறதில்லியாமே? அவு கள நயந்துக்கிட்டாத் தான புள்ள நாம பொழைக் கலாம். அட, புத்தி கெட்டபய புள்ளேகளா!

குஞ்சரம் குனிந்த நிலேயில் திரும்பி அவரைப் பரிதாபமாகப் பார்க்கிருள்.

பின்னணியில் விஞேதமான தபேலா இசை... திரையில் அலேயலேயாய்க் கோடுகள்... காட்சி மாறுகிறது— (கார்ட்டூன் காட்சி)

யாரோ ஒரு பெரிய மனிதர். அவர் காலடியில் ஒரு நாய். அது கடிக்க வருகிறது...

அவர் ஒரு எலும்புத்துண்டை விட்டெறிகிறுர். அந்த நாய் வாலை ஆட்டுகிறது. வேகமாய்... இன்னும் வேகமாய் ஆட்டுகிறது...

அதே தபேலா இசையில்...
காட்சி பழைய படி—
குஞ்சரத்தின் முகம்... அவரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறுள் அவள். இப்போது பக்கத்துக் குடிசையிலிருந்து செவப்பியின் குரல்—

குரல்: அடீ குஞ்சரம்...!

குஞ்: ஓய்!

குரல்: கொஞ்சம் இப்படி வந்துட்டுப் போ.



6

ஒரு வசதியான வீட்டின் கொல்லைப்புறக் கதவு... (வீட்டின் உட்புறமிருந்து பார்ப்பதுபோல் காட்சி) அந்தக் கதவு இப்போது திறக்கிறது.

குஞ்சரம் அங்கே எட்டிப் பார்க்கிறுள். ஒரு புதிய இடத்தை ஆராய்வது போலப் பார்வை...

□□

அது அந்த வீட்டின் பின் கட்டு. ஓரிரண்டு தென்னம்பிள்ளைகளும் கிணறும் கழிப்பறையும் இத்யாதி அம்சங்களும் கொண்ட ஒரு கொல்லை.

ஒரு ஓரமாய் அந்த வீட்டு எஜமானி என்று கருதத்தக்க ஒரு பெண் (வயது 32) மூன்று கல் அடுப்பில் நெல் அவித்துக் கொண்டிருக்கிறாள். அவள் முகமும் அவிகிறது...

பனை ஓலையும் மட்டையுமாய் எரிந்து அந்த அடுப்பு ஒரு கறுப்பு சிவப்புக் கொடி போல் புகையும் நெருப்புமாய்த் தெரிகிறது. பக்கத்தில் ஒரு சிறுவன். (அவள் மகனாக இருக்கலாம்) தென்னங் கன்றுகளைப் பிய்த்து விளையாடிக்கொண்டிருக்கிறான். கண்டிப்பில்லை! செல்லப் பிள்ளை...

□□

குஞ்சரம் மலவாலி சகிதமாய் உள்ளே நுழைகிறாள். இதைக் கண்டதும் அந்தப் பெண் அதிசயமாய் முகஞ்சுளித்து—

அவள்: யாருடி'து புதுசா? அவ வரலியா?

குஞ்: அதுக்கு மண்டக்குத்து. அதனால என்னை அனுப்பிச்சிச்சு. நாளைக்கு வரும்.

அவள்: (கர்வத்துடன்) ம். ம்.

குஞ்: (தயங்கியவாறு) கக்கூஸ் எதுங்க?

அவள்: கண்ணு தெரியல? அந்தா இருக்கு பாரு.

□□

இப்போது அந்த வீட்டுக்குள்ளிருந்து கொல்லைக்கு வரும் வாசலில் ஓர் இளைஞன் (வயது 20-க்குள்) நிற்கிறான். பனியனும் வேஷ்டியுமாக... தோளில் ஒரு டர்க்கி டவல்... வாயில் நுரை வடியும் டூத் பிரஷ்... கண்ணில் கனிவு வழியும் பார்வை...

□□

குஞ்சரம் கக்கூஸிலிருந்த ஒரு பிளாஸ்டிக் வாலியையும் துடைப்பத்தையும் எடுத்துக்கொண்டு வெளியே வருகிறாள். ஒரு வினாடி நின்று அவனை

யும் அந்தக் கொல்லையையும் நோட்டமிட்டவள், மறுவிஞடி விடுவிடுவென்று கிணற்றடிக்கு நகர்ந்து, ராட்டையில் மாட்டியிருக்கும் வாலியைக் கிணற்றுக்குள் போட்டுக் கயிற்றைப் பிடிக்கிருள்.

அதை இப்போது தான் கவனித்த அந்த எஜமானி—

அவள்: அடீ அடீ சண்டாளி! என்ன காரியண்டி பண்ணே?

புயலென எழுந்து அடுப்பில் எரிந்து கொண்டிருக்கும் ஒரு பனை மட்டையை எடுத்துக்கொண்டு அவளை நோக்கி ஓடி, அதே வேகத்தில் தீக்கனியும் மட்டையால் அவள் தொடையில் 'மடார் மடார்' என்று அறைகிருள்.

சேலை கருகிப் புகைய, குஞ்சரம் வேதனையைச் சகித்து நெளிய, வாலிக்கயிறு அவள் பிடியிலிருந்து நழுவ, ராட்டை 'படபட' வென்று சுழல, வாலி கிணற்றில் 'தொம்' மென்று விழுந்து அதிர்கிறது!

□□

அந்த இளைஞனும் அதிர்கிருன்...

□□

அவள்: ஒனக்கு அறிவிருக்காடி. தண்ணி வேணுன்ஞ எங்கிட்ட கேக்குற தானே? ஒங் கையால வாலியத் தொட்டுட்டியேடி, பற முண்ட!

குஞ்: எனக்குத் தெரியாதும்மா...

அவள்: தெரியாம ஏண்டி இந்த வேலைக்கு வர்ரே, அவுசாரி!

குஞ்சரம் ரோஷத்தை மென்று விழுங்குகிருள். அவள் பார்வை தொடையருகே தன் புடவையில் விழுந்து விட்ட ஓட்டையில்...கவலையோடு...

அவள்: வெலகுடி சிறுக்கி. எறைச்சுக் குடுக்குறேன். என்னமோ பட்டுச்சேலே வீணுப் போனுப்பல தான் மாஞ்சு மாஞ்சு மருகுரு!

□□

அந்த இளைஞனின் முகத்தில் ஆத்திரம் மௌன மாய்க் கசிகிறது... ஏதோ ஒரு முடிவுக்கு வந்த வன் போல் உள்ளே திரும்பிப் போகிருன்.

□□

வீட்டுக்குள் ஓர் அறையில்—
அவன் ஒரு பீரோவைத் திறந்து ஒரு புடவையை எடுத்துக்கொண்டு பீரோவை மூடுகிருன்.

□□

குஞ்சரம் கக்கூஸைத் துடைப்பத்தால் தேய்த்துக் கழுவி சுத்தம் செய்துகொண்டிருக்கிருள்.

சேலே ஒட்டையில் அவள் தொடை... ஜன்னலில் திருட்டுத்தனமாய் எட்டிப்பார்க்கும் கன்னிப் பெண் போலக் கவர்ச்சியாய் அசைகிறது...

அவள் கழுவி முடித்துவிட்டு, மலவாளியைத் தூக்கிக் கொண்டு, கொல்லே வாசல் கதவு வழியாக வெளியே வந்து, அந்த வீட்டை ஒட்டித் திரும்பும் குறுகிய சந்தில் நுழையும்போது—

அங்கே அவன் நிற்கிருன். அந்த இரண்டு வீடு களுக்கும் இடைவெளியாய் உண்டான அந்த மூன்றடி அகலமுடைய சந்தில்தான் அவள் வருவாள் என்பதைத் தெரிந்து வந்தவன் போல் அங்கே நிற்கிருன். ஒரு கையில் டூத் பிரஷ். மறுகையில் சேலே. சேலேயை நீட்டியவாறே...

அவள் மலவாளியைப் பின்னுக்குத் தள்ளி மறைத்து நாகரிகமாய் நிற்கிருள்— போக வழி கேட்பவள் போல.

வெள்ளே நுரை அவன் வாயை அடைத்திருக் கிறது. அதில் ஒரு வெள்ளேப் புன்னகை...

அவள் இமைகள் படபடக்கின்றன...

'இதை வாங்கிக்க' என்ற அர்த்தத்தில் அவன் கண்கள்...

'வேண்டாங்க' என்பன போல் அவளின் துடிக்கும் உதடுகள்...

'பரவால்ல வாங்கிக்க'— வாலிபக் கண்களின் வற்புறுத்தல்...

அவளின் பெரிய விழிகள் நாணத்தை வென்று நன்றியோடு அவனைச் சந்திக்கின்றன. அந்த ஒரு கணப் பார்வையில் தன்மானம் மின்னலாய்த் தெறிக்கிறது. மறுகணம்—

அவள் தொடை தெரியும் புடவை ஓட்டையை ஒயிலாக மறைத்தவளாய், மான் போலத் துள்ளி அவனைக் கடந்து ஓடுகிறாள்.

□□

அதோ அவள் ஓடிக்கொண்டிருக்கிறாள். அந்தக் குறுகிய சந்தில் கலைடாஸ்கோப் சித்திரமாய்... சந்தின் மறுமுனையில், பெரிய தெருவில் திரும்பி மறைகிறாள்.


□□

அவன் பிரமை பிடித்தவன் போல, அவள் போன திசையையே வெறித்துப் பார்த்து நிற்கிறான். பிறகு, அவளுக்காகத் 'திருடி' வந்த அந்தச் சேலையை முகத்துக்கு நேரே தூக்கி வெறிக்கிறான். அதில்—

அந்த 'எஜமானி'யின் முகம் தெரிய...

'ப்த்தூ!'

வெறுப்போடு நுரையைத் துப்புகிறான். அது தீப்பற்றி எரிகிறது!



7

தீச்சட்டியைத் தலையில் வைத்து ஆடுகிறான் ஒருவன். அது சேரி. இரவு நேரம்...

கருப்பணசாமித் தெய்வத்தின் முன்னால்—
உருமி மேளத்தின் ஏக்கப் புலம்பல்... நையாண்டி நாதஸ்வரத்தின் கூச்சல்...

□□

அந்த இசை சன்னமாய்ப் பின்னணியில் கேட்டுக் கொண்டிருக்க, குஞ்சரம் குடிசைக்குள் படுத்திருக்கிறாள். அவளின் பெரிய கண்களை முழுதுமாய் மூடத் தெரியாத இமைகள் இப்போது திறந்தே கிடக்கின்றன. பக்கத்தில் மினுக்கிடும் முட்டைச் சிமிழி விளக்கின் சுடர் அவள் கருவிழிக்குள் பிரதிபலிக்கிறது...

அவளருகே அவள் மகன் (வயது 3) கால் பரப்பித் தூங்கிக் கொண்டிருக்கிறான். அவள் ஏதோ நினைவில் நகத்தைக் கடிக்கிறாள்... நெஞ்சை அசைத்து ஒரு பெருமூச்சு...

□□

அந்தக் குடிசைக்கு வெளியே—
வேப்ப மரத்தடியில், கயிற்றுக் கட்டிலில் வீரபத்திரன் மல்லாந்து படுத்திருக்கிறான். கீழே பக்கத்து விளக்குக் கம்பத்து வெளிச்சத்தில், செவப்பி வசதியாகக் காலை நீட்டி வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறாள்.

செவ: ஏ வீரவத்ரா! சமுத்ராயி தான் சமஞ்சுட்டாளே, அவ கழுத்துல முடிச்சப் போட்டு என்னிக்கி'யா கூட்டியாரப் போறே?

அவன் செருமியவாறு புரண்டு படுக்கிறான்.

செவ: சாமப்பயிரும் சக்கிலியப் பொண்ணும் சமஞ்சாத் தெரியுங்கிருப்பல, அவளுக்கென்ன, வெள்ளரிப் பிஞ்சு கெணக்கா இருக்கா!

அவன் உடம்பை நெளித்து முதுகைச் சொறி கிறான்.

செவ: ஒசரத்துக்கு ஒசரம், சத்திக்கு சத்தி! (புகையிலை யால் வாய் ஓரத்தைத் துடைத்து அதையே வாய்க் குள் திணித்தவாறு) அடுத்த பய வந்து கொத்திட் டுப் போறதுக்குள்ள முந்திக்கவாணும்? என்னமோ சொன்னுப்பல... காத்திருந்தவன் பொண்டாட்டிய நேத்து வந்தவன் கொண்டுபோனுங்கற கதையா வுல ஆயிடும்!

வீர: ஒறக்கம் வருது அய்த்தே.

செவ: நீ— சொன்னது இருக்க சொரையப் புடுங்கு. நாங் கேக்குறதுக்குப் பதிலச் சொல்லுவியா... ஒனக்கும் வயசாகுது. நாலாம் பேரோட அஞ்சாம்பேரா, பொக்குத் தக்குண்டு முடிக்கறத வுட்டுப்புட்டு இப் படியே தள்ளிக்கிட்டுப் போனு...?

அவன் கையைத் தலைக்கு முட்டுக்கொடுத்து நிமிர்கிறான்.

வீர: அய்த்தே. குஞ்சரம் இப்படி மூளி கணக்கா இருக்கையில, நா' கண்ணுலங் கட்டிக்கிட்டா நல்லாருக்குமா? வாணும் அய்த்தே.

□□

குஞ்சரத்தின் கலங்கிய கண்கள்...

□□

தீச்சட்டியில் 'குபு குபு' வென்று நெருப்பு... உருமிக் கொட்டின் ஏக்கம்... நையாண்டி நாதஸ்வரத்தின் கூச்சல்...



8

ஒரு பெரிய வீட்டின் முன் ஹால்.

இரண்டாவது காட்சியில், வில்லு வண்டியில் பார்த்த பெரிய மனிதர் பனியனும் கைலியுமாக ஈஸி சேரில் சாய்ந்திருக்கிறார். மூக்கில் புகை வருகிறது. வாயில் வெற்றிலை அசைகிறது. கையில் பீடி புகைகிறது.

□□

வெளியே, அந்த வீட்டு வாசலில்—

கழுங்கு ராவுத்தர்
ஊராட்சித் தலைவர்

என்ற பெயர்ப் பலகை...
அந்த வீட்டையொட்டித் தெருவோரமாய் சிமிண்டில் கட்டிய சாக்கடைக் கால்வாயில் படிந்துள்ள மணலை ஒரு தகரத்தால் வழித்தெடுத்து, தெருவில் நிறுத்திய குப்பை வண்டியில் தட்டுகிறான் வீரபத்திரன். பிறகு தலைப்பாகையை அவிழ்த்து, கையின் ஈரத்தைத் துடைத்துக் கக்கத்தில் இடுக்கியவாறு அந்த வீட்டு வாசலை நெருங்கி—

வீர: மொதலாளி.

□□

உள்ளே—

அந்தப் பெரிய மனிதர்(கழுங்கு ராவுத்தர்)வாயில் நிரம்பிய வெற்றிலை எச்சிலை ரத்தம் கக்குவது போல் பனிக்கத்தில் துப்பிவிட்டு நிமிர்கிறார்.

ராவுத்: யார்ரா அவன்?

□□

வெளியே—

வீர: நாந்தானுங்க. வீரபத்திரன்!

உள்ளிருந்து ராவுத்தரின் குரல்—

குரல்: ஒம்மர ஒன் அப்பங்கிட்டச் சொல்லிவுட்டு வெத்தல பாக்கு வச்சு அழைக்கணுமோ, ஏண்டா கழுதைக் குப் பொறந்த பயலே!

அவர் பேசியவாறே எழுந்து வாசலுக்கு வருகிறார்.

ராவுத்: நாத்தாங்கால்ல குப்ப அடிச்சியே, அதுக்குப் பெறகு என்ன செத்தா போனே, ஆங்? புழுதி பொரட்டணுமே, அத யாருடா செய்றது? நானா?

வீர: நாளைக்கு முடிச்சிடுறேன் மொதலாளி.

ராவுத்: நகந்து நில்லுடா, மூத்திரம் நாறுது. எழவு!

முகஞ்சுளித்து எச்சிலைக் காறி வெளியே துப்பு கிறார். இப்போது அவர் முகம் மட்டும் சில விநாடிகளுக்கு அசையாக் காட்சியாக (freezing), பின்னொலியாய் (கிணற்றிலிருந்து பேசுவது போல) யார் குரலோ—

குரல்: ஒங்க மூத்திரந்தானே? ஒங்க மூத்திரந்தானே? ஒங்க மூத்திரந்தானே?...

ராவுத்: தேதி பொறக்கவும் பஞ்சாத்து போர்டுல சம்பளத் துக்கு வாரீல? அந்த மாதிரி வேலையும் இருக்க மானா?

அவன் தலையைச் சொறிந்து கொள்கிறான்.

ராவுத்: நாளைக்காவது யாவுகமாப் பாத்துத் தொலை!

வீர: சரிங்க மொதலாளி.

ராவுத்: ஒந் தங்கச்சி குஞ்சரத்த பொழுசாயமா வரச் சொல்லு. பெருநா வருதுடா. வூட்ட நூலாம்பட அடிச்சி கழுவி வுடணும். சொல்றது தெரியுதா?

வீர: சரிங்க மொதலாளி.

ராவுத்: அப்ப... நாளைக்கி புழுதி பொரட்ட மாரு. பெருநா முடியட்டும். மக்யா நாளு அத முடிச்சிடு.

வீர: சரிங்க மொதலாளி. (தயங்கி) மொதலாளி ... வந்து...

வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே 'சொல்லு' என்ற அர்த்தத்தில் அவனைப் பார்க்கிறார்.

வீர: மொதலாளி கிட்ட ரொம்ப நாளா ஒன்னு கேக்கணும்னு இருந்தேனுங்க. அயத்துப்போச்சு! (தலை குனிந்து) எந் தங்கச்சி வாழா வெட்டியா இருக்குதுங்க! மொதலாளி நீங்க மனசு வச்சு, நம்ப வூட்ல தாப்பா ஒரு வேல போட்டுக் குடுத்தீங்கன்னா...

□□

மத்தளம் உருட்டும் பின்னணி இசை...

ராவுத்தர் வெற்றிலை குதப்புகிறார். அவர் விழிகள் ஏதோ நினைவில் உருள்கின்றன...

□□

வீர: சம்பளம் அது இதுன்னு ஒன்னும் உண்டெனக் குடுக்க வாணாங்க மொதலாளி. ஏதோ ஒங்க வூட்டுப் புள்ள கண்க்காப் பாத்துக்கிட்டாப் போதுங்க.

□□

ராவுத்தரின் வாய் வெற்றிலையை ஒரு தாளகதியில் குதப்புகிறது...

□□

வீர: மாடு கண்டுக்குத் தண்ணி வய்க்க வெண்ணி வய்க்க, எல்லா வேலையும் நல்லாப் பாத்துக்கு வாங்க. ஏதோ அவ வவுத்தக் கழுவிக்கிருவா. பொழுது போனாப்லயும் இருக்கும். வூட்ல சும்மா இருந்தாக்க, எங்கூட வம்பு சண்டைக்கு வாரா மொதலாளி.

ராவுத்தரின் கண்களில் ஒருவிதச் சிரிப்பு ... வெற்றிலை குதப்பியவாறே அவனைப் பார்க்கிறார். சம்மதம் தந்துவிட்டதற்கு அடையாளமான தலையசைப்பு...

வீரபத்திரனின் முகம் நன்றிப் பெருக்கில் துடிக்கிறது... வினோதமான தபேலா இசை... திரையில் அலையலையாய்க் கோடுகள்... காட்சி மாறுகிறது— (கார்ட்டூன் காட்சி)

ஒரு குரங்கு. அதன் கையில் ஒரு தராசு.

இரண்டு பூனைகள் ஒரு பெரிய பால் கட்டியுடன் அந்தக் குரங்கை நோக்கி வருகின்றன...



9

பொழுதடையும் நேரம்.

வெட்டியான் குடிசை. குஞ்சரம் குடிசை வாசலில் அமர்ந்து முட்டைச் சிமிழி விளக்கின்

கரிப்பிடித்த சிமிழியைக் கழற்றித் துடைத்துக் கொண்டிருக்கிருள். தீக்குச்சியைக் கிழித்து விளக்கேற்றும் போது—

வீரபத்திரன் வருகிருன். அவன் கையில் முண்டாசுத் துண்டில் ஒரு முடிச்சு கனமாய்த் தொங்குகிறது.

வீர: ந்தா, அரிசி. பொங்கி வையி. குளிச்சிட்டு வர்ரேன்.

அவள் அந்தச் சிமிழியை இன்னும் பளபளப்பேற்றித் துடைத்துக்கொண்டிருக்கிருள். விளக்கின் சுடர் காற்றில் துடிக்கிறது.

அவன் போவதற்குத் திரும்பியவன், ஏதோ நினைவில் நின்று—

வீர: ந்தா பாரு. ராவுத்தரு மொதலாளி கிட்டச் சொல்லிருக்கேன். நாளேலிருந்து அவுக வூட்ல தான் ஒனக்கு வேல! மொதலாளி சரி'னிட்டாரு. என்ன? நாளேலிருந்து அங்கே போயிரு.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்கிருள்.

வீர: சீவக்கா இருந்துச்சே, மிச்சம் இருக்கா?

குஞ்: தலே முழுகப் போறியா?

வீர: ஆமா.

குஞ்: சீவக்கா இல்லே.

அவன் அவளே ஒரு விஞடி உற்றுப் பார்க்கிருன். மறுவிஞடி, திரும்பி வெளியே கயிற்றுக்கொடியில் தொங்கும் ஒரு துண்டை இழுத்து உருவிக் கொண்டு நடக்கிருன்.

□□

அந்தச் சேரியின் ஆரம்பத்தில் களத்துமேட்டுப்

பொட்டலையொட்டி உள்ள குளத்தில் அவன் முங்கி முங்கிக் குளித்துக் கொண்டிருக்கிறுன்...

□□

தொடை வரை தெரியும்படி துண்டை இடையில் கட்டி, ஈரம் பிழிந்த காக்கி ட்ரவுசரைக் கையில் ஏந்தியவனுய் அவன் குடிசைக்கு வரும்போது—

குடிசை வாசலில் ஒரு புதியவள்—சின்னஞ்சிறு குமரி— (முதுகுப்பக்கம் காட்சிக்குத் தெரிய) குந்தியிருக்கிருள். கூந்தலில் கதம்ப மலர்ச்சரம் தொங்குகிறது.

வீர: ஆரது?

அவள் இடை, நாணத்தால் நெளிகிறது.

வீர: அட, ஆரு'ங்கறேன்?

உள்ளிருந்து குஞ்சரத்தின் குரல்—

குரல்: ஆங், அவ தான் ந்த வூட்டுக்கு வரப் போறவ, சமுத்ராயி!

இப்போது வீரபத்திரனும் கொஞ்சம் நெளிகிருன்.

வீர: இத ஆரு உள்ள வுட்டது?

குஞ்சரம் அகப்பைக் கையுடன் வாசலுக்கு வந்து, பேசியவாறே குனிந்து வெளியே வருகிருள்.

குஞ்: ஏன், நாந் தான். என்னையத் தான் வூராவூட்டுக் குத் தொரத்தியடிக்கத் திட்டம் போட்டுட்டல? அப்பறம், ஒனக்குப் பொங்கிப் போட ஆளு வாணும்?

அவன் திருதிருவென்று விழிக்கிருன்.


குஞ்: ந்த பாரு. நேத்திக்கு ராத்திரி அய்த்தயும் நீயும் பேசிட்டிருந்தது எல்லாம் எங்காதுல வுழுந்துச்சு.

எனக்காக நீ ஒன்னும் கண்ணாலங் கட்டிக்காம இருக்க வாணும்.

அவன் தலையைச் சொறிகிறான். அந்தப் புதிய வள் எழுந்து நிற்கிறாள். தாழ்ந்த கூரையின் ஓலை அவள் மேனியழகை மறைக்க, பாவாடை யும் அதன் கீழே அவள் பாதங்களும்...

குஞ்: நீ சமுத்ராயியக் கட்டிக்க. ஒங் கண்ணாலத்துக் கப்பறந்தான் நா' எங்கியும் வேலிக்குப் போவேன் ஆமா. சொல்லிப்புட்டேன்.

அவள் குடிசைக்குள் நுழைந்து மறைகிறாள். அவன் சமுத்ராயியின் பக்கமாய்... வெட்கத் தோடு... மெல்ல... மெல்லத் திரும்பி...



10

கொல்லன் துருத்தியின் 'புஸ்' என்ற அனல் மூச்சு...

ஊர்க்கோடியில் தார் ரோட்டை ஒட்டி அமைந் துள்ள மைனரின் டீக்கடைக்குப் பக்கத்தில் ஆலமரத்து நிழலில் ஒரு கொல்லம்பட்டறை. ஆலமரத்தடியில் தனக்கோடியும், முன்பு 6-வது அத்தியாயத்தில் அறிமுகமான அந்த இளைஞனும் அமர்ந்திருக்கிறார்கள். பின்னணியில் கொல்ல னின் சம்மட்டியொலி ஒரு சீரான சங்கீதம் போலக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அவன்: (அந்த இளைஞன்) ஒங்க ஜாதில, கூசாம எதுக்கும் கையேந்துறீங்க பாரு, அது தான் ஒங்கள மட்டமா

ஆக்கிடுச்சு'ன்னு நா' நெனைக்கிறேன்.

தனக்கோடி தலைகவிழ்ந்திருக்கிறான்.

அவன்: அஃப் கோர்ஸ், ஒங்கள அப்படிக் கையேந்துற நெலைமைக்கு ஆக்கி வச்சிருந்தாங்க'ங்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பவும் ஏன் அந்த நெலைமைக்கு நாம ஒத்துப் போவணும்?...கவர்மெண்ட்ல ஒங்க ஜாதிக்கு மட்டும் அதிகபட்சமா ஸ்காலர்ஷிப் குடுக்கிறது கூட ஒருவிதத்தில பிச்சை தான்'னு சொல்லுவேன். உதவி செய்றதுன்னா அதையே ஒங்க அப்பா அம்மாவுக்கு சம்பளமாக் குடுக்கலாம் இல்லையா?

தனக்கோடி அவனை சந்தேகத்துடன் பார்க்கிறான்.

அவன்: என்ன பாக்குறே?

தனக்: ஒன்னுமில்ல... (மௌன இடைவெளிக்குப் பின்) நாளைக்கு ஒங்க வூட்டுக்கு என்னை சாப்பிட வரச் சொன்னியே, அதும் பிச்ச தானா?

அவன்: சேச்சே, இது ஃப்ரண்ஷிப்ல செய்றதுடா மடையா. அதையும் இதையும் குழப்பாதே.

தனக்கோடி ஒரு பயத்துடன் சிந்திக்கிறான்.

அவன்: அப்ப நாளைக்கு வாரீல?

தனக்கோடி முகத்தில் பீதிக்களை...

அவன்: என்னடா யோசனை?

தனக்: ம்ம்...?

அவன்: ங்க பாரு. இப்ப நா' சொல்றதுதான் முடிவு. நீ என்ன பண்றே, நாளைக் காலைல ஒம்பது ஒம்பதரைக்கெல்லாம் எங்க வூட்டுக்கு வந்திடுறே. நாம எப்படி காலேஜ் ஹாஸ்டல்ல ஒன்னா சாப்பிட்

டோமோ, அந்த மாதிரில, ஒரே பந்தில சாப்பிடு ரோம்! ஒக்கே—?

அவன் இன்னும் மனம் ஒப்பாதவனுய்...

தனக்: கங்காதரா... வாணுண்டா.

அவன்: (கங்காதரன்) ஏன்? ஏன்?

தனக்கோடி குழம்புகிருன். அவன் முகம் அண்மையில் நெருங்குகிறது...
விநோதமான தபேலா இசை... திரையில் அலை யலையாய்க் கோடுகள்... காட்சி மாறுகிறது—
(கார்ட்டூன் காட்சி)

ஒரு நரி. பக்கத்தில் ஒரு கொக்கு. இரண்டுக் கும் முன்னுல் இரண்டு தட்டுக்களில் உணவு.

நரி தட்டில் வாய் வைத்து உணவைத் தின் கிறது. கொக்கோ அப்படித் தின்ன முடியா மல் பரிதாபமாய்ப் பார்த்தவாறே நிற்கிறது...

காட்சி பழையபடி—

தனக்: டேய். சொன்னுக் கேளு... வாணும்!

கங்கா: எங்க சித்தியப் பத்தித் தான கவலைப்படுறே? அதெல்லாம் நா'ம் பாத்துக்கறேன். துணிஞ்சு எறங்கிட்டா எல்லாம் ஒத்துப்போயித் தான்'டா ஆகணும்! நம்ம ஊர என்னைக்குத் தான் மாத்த றது'ங்கறே? சொல்லு.

அமைதி.

தனக்கோடி கொஞ்சம் தெம்போடு நிமிர்ந்து—

தனக்: (தயங்கிய தொனியில்) ஒங்க அப்பா...?

கங்கா: அவரு தான் பக்காக் காந்தியவாதியாச்சே! நிச்சயம் இதப் பாராட்டுவாரு. யூ டோண்ட் வொரி.

□□

இந்த நேரம், பக்கத்து டீக்கடைக்கு அந்தப் பழைய கிழத் தோட்டி சங்கிலி வருகிறான். அவன் ஒதுக்கமாய் மூலையில் தொங்கும் 'துண்டு கிளாஸை' எடுத்துப் போய் டீ கேட்டு நீட்டு கிறான்.

□□

அதை இவர்கள் இருவரும் பார்த்து, ஒருவரை யொருவர் எதிர்நோக்க முடியாமல் பார்வை தாழ மௌனமாயிருக்கிறார்கள். பின்னணியில் கொல்லனின் சம்மட்டி ஒலி... அதோடு ஆலமரத் தில் மாலை நேரத்துப் பறவைகளின் ஆரவாரம்...

தனக்கோடி தரையைக் கீறிக் கோலம் போடு கிறான். அவன் தலை குனிந்திருக்கிறது.

தனக்: நா' ஒன்னு கேக்குறேன். இவ்வளவு பேசுற நீ, எங்க சேரிக்குள்ள என்னிக்காவது வந்திருக்கியா?

□□

ணங்... ணங்... ணங்...
கொல்லம்பட்டறை உலைநெருப்பின் முன்னால், அடிகல்லில் சம்மட்டி ஓங்கி ஓங்கி விழுகிறது.
ணங்... ணங்... ணங்...

□□

கங்காதரன் மிடறு விழுங்குகிறான்.

கங்: தனக்கோடி. நா' ஒங்க சேரிக்கு வர்ரேன்'டா. இத்தனை நாளா வரலேங்கறது... தப்பில்ல! வரல. அவ்வளவு தான், இனிம வர்ரேன்.

தனக்: நா'... ஏதும் தப்பா சொல்லிட்டேனா?

கங்: சேச்சே! வாட் ஸில்லி...

கொஞ்சம் மௌனம்.

கங்: நீ... அப்ப, நாளேக்கு எங்க வீட்டுக்கு வர்ரே! நாளேக்கு அக்டோபர் ரெண்டு. நாம காந்தி ஜெயந்தி கொண்டாடுரேும். மறந்துடாதே.


சொல்லியவாறே எழுகிருன். தனக்கோடியும் எழுந்து நிற்கிருன். ஆலமரத்துப் பறவைகள் 'காச்சுப் பூச்'சென்று உற்சாகமாய் ஆரவாரிக் கின்றன.

தனக்: சரி. நா' வர்ரேன்.

கங்: ம்.

தனக்கோடி அந்தத் தார் ரோட்டைக் குறுக்கா கக் கடந்து எதிரே தெரியும் காட்டுப்பாதையில் இறங்கி நடக்கிருன். ஒரு பன்றி வாலே ஆட்டிக் கொண்டு அவன் பின் ஓடுகிறது.

பாதையோரத்தில் நிற்கும் பனேமரங்களுள் ஒன் றில் ஆணியடித்து மாட்டிய ஒரு துருப்பிடித்த தகரம்... அதில் 'அண்ணு நகர்' என்று சுண் ணும்பால் கிறுக்கிய எழுத்துக்கள்...



11

செவப்பியின் குடிசைக்குள்ளிருந்து அடுப்புப் புகை வாசல் வழியாக வெளியே வருகிறது...

கொஞ்சம் தள்ளி வேப்ப மரத்தையடுத்து நிற்கும் விளக்குக் கம்பத்து வெளிச்சத்தில், சேரிக் குழந்

தைகள் கூடி கோரஸாகப் பாடி ஆடிக்கொண் டிருக்கிறார்கள்.

கோரஸ்: தோ தோ நா(ய்)க்குட்டி
தொண்டியா வூட்டு நா(ய்)க்குட்டி
வீராயி தண்ணிக்கிப் போரு
வீட்டப்பாத்துக்க நா(ய்)க்குட்டி...

குஞ்சரம் குடிசைக்குள் விளக்குத் தெரிகிறது. செவப்பியின் குடிசையில் வெளிச்சம் அவ்வள வாக இல்லை. அடுப்பு எரியும் வெளிச்சம் மட்டும் லேசாகக் கசிகிறது. குடிசை முன், ஒரு முதிய வர் வருகிறார். வலக் கையில் கம்பூன்றி... இடக் கையில் ஒருமுழக் காகிதத்துடன்...

முதியவர்: செவப்பீ! ஏ செவப்பீ...!

உள்ளிருந்து தனக்கோடி வாசலுக்கு வருகிறான். அவன் கையில் அவித்த வேர்க்கடலையை வைத்து உடைத்துக் கொறித்தவாறிருக்கிறான்.

முதியவர்: எங்கடா, ஆத்தா?

தனக்: கம்மாக்கிப் போயிருக்கு.

முதியவர்: (முனகுவது போல்) கண்ட நேரம் நிண்ட நேரந் தான் இவளுக்கு... எல்லார்'ட்டியும் கைநாட்டு வாங்கியாச்சு, இவ ஒர்த்தி தான் பாக்கி. இனிம, இவளுக்கு'ன்னு ஒரு நட நடந்து வரணும், ஹ்உங்!

தனக்: என்ன தாத்தா?

முதியவர்: என்னவா? வந்து இம்புட்டு நேரமா நட்டமயே நிக்கிறேன், உக்காரு தாத்தா'ன்னு சொல்லக் காணோம். நீங்க'ல்லாம் இங்குலுசு படிச்சு என்னங் கடா பிரோசனம்? (அவரே உரிமை எடுத்துக் கொண்டு வாசலுக்கருகிலுள்ள மண்திண்டில் உட் கார்ந்து) யப்பாடியப்பாடியோவ்...குறுக்கு இத்துப் போச்சு. ம்... இம்புட்டொசரப் புள்ளக்கி, ஊர்ல என்ன சோலியாத்திரியிருக'ன்னு தெரியல, என்ன தாத்தா'ன்னு கேக்குறே, ஆங்? நீங்க'ல்லாம்

எப்படித் தான் நாளைக்கு ஐயாக்கமார் கிட்ட குப்ப கொட்டப் போறீகளோ, போ!

தனக்: (முகஞ் சுளித்து) குப்ப கொட்டவா?...

முதியவர்: (காகிதத்தை நீட்டி) ந்தா! படிச்சுப் பாரு. நம்ம சேரில போட்ருக்கற குடிசைகளுக்கெல்லாம் இன்னும் பட்டாக் குடுக்கல. கூடிய சீக்கிரமா, பட்டாக் குடுக்கணும்னு கலக்கிட்டரு எசமாங்களுக்கு மனு குடுக்குறோம், மனு! படிச்ச புள்ள, எழுதிருக்கிற வெகரம் சரிதானு'ன்னு பாத்து சொல்லு.

தனக்: (அதை வாங்காமல்) இந்த மனுவ நீங்க தானு குடுங்க. எங்களுக்கு வாணும். இன்னும் எத்தினி நாளக்கி இந்தச் சேரிலயே இருக்க? இன்னிக்குத் தான் கார்டு வந்துச்சு, எனக்கு எம்.பி.பி.எஸ்—ல எடங் கெடைச்சிருக்குன்னு! அப்படின்னு என்னு தெரியும்'ல? டாக்டருக்குப் படிக்கிற படிப்பு! நா'ம் பெரிய டாக்டரா வந்ததும், இந்த ஒருச்சாண் குடிசைல தான் வந்து படுத்துக்கப் போறேனுக்கும், போவியா?

முதியவர்: அட எலவே! (ரோஷத்தோடு எழுந்து) பேச்சப் பாரு பேச்ச! மெத்தப் படிச்சியோ பித்தாயங் கொண்டியோ'ன்னு, அகாதி'ல பேசுறுன் அகராதி! ஒங்கள்'லாம் படிக்க வச்சதே தப்புடா!

> **விடுவிடுவென்று மேனி நடுங்க நடக்கிறுர். பின்னணியில் முன்பு 5-வது அத்தியாயத்தில் ஒலித்தது போல் அந்த வயோதிகர் (புலவர்) குரல்—**

பாடல்: மானத்தில் பறக்குது பார் ஏரப்புளான் பட்சிகள் கூட்டம்
—அதப்
பாத்து நடுங்கி சப்பான் சருமன் டுப்பாக்கி வாரண்டோட
ஓடுருங்க ஓட்டம்... ஓடுருங்க ஓட்டம்!

> **தனக்கோடி, வாய் அசைபோட இன்னும் வாசலிலேயே நிற்கிருன். காட்சி அப்படியே நகர்ந்து, பக்கத்தில் பனைமரங்களையே வேலியாய்க் கொண்ட தோட்டத்தையும், அதனுள் ஒரு மூலேயில் தெரியும் குடிசையையும் நெருங்க... பின்**

னணியில் கொஞ்சங் கொஞ்சமாய் நெருங்கும் அந்த வயோதிகக் குரலில் இன்னொரு பாடல்—

பாடல்: மூட்ட முடிச்சக் கட்டுங்க
மூட்ட முடிச்சக் கட்டுங்க—நாதியத்த வெள்ளையர்களே...
நாட்ட வுட்டுப் புறப்பிடுங்கோ.

சண்ட சச்சரவில்லாமிருக்கணும்—சண்டாள வெள்ளையர்கள்
ஒத்துமையாத் தானிருக்கணும்
சண்ட சண்ட எண்டுருன்கோ—சப்பாஞ் சருமன்
மண்ட யொடைக்கிருன்கோ...

கப்பறக் குழிய வெட்டிக்
குப்பறப் படுக்கச் சொன்ன
எப்படிப்பொழைக்கிறதுங்கோ—நாதியத்த வெள்ளையர்களே
நாங்க எப்படிப் பொழைக்கிறதுங்கோ?



12

காந்தி படத்திற்கு மாலை போட்டிருக்கிருர்கள். அதன் அடியிலுள்ள ஸ்டாண்டில் குத்து விளக்கு எரிகிறது... ஊதுபத்தி புகைகிறது...

அது கங்காதரன் வீடு. முன் ஹால். இரண்டு பேர் சாப்பிடுவதற்குத் தயாராக இரண்டு வாழை இலைகளும், தட்டில் பலகாரங்களும் காத்திருக் கின்றன. கங்காதரன் வாசலுக்கும் ஹாலுக்கு மாய் அலைகிருன். அந்த நாகரிக மாது (அவன் சித்தி) ஈஸி சேரில் சாய்ந்தவாறு, துணியில் பின்னல் வேலை செய்துகொண்டிருக்கிருள். அவள் மகன் செல்லப்பிள்ளை விளையாடிக்கொண்டிருக் கிருன்.

சுவர்க்கடிகாரத்தில் மணி 9-40.

கங்: சித்தி! அப்பா சாப்பிட்டார்'ல?

அவள் உடனே பதில் சொல்லிவிடாமல், வேண்டு வென்றே சற்றுக் காலம் தாழ்த்தி—

அவள்: சாப்பிட்டார். (மௌன இடைவெளி) காலேல குளிச்சிட்டு சாப்பிட்டுப் போனவர்தான், என்னமோ, இவர் போகாட்டி ஊர்ல காந்தி ஜெயந்தி விழாவே கொண்டாட முடியாத மாதிரித் தான்...

□□

சுவரில் போட்டோ ஸ்டாண்டில் சாத்தியிருக்கும் காந்தி படம் அண்மையில் நெருங்க... அதில் மாலே அசைகிறது. குத்து விளக்கு எரிகிறது. ஊதுபத்தி புகைகிறது. காந்தி புன்னகைக்கிருர்...

அந்தப் படத்திற்கு மேலாக பிரேமிட்ட கண்ணுடியில் இப்போது ஒரு காட்சி (overlapping-ஆக) தெரிகிறது. கதர்ச்சட்டை அணிந்த ஒரு பெரிய மனிதர் (வயது 50) மைக் முன்ஞல் நின்று பேசுகிருர்.

அவர்: பாபுஜி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்த சேவை கொஞ்சநஞ்சமல்ல. ஜாதி வித்தியாசத்தை ஒழித்துக் கட்டுவதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சி மகத்தானது. அவருக்கு நாம் அஞ்சலி செலுத்துவோமாக. காந்தி நாமம் வாழ்க! வந்தே மாதரம்!

அந்தக் காட்சி மறைகிறது. காந்தி புன்னகைக்கிருர்...

□□

கடிகாரத்தில் மணி பத்தை நெருங்குகிறது.

கங்: (முனகுவது போல) ஒம்பதரைக்கெல்லாம் வந்திருடா'ன்னேன். இன்னுங் காணேம்...

அவள்: (உம்மஞ மூஞ்சியுடன்) யாரவன்?

கங்: ஒரு ஃப்ரண்டு.

அவள்: பிரண்டு'ணு, வெளியூரா?

கங்: உள்ளூரு தான்.

அவள்: நீ சொன்னியேன்னு செஞ்சு வச்சேன். எல்லாந் தண்டம்! அக்கம் பக்கத்தில் பாரு. இப்படித்தான் நடக்குதா? சித்தி'ன்ணு கொடுமைக்காரி'ன்னு பேரு. நாம ஈவுசாவா நடக்கறது யாருக்குப் புரியுது? ஒவ்வொருத்தி மாதிரி இருந்தாத் தெரியும்...

அவன் நிலைகொள்ளாமல் வாசலுக்கு வருகிறுன். தெருவை நோட்டமிட்டு—

கங்: ந்தா வந்துட்டான்!

□□

தெருவில் தனக்கோடி வேகுவேகென்று வந்து கொண்டிருக்கிறுன். வாசல்படிக்கு வந்ததும் நிற்கிறுன்.

கங்: வாடா.

தனக்: வரலாமில்ல?

கங்: அட, வாடா!

கையைப் பிடித்து இழுத்துச் செல்பவனைப் போல உள்ளே அழைத்துப் போகிறுன். அவள் அவனைப் பார்த்ததும் அதிர்ச்சியுறுகிறுள்.

கங்: உக்காரு. ஏன் இவ்வளவு லேட்டு?

தனக்: லேட்டாயிடுச்சு.

உட்கார்கிறுர்கள். மேலே காற்றுடி பரபரவென்று சுழல்கிறது. அவள் விழிகள் குத்திட்டு நிற் கின்றன...

அவள்: இருடா. நீ யாரு? கக்கூஸ்காரி மகந் தான?

கங் (குறுக்கிட்டு) ஆமா. அதுக்கென்ன?

அவள்: அதுக்கென்னவா? அடப்பாவி! என்ன கூத் து இது? நாசமாப் போறதுக்கா இப்படிலாம் பண்றே? இந்த தோஷத்தை நா' எங்க போயித் தொலைக்கிறது?...

□□

இப்போது, சற்று முன் மைக் முன்னால் பேசிய அந்தக் கதர்ச்சட்டைக்காரர் (கங்காதரனின் தந்தை) அந்த வீட்டு வாசலில் ஏறுகிறார். அவர் கையில் ஒரு அழகிய வாக்கிங் ஸ்டிக்!. படியேறியதும் செருப்பைக் கழற்றி—

அவர்: லக்ஷ்மி! கால் அலம்பத் தண்ணி கொண்டா.

□□

உள்ளே—
அவள் ஆத்திரம் பன்மடங்கு அதிகரிக்கிறது,

அவள்: ஐயோ. இங்க வந்து பாருங்க இந்த அநியாயத்தை! இதக் கேக்குறதுக்கு நாதியில்ல இந்த வூட்ல...

தனக்கோடி எழுந்து போகத் துடிக்கிறான். கங்காதரன் அவனை விரலால் அழுத்தித் தடுக்கிறான்,
பெரியவர் பரபரப்போடு உள்ளே நுழைகிறார்—
ஒரு கையில் வாக்கிங் ஸ்டிக்... மறுகையில் செருப்பு...

அவள்: நாயக் குளுப்பாட்டி நடுவூட்ல கொண்டுவந்தது மில்லாம, ஊட்டி உபசரிக்கிறாராம் ஒங்க செல்வப் புத்திரரு!

கங்: சித்தீ...!

அவன் கண்டனம் தெரிவிப்பது போல் அவளை

முறைக்கிருன். அவர் அவனை எரித்துவிடுவது போல் வெறிக்கிருர். பற்கள் நறநறக்க...

கங்: அப்பா! நீங்க காந்தியவாதி. நாஞ் செஞ்சது தப்பா? சொல்லுங்க.

அவரின் நடுங்கும் கரங்களில் செருப்பு... வாக்கிங் ஸ்டிக்... அவரின் கோபாவேசமான முகம் அண்மையில் நெருங்குகிறது. விநோதமான தபேலா இசை... திரையில் அலையலையாய்க் கோடுகள்... காட்சி மாறுகிறது— (கார்ட்டூன்)

ஒரு பசு. திடீரென்று, அந்தப் பசுவின் தோல் கழன்று விழுகிறது. இப்போது அது ஒரு புலியாகத் தெரிகிறது. உறுமிக் கொண்டு, பக்கத்தில் நிற்கும் ஒரு கறுத்த ஆட்டின் மீது பாய்கிறது!

காட்சி பழையபடி—

மேலே பரபரவென்று காற்ருடி... தரையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செருப்புகள்... இப்போது தனக்கோடி அங்கே இல்லை. கங்காதரன் ஆவேசமாய் நின்றுகொண்டிருக்கிருன். அந்தப் பெரியவருக்கு மூச்சு இரைக்கிறது.

கங்: ச்சே! நீங்க'ல்லாம் ஒரு காந்தியவாதி!

அவருக்கு இன்னும் மூச்சிரைக்கிறது.

கங்: காந்தி ஜெயந்தி கொண்டாடுறவங்க ஒரு ஹரிஜனோட சமபந்தி போஜனம் பண்ணுங்க'ன்னு கவர்னர் சொல்லிருக்காரே, அது உங்களுக்கு உறைக்கலே?

அவர்: ஹூங்! நா'ங் கவர்னரா இருந்தா, இதுக்கு மேலயும் சொல்வேன்'டா. அறிவுகெட்ட முண்டம்! சொல்றதெல்லாம் செயலுக்கு வந்திடுமா?

காந்தி படம்... காற்ருடி வேகத்தில் காந்தி படத்து மாலே கழன்று தரையில் விழுகிறது... குத்துவிளக்குச் சுடர் துடிக்கிறது... ஊதுபத்தி நாணல் போல் ஆடியவாறே புகைகிறது...

அவர்: ஆசாரத்துக்குப் பேரு போன குடும்பம்'டா இது. ஊரில் எனக்கு ஒரு கவுரவம் இருக்கு, அந்தஸ்து இருக்கு! அதக் கெடுக்கணும்னு தான் திட்டம் போட்டுட்டியா?

கங்: இப்ப என்ன கெட்டுப் போச்சு?

அவர்: அடி செருப்பாலே! படுவா. இன்னும் என்னடா நடக்கணும்...? பீ அள்றவனேயும் மூத்திரம் அள்ற வனேயும் வூட்டுக்குள்ள கூட்டியாந்து சோறு போடுறியே, இது தெரிஞ்சா, நாளேக்கு ஊர்ப் பெரியமனுஷன் எவண்டா இந்த வூட்டுக்குள்ளே நுழைவான்?

அவள்: நா' அப்பவே சொன்னேன், இவனப் படிக்க வைக்காதீங்க'ன்னு. கேட்டாத் தானே? இப்ப, அனுபவிங்க.

அவர்: நெஜந்தான்! எம்புத்திய செருப்பால அடிக்க ணும். தாயில்லாப்புள்ள படிக்கட்டுமேன்னு பாத்தா, கடைசிக்கி, பறப்புத்தி சக்கிலப் புத்தில்ல இருக்கு!

அவள்: பின்ன என்ன இருக்கும்? ரத்தம் ஒன்னு என் னவோ... இவன் அம்மா இருந்தா கேக்கலாம், யாருக்குடி பெத்தே'ன்னு!

கங்: (ஆத்திரம் பீறிட) சித்தீ!

பக்கத்தில் எரியும் குத்துவிளக்கை வெடுக் கென்று எடுத்து ஆவேசத்தோடு ஓங்குகிருன். அவள் குன்னிப் போய் நிற்கிருள். அவர் வாய் பிளந்து சிலேயாக... குத்துவிளக்குச் சுடர் அணைந்து புகைய...
அப்படியே ஒரு நிசப்தம்.

அவன் முகத்தில் முத்து முத்தாய் வேர்வை... மூக்கு மடல் விடைத்து விடைத்துத் துடிக்கிறது... ஆத்திரம் சற்று அடங்கியது போல, குத்துவிளக்கு கையிலிருந்து நழுவி விழுந்து 'நங்' கென்று ஓசையிட்டு உருள்கிறது,

அவருக்கு இப்போது உயிர் வருகிறது. இளம் மனைவியின் தவிப்பில் அவர் நெஞ்சு நெகிழ, ஓர் ஆண்மகனுய்த் தோரணை காட்டி—

அவர்: இவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சா? இனிம, ஒனக்கு இங்க எடங் கெடயாது!

□□

ஒரு ஸூட்கேஸ் 'சர்...' என்று பறந்து கங்காதரனின் காலடியில் வந்து விழுந்து, வழுக்கி வாசல் வழியாகத் தெருவில் போய் விழுகிறது!

□□

கொல்லன் உலையில் அனல் மூச்சு... அடிகல்லில் விழும் சம்மட்டி...

டாண்... டாண்... டாண்... dawn... dawn...

மைனரின் டீக்கடையில், வெளியே போடப்பட்டுள்ள பெஞ்சில் உட்கார்ந்திருக்கிறுன் கங்காதரன். அவன் காலடியில் அந்த ஸூட்கேஸ் கையில் பாதி குடித்த நிலையில் டீ கிளாஸ். அவன் பார்வை அந்தச் சேரிக்குப் போகும் பாதையையே வெறித்திருக்கிறது.

அங்கே—

'அண்ணு நகர்' என்று சுண்ணும்பால் கிறுக்கிய அந்தத் தகர போர்டு காற்றில் வளைந்து வளைந்து 'வா வா' என்று கையசைப்பது போல் ஆடுகிறது. பின்னணியில் காற்றின் ஓலம்... சிறுகச் சிறுக, அதுவே 'வா வா வா' என மாறி, கொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்துக் கடைசியில் ஒரு பாடலாகவே மாறுகிறது—

பாடல்: ஒளிபடைத்த கண்ணினய் — வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினய் — வா வா வா
தெளிவுபெற்ற மதியினய் — வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் —வா வா வா
எளிமைகண்டு இரங்குவாய் — வா வா வா
ஏறுபோல் நடையினய் — வா வா வா
ஒற்றுமைக்குள் உய்யவே நாடெல்லாம்
ஒருபெருஞ் செயல் செய்வாய் — வா வா வா

இந்தப் பாடல் பின்னணியில், கங்காதரன் உணர்ச்சிவயப்பட்டவனுய் அந்தப் பாதி டீயைக் குடிக்காமலேயே எழுந்து, டீ கிளாஸை மைனர் முன்னுல் வைத்துவிட்டுத் திரும்பி, ஸூட்கேஸைக் கையில் எடுக்கும் போது—

மைனர்: என்ன தம்பி, தூரமா?

கங்கா: ம்...? (திரும்பாமலேயே) இல்ல. பக்கந்தான்!

மறுபேச்சுக்கு இடம்வைக்காமல் விரைந்து நடக்கிருன். அப்போது—
டண்டண்டண்டண்... தூரத்து மணியோசை வேகமாய் நெருங்கி வருகிறது. அவன் தார் ரோட்டைக் கடக்க முனைகையில்—

ண்டண்டண்டண்டண்டண்டண்டண்டண்டண்டண்ட

வேகமாக வந்த தீயணைப்பு எஞ்சின் அவன் முன் குறுக்கே பாய்வது போல் கடந்து ஓடி மறைகிறது. அந்த ஒரு விஞடி நிதானித்தவன், மீண்டும் பழைய வேகத்தில் எட்டிநடைபோட்டு அந்தச் சேரிக்குப் போகும் பாதையில் இறங்கி நடக்கிருன்... ராணுவ நடைக்குரிய ட்ரம் ஓசை...

அதோ அவன் ஏறுபோல் நடந்து போய்க்கொண்டிருக்கிருன்...

இடைவேளை

கங்காதரன் கையில் ஸூட் கேஸுடன் அந்தக் காட்டுப்பாதையில் நடந்து போய்க்கொண்டிருக் கிருன். மத்தியான வெயில்...

□□

அந்தச்சேரியின் ஆரம்பத்திலுள்ள களத்து மேட் டுப் பொட்டலையொட்டி ஒரு ஆரம்பப்பாடசாலே. அதன் முன் உடைமரத்தின் நிழலில், மூன்று கல் அடுப்பில் கஞ்சி தயாராகிக் கொண்டிருக்கிறது. ஒரு சிறுமி தான் கஞ்சி காய்ச்சுகிருள். பக்கத்து நிழலில் கும்பலாகச் சேரிச் சிறுவர் சிறுமியர் அமர்ந்து கோரஸாகப் பாடம் படிக்கிருர்கள்.

ஒருவன்: எண்ணெழுத்து இகழேல்.

கோரஸ்: எண்ணெழுத்து இகழேல்.

ஒருவன்: ஏற்பது இகழ்ச்சி.

கஞ்சி காய்ச்சும் சிறுமி திரும்பி—

சிறுமி: கஞ்சி வெந்திருச்சு!

கோரஸ்: ஏற்பது...கஞ்சி! கஞ்சி! கஞ்சி! கஞ்சி...

பக்கத்து ஓட்டுக்கட்டடத்திலிருந்து வாத்தியார் வருகிருர். கோரஸ் தொடர்ந்து உற்சாகமாகவும் உரிமைக் குரலாகவும்—

கோரஸ்: கஞ்சி! கஞ்சி! கஞ்சி! கஞ்சி...

வாத்தி: டேலே! நிறுத்துங்கடா! வண்ணுன் ஆட்டுத் தலேக் கிப் பறந்த மாதிரி... கஞ்சி ஆறமாஞ? ராகம் பாடு ருன்களாம், ராகம்! ஏதாச்சும் சொல்லிக் குடுத்த பாட்டையாவது பாடித் தொலேங்க. டேலே மொக் கப்பிச்ச! நீ ஆரம்பிடா. அப்படியே ஒவ்வொருத்த னுப் பாடணும். சத்தம் வரக்கூடாது.

அவர் திரும்பி அந்த ஓட்டைக் கட்டடத்திற்குள் போய் மறைகிருர். களத்து மேட்டுப் பொட்டலில்

வண்டிப் பாதையை ஒட்டி ஒரு பெண் சாணி உருண்டை உருட்டி வரட்டி தட்டிக் கொண் டிருப்பது தெரிகிறது.

மொக்கப்பிச்சை எழுந்து கைகட்டி—

மொக்க: தட்டு நெறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதிப் பிட்டு
போட்டான் வாயில் கிட்டு
ம்...போட்டான் வாயில் கிட்டு...ம்...

ஒருவன்: ஒனக்குத் தெரியலடா. நா'ஞ் சொல்றேன்.

இப்போது, கும்பலில் எட்டு வயதுச் சிறுமியின் மடியில், ஒரு அலுமினியத் தட்டோடும் ஏக்கப் பார்வையோடும் அமர்ந்திருக்கும் மூன்று வயதுக் குழந்தையின் முகம் அண்மைக் காட்சியாய் நெருங்க...

குழந்தை: லட்டு'ஞ என்னுக்கா?

அக்கா: ச்சீ! சும்மா'ரு எனக்கென்ன தெரியும்? பாட்டுல வருது.

பக்கத்திலிருந்த சிறுவன்—

சிறுவன்: அய்யே... லட்டுத் தெரியாது? எங்கப்பு திரு விழாவ்ல வாங்கித் தந்துச்சு. 'ந்தா சாணி உருண்ட கெணக்கா உருண்டையா இருக்கும் இனிச்சுத் தொப்பளிக்கும்.

வாயில் நீர் வடிய அந்தக் குழந்தை இப்போது மெல்ல எழுந்து நடக்கிறது, அந்தச் சாணிக் குவியலை நோக்கி...அதன் அக்காவான சிறுமி, பாடுவதற்குத் தன் முறை வந்து விட்டதனல் எழுந்து பாடுகிருள்.

சிறுமி: டப்பா டப்பா வீரப்பா
எப்ப டப்பா கலியாணம்
மாசி பொறக்கட்டும்
மல்லியப்பூ பூக்கட்டும்

எம்ஜியார் சண்ட
பானுமதி கொண்ட
கொளத்தில கொக்கு
கோழிப்பிய நக்கு

எல்லோரும் பசியை மறந்து சிரிக்கிறார்கள்.

□□

அங்கே வந்த கங்காதரன் முகஞ்சுளித்து நிற்கிறான். அந்த வழியாகத்தான் பாதை. பக்கத்தில் சாணி உருண்டைக் குவியலை நெருங்கிய அந்தக் குழந்தை அவனைப் பார்த்ததும் யாசகப் புன்னகையோடு தன் பிஞ்சுக் கையேந்தி—

குழந்தை: ஐயா! காசு...

இதற்குள் அங்கே கஞ்சி பரிமாறப்பட, அந்த அக்காள் ஓடி வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு வரிசைக்கு ஓடுகிறாள்.

□□

அந்தப் பள்ளிக்கூடத்தில்— நம் நாட்டின் நாளைய தலைவர்கள் அந்தக் கஞ்சிக்காக முகம் இளித்து தட்டுக்களை ஏந்தி ஏந்தி— அவர்கள் பாடம் படிக்கிறார்கள்!

□□

கங்காதரன் சிந்தனையோடு நடக்கிறான்,

குளத்தங்கரையில் ஐந்தாறு பன்றிகள்... ஒரு சொறி நாய் இவனைப் பார்த்ததும் பயந்து தூரத்தில் போய் நின்று கொண்டு குரைப்பதற்காக யோசித்து உறுமுகிறது...

சேரித் தெருவில் பொறுமையாய் அசைந்து அசைந்து நடைபயிலும் ஒரு எருமை... நடந்த வாறே அது சாணம் போடுகிறது. அதன் பின்னால், சாணிக்கூடையுடன் நடக்கும் சிறுமி தன் இரு கைககளையும் மாட்டின் தொடைக்கு அருகே ஏந்தி சாணத்தைப் பிடிக்கிறாள். இது சில விநாடிகளுக்கு அசையாக் காட்சியாக (freezing), பின்னொலியாய் கங்காதரன் குரல்—

குரல்: இங்கே மனிதர்கள் மாட்டிடம் கூட யாசிக்கிறார்கள்!

கங்காதரன் நடக்கிறான். அவன் எதிரே வரும் ஒரு பெரியவர் நின்று அவனை உற்றுப்பார்க்கிறார்.

கங்: தனக்கோடி'ன்னு...காலேஜ்ல படிச்சானே, அவங்க வூட்டுக்குப் போகணும்...

அவர்: ஆரு... செவப்பி மவந்தானே?... இப்பிடியே போயி, பீச்சங்கைப் பக்கமாத் திரும்புங்க. (அவன் நகர்ந்தும், அவர் தொடர்ந்து குரல் உயர்த்தி) அது மின்னக்கி ஒரு வேப்பங்கண்டு நிக்கிம். அதான் கடோசி. அப்பறம் பொாலவரு தோட்டந்தான்...

அவன் போய்க்கொண்டிருக்கிறான்.

□□

மோகன ராகத்தில் ஒரு ஹம்மிங்... அண்மைக் காட்சியாக ஒரு கல்லுரலில் உலக்கை விழுகிறது. உள்ளே கிடக்கும் தானியம், தாளத்திற்கேற்பக் குதித்தாட உலக்கை குற்றுகிறது...
காட்சி எட்டத்தில் நகர—

குஞ்சரம் தன் குடிசைக்கு முன் உரலில் எதையோ குற்றிக்கொண்டிருக்கிறாள். ரவிக்கை இல்லாத மேனி. கண்டாங்கிப் புடவை. காண்போர் கண் தாங்கிப் புடவை... அன்று ஓட்டை விழுந்த அதே புடவை...
காட்சி இன்னும் எட்டத்தில் நகர—

கங்காதரன்! அவன் அங்கே வெகு நேரமாய் நிற்கிறான் போலும். அவன் பார்வை அவளில். அவள் பார்வை உரலில். அவள் கவனத்தை இழுப்பது எப்படி என்று இப்போது முயல்கிறான்.

கங்: ந்'தாங்க!

அவள் குற்றுவதை நிறுத்திவிட்டு முகம் திருப்பி அவனைப் பார்க்கிறாள். அவள் முகத்தில் 'ஓ... அவன்!' என்ற அதிசயம்... அதோடு 'ங்க'

மரியாதையில் முதன்முதலாய் அழைக்கப்படும் சுகத்தின் ஆனந்தம்... இன்னும் 'நம்மைத்தான் அழைத்தாளு?' என்ற சந்தேகம்...

குஞ்: ஆர?

கங்: உங்களத் தான்.

அவள் முகத்தில் பூரண பிரகாசம். விழி ஆட வில்லே. ஒரு சிலேபோல...
பின்னெலியாய், ''உங்களத்தான்''— ''உங்களத் தான்''— ''உங்களத்தான்''— என்று யாரோ அழைக்கும் குரல்கள்... ஒவ்வொரு 'உங்களேத் தான்' குரலுக்கும் அவள் ஒவ்வொரு 'ஜெர்க்'கில் அண்மைக் காட்சியாய் நெருங்கி நெருங்கி நெருங்கி...ஒவ்வொரு நெருங்கலின் போதும் அவள் ஒப்பனேயில் ஒரு அந்தஸ்துப் பரிணும மாற்றம்...

கையிலிருந்த உலக்கை மாயமாய் மறைகிறது— நவநாகரிக ஆடை— கழுத்திலும் கையிலும் நகைகள்— தலேயில் புதுவகை அலங்காரம்— இன்னும் புதிய புதிய ஆடம்பர அணிகலன்கள்... இப்படியே இன்னும்...

தொடர்ந்து ''உங்களத்தான்''— ''உங்களத் தான்'' குரல்கள்... முழுமையாய் அவள் நெருங்கித் தெரிகையில் ஒரு தேவதை போல் காட்சி தருகிருள், மறுவிஞடி, திடீரென்று காட்சி பின்னுக்குத் தள்ளப்பட—

பழைய குஞ்சரமாய் உலக்கையை உரலில் ஊன்றி நிற்கிருள்.

கங்: ந்த... தனக்கோடி வீடு?...


கனவிலிருந்து விழிப்பவள் போல அவள் இமை கள் படபடக்கின்றன.

குஞ்: ஓய்?

கங்: தனக்கோடி வீடு எது'ன்னு கேட்டேன்.

குஞ்: வீடா? குடிசை! ந்தா இதுதான். அய்த்தே... அய்த்தே... (முனகும் தொனியில்) அது இன்னும் வந்திருக்காதே, எலவு...

உலக்கையைக் கிடத்திவிட்டு, பக்கத்துக் குடிசைக்குள் நுழைந்து பார்த்துத் திரும்புகிருள். இதற்குள் அவள் குடிசைச் சுவரில் யாரோ ஒருவன் ஒரு சுவரொட்டியை ஒட்டுகிருன். சேரிச் சிறுவர்களின் கூட்டம்...



ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண

அளவோடு பெற்று
வளமோடு வாழ்க!

ஊராட்சி ஒன்றியம்.

குஞ்: டேல மருது!

அந்தக் கூட்டத்தில் புட்டம் தெரியக் கிழிந்த கால்சட்டை அணிந்த ஒரு சிறுவன் திரும்பிப் பார்க்கிருன். அந்தச் சுவரொட்டிக்காரன் நகர, அந்தக் கும்பல் அவனைப் பின் தொடர்கிறது. அந்தச் சிறுவன் (மருது) மட்டும் நிற்கிருன்.

குஞ்: ஒரு ஒட்டத்தில போயி, தோப்புல தனக்கோடி சீட்டு வெளையாடிட்டு இருக்கும், கையோட கூட்டியா.

மருது இணக்கமாய்த் தலையசைத்து நகர்கிருன்.

குஞ்: (குரலுயர்த்தி) ஆரோ வந்திருக்காக'ன்னு சொல்லுடோய். வெரசாப் போயிட்டு வா.

கங்காதரன் முகத்தில் குறுநகை... அவள், ஓர மாய்ச் சாத்தியிருக்கும் கயிற்றுக் கட்டிலை சிரமப் பட்டுத் தூக்கி வந்து வேப்ப மர நிழலில் போடு கிருள். ரவிக்கை இல்லாத மேனி. புடவையோ வழுகி அவளை வஞ்சிக்கப் பார்க்கிறது...கை சமாளிக்கிறது...

குஞ்: இப்படிக் குத்தவையிங்க.

அதில் அவன் உட்கார்கிருன். அவள் பரபரப் புடன் குடிசைக்குள் நுழைந்து—

□□

குடிசைக்குள்—
முகத்தில் நாணம் குழைய, கயிற்றுக் கொடியில் தொங்கும் ரவிக்கையை எடுத்து அவசர அவசர மாய் அணிந்துகொண்டு புடவையை இழுத்துச் சுற்றி இடுப்பில் செருகி வெளியே வருகிருள். பழையபடி உலக்கையை எடுத்துக் குற்றத் தொடங்க... பின்ஞெலியாய்ப் புலவர் பாடல்—

பாடல்: மெல்ல—ந—நல்ல'டந்து வேப்பங்காட்டுப் பாதை கூடி
கொல்ல வழி போற பெண்ணெ நில்லம்மா—இந்தக்
கைமரத்துப் பக்கம்வந்து சேதியச் சொல்லம்மா...இந்த
கைமரத்துப் பக்கம்வந்து சேதியச் சொல்லம்மா!

கங்: யார் பாடுறது?

குஞ்: (குற்றுவதை நிறுத்தி) ஓய்?

கங்: நல்லாப் பாடுருங்களே, யாரு'ன்னு கேட்டேன்.

குஞ்: அதுவா... பொலவரு! கொஞ்சம் இது. ('கிறுக்கு' என்பதற்கடையாளமாய் அபிநயம் காட்டுகிருள்.) ந்தா, பக்கத்து தோட்டத்தில தான் குடிசை. எங்க அவ்வா சொல்லும். அவருதான் இங்க மொத மொதல்ல வந்து குடிசை போட்டவராம்.

கங்: அவ்வா'ன்னு?

குஞ்: அப்பத்தா!

அவள் வெட்கத்தோடு மீண்டும் குற்றத் தொடங்குகிருள். அவள் சேலையில் அந்த ஓட்டையை இப்போது கவனிக்கிருன் அவன். ஓட்டை முன்னைக் காட்டிலும் பெரிதாயிருந்தாலும், அவள் கட்டியிருக்கும் முறையில் அங்கம் வெளியே தெரியாமல் உள் சுற்று மறைத்திருக்கிறது...

கங்காதரனின் முகத்தில் இரக்கம் கசிகிறது...

□□

அண்மைக் காட்சியாக அந்தச் சுவரொட்டி... 'அளவோடு பெற்று வளமோடு...' வரிகள்.

□□

தனக்கோடி அங்கே வருகிருன். ஆச்சர்ய முக பாவம்...பேச நாக்கு எழாத மௌன நிலை. கங்காதரனுக்கும் அதே நிலை. சில விஞடிகள்...

கங்: உக்காருடா.

தனக்கோடி அவனருகில் கட்டிலில் அமர்கிருன்.

கங்: காலைல நடந்த நிகழ்ச்சிக்கு...நா' ரொம்ப வருத்தப்படுறேன்'டா.

கொஞ்சம் மௌனம்.

தன: எனக்கு இப்படி ஏதாவது நடக்கும்'னு தெரியும். அதான் வேணு'ன்னேன். நீ கேக்கலே... பரவால்ல. நீ என்ன செய்வே... (ஒரு மௌன இடைவெளி) காத்தால ஒன்னு சொல்லணும்னு இருந்தேன். முடியல. அதான் இப்படி ஆயிடுச்சே! வந்து... எனக்கு மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ்ல அட்மிஷன் கெடச்சிருக்கு. நாளைக்கழிச்சுப் போவணும்.

கங்: ஓ...

கங்காதரன் எதையோ யோசிக்கிருன்.

கங்: ஒனக்கு அங்கே அட்மிஷன்... எனக்கு இங்கே அட்மிஷன்!

தனக்: என்ன சொல்றே?

கங்: தனக்கோடி. நா'... அப்பா'ட்ட சண்ட போட்டுட்டு வீட்ட விட்டே வந்துட்டேன்!

இப்போது தான் அவன், கங்காதரன் அருகில் உள்ள ஸூட்கேஸைக் கவனிக்கிருன்.

கங்: நா' இனிம இங்க தான் தங்கப் பேறேன்.

தனக்: இங்கயா!?!

கங்: ஆமா. இந்தச் சேரில! நாமெல்லாம் ஒன்ரு... ஒரே குடும்பமா இருக்கலாம்.

குஞ்: முழிச்சிட்டியா?

கங்காதரனும் தனக்கோடியும் அவள் பக்கம் திரும்பிப் பார்க்கிருர்கள்.

□□

அவள் குடிசை வாசலில், அவளின் மூன்று வயதுப் பையன் அம்மணமாக வந்து நின்று கொட்டாவி விட்டவாறே 'ஒண்ணுக்கு'ப் போகிருன். அவன் கையில் ஒரு தகரப் பொம்மை—இரண்டு சேவல்கள் ஒரு தட்டில் இரை சாப்பிடுவதுபோல. (கீழே உள்ள கைப்பிடியை நெறித்தால் சேவல்கள் மாறி மாறித் தட்டைக் கொத்தும்.) குஞ்சரம் உரலிலிருந்து தானியத்தைச் சுளகில் அள்ளிக் கொண்டிருக்கிருள். உரலைச் சுற்றிச் சிந்திய தானியத்தைக் கோழிகள் கொத்திப் பொருக்குகின்றன...

கங்: தனக்கோடி! நா' இன்னும் சாப்பிடல'டா.

தனக்கோடியின் முகம்... அதில்— ஆச்சர்யம்... தயக்கம்... கவலை...

தனக்: இங்க சாப்பிடுறேன்'கிறியா?

□□

அண்மைக் காட்சியாக, சிறுவனின் கையி லுள்ள சேவல் பொம்மை. இப்போது சேவல்கள் மாறி மாறித் தட்டைக் கொத்துகின்றன. இரண் டும் ஒரு தட்டில் இரை உண்பது மட்டும் காட்சியாக, பின்னெலியாய்—

குரல்-1: (கங்காதரன்) எங்க வூட்ல, நீ சாப்பிட வந்தே, அது நடக்கல. அதுக்குப் பதிலா ஒங்க வூட்ல, நா' சாப்பிடுறேன்! எங்கே சாப்பிட்டா என்ன, நாம ரெண்டு பேரும் ஒரு பந்தில சாப்பிடுறோம்!

குரல்-2: (தனக்கோடி) சாப்பாடு பிடிச்சிருக்கா?

குரல்-1: ஹூம்! சாப்பாடே ஒரு பிரச்சனையாஇருக்கறப்போ, அதில போயி பிடிச்சிருக்கு, பிடிக்கலேன்'னு பார்க் கறது, நம்ம நாட்டுக்கு ஒரு அதிகபட்சமான நாகரிகம்!

குரல்-2: ஏதாவது இப்படி உளர்ரது ஒனக்குப் பழக்கமாய்ப் போச்சு. பக்கத்தில புலவர்'னு ஒருத்தர் இருக்காரு. அவர் தான் ஒனக்கு சரியான ஜோடி. அவருக்கும் ஒன்னப் புடிக்கும்'னு நெனைக்கிறேன். அவர் கிட்ட ஒன்னக் கூட்டிட்டுப் போறேன்.

□□

புலவர் தோட்டம். ஒரு பக்கத்து மூலையில் தலா மரத்தோடு ஒரு கிணறு. எதிர் மூலையில் அவர் குடிசை. தனக்கோடியும் கங்காதரனும் இப்போது அங்கே வருகிறார்கள்.


குடிசையிலிருந்து பாடல் வெடிக்கிறது—

பாடல்: வெள்ளாங்கொ ளத்துப்பையன்
வேடிக்கைக் காராண்டி — அவன்
வெள்ள வேட்டி சொங்குக் காராண்டி — குங்குமாப்
பொட்டுக் காராண்டி — அவங்
குடுத்த கடன் கேக்கப் போன
குத்த வாராண்டி — எதுத்தா
வெட்ட வாராண்டி......!

குடிசையின் கூரை தாழ்ந்த முன் திண்ணையில் அவர் (வயது 60) தோரணக்கால் போட்டுச் சாய்ந்து படுத்திருக்கிறார். புருவத்தில் குத்திட்டு நிற்கும் ரோமங்கள். கூர்மையான பார்வை வாயையும் சேர்த்து வளைத்த மீசை. புதர்களுக்கு நடுவே நிற்கும் ஒற்றைப் பனைமரம் போல் அந்த மீசை மயிர்களுக்கிடையே ஒரு நீண்ட சுருட்டு. பார்த்தவுடனேயே கொஞ்சம் வித்யாசமானவர் எனப் புலப்படும் தோற்றம்.

வாயில் கடித்த சுருட்டு இருந்தவாறிருக்க, திடீர் திடீரென்று புகை மட்டும் 'புஸ்...புஸ்' என்று கிளம்புவது வேடிக்கையாக இருக்கிறது.

அவர் அவர்கள் வருவதைப் பார்க்கிறார். கண்களில் சிரிப்புத் துள்ளுகிறது. 'வாங்க வாங்க' என்ற அர்த்தத்தில் தலை அசைகிறது.



13

காலைச் சேவலின் கூவல்.

புலவர் குடிசைக்குள், கங்காதரன் அடுப்பில் சமையல் செய்கிறான். களிக் கிண்டுவது போல் தெரிகிறது. சட்டியை இறக்கி வைத்துவிட்டுத் துடுப்பையும், இன்னொரு காலிப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு கிணற்றுக்கு வரும் போது—

கிணற்றடியில்—

ஒரு புடவை திரை போல் மறைத்திருக்க, அந்தப்

பக்கம் யாரோ குளிக்கிறார்கள். அந்தப் புடவை குஞ்சரத்தின் கண்டாங்கி... கண்தாங்கிப் புடவை... அதே ஓட்டை! அதன் ஒரு முனை தலா மரத்தில். மறுமுனை தோட்டத்து வேலியாய் நிற்கும் பனை மரங்களுள் ஒன்றில்.

கங்காதரன் தயங்கி நிற்கிறான். புலவர் அந்தத் தோட்டத்தின் தூரத்து மூலையில் களை எடுத்துக் கொண்டிருப்பது தெரிகிறது...

□□

குஞ்சரம் தலாவில் நீர் இறைத்துக் குளிக்கிறாள். ஒரு பழைய வெள்ளை வேஷ்டியை மார்புவரை மறைத்துக்கட்டி, வாளி நீரை லாவகமாய்த் தூக்கித் தலை சிலுப்பி நீர் கொட்டிக் குளிக்கும் போது அவள், பாலாபிஷேகம் செய்யும் ஒரு செம்புச் சிலை போல...

கங்காதரன், புடவைக்குக் கீழே தெரியும் அந்தக் கால்களைக்கண்டு நெளிகிறான். தொண்டை யைச் செருமிக்கொள்கிறான்.

கங் : தண்ணி வேணும்.

குஞ் : ஓய் ?

கங் : தண்ணி வேணும்'னு சொன்னேன்.

குஞ் : பாத்திரங் குடுங்க. ஊத்துறேன்.

கங் : ந்தாங்க.

அவன் குனிந்து புடவைக்குக் கீழே அந்தப் பாத்திரத்தை வைத்து நிமிரும்போது அந்த ஓட்டை வழியாகக் காட்சி அவள் மேனியை பாதாதி கேசமாக — பிறகு கேசாதி பாதமாக — ஊஞ்சலாட்டியது போல் காட்டி ஓய்கிறது. அவன் மிடறு விழுங்குகிறான்.

கங் : புடவைய இப்படி சுவரு மாதிரி கட்டிக்கணுமா ?

குஞ் : ஒடம்பில கட்டல. அதான் மரத்தில கட்டிருக்கேன்.

கங் : மரத்துக்குப் புடவை எதுக்கு? அப்ப, இது பொம்பள மரமா?

குஞ் : ஓய்?

கங் : ஒன்னில்ல... பொம்பள, புடவை கட்டியே குளிக்க லாமே'ன்னு சொன்னேன்.

குஞ் : கட்டிக்குளிக்கலாம். அப்பறம், குளிச்சிட்டுக் கட்டிக் கறதுக்கு?

அவள் தலாக்கம்பு பிடித்துக் கைமாற்றிக் கைமாற்றி நீர் இறைக்கிருள்.
இந்தப்பக்கம் அவன் கவலையோடு சிந்திக்கிருன்.

கங் : அப்ப, ஒங்க கிட்ட இருக்கிறது இது ஒன்னுதாஞ?

அவள் 'ஆமாம்' என்ற அர்த்தத்தில் தலையசைக் கிருள்.
இந்தப் பக்கம் அவன் —

கங் : என்ன, பதிலக் காணோம்?

குஞ் : நா' ஆமா'ன்னு தலையசைச்சேனே!

கங் : ஒ...

கங்காதரனின் முகம் நெருங்க, பின்னொலியாய் அவன் மனக்குரல் —

குரல் : நம்ம சம்பாஷணை பூர்த்தியாகணும்னு, நீ தலை யசைச்சதை நா'ம் பாக்கணும் அதனால... இப்படிப் பார்க்கறது ஒன்னுந் தப்பில்ல.

பக்கவாட்டில் விழி சுழற்றிப் புலவரை நோட்ட மிட்டவாறே திருட்டுத்தனமாய்ப் புடவை ஓட்டை வழியாகப் பார்க்கிருன் அவன்.

□□

அவளோ, அந்த ஓட்டையைக் கவனியாது, அவன் புடவைக்கு மேல் தலைநீட்டிப் பார்ப்பானே என்று எதிர்பார்ப்பவளாய்த் தலை நிமிர்ந்தவாறே, வாளி நீரைப் பாத்திரத்தில் ஊற்றுகிறாள். நீர் பாத்திரத்தில் விழாமல், விலகிக் கீழே வழிந்தோடுகிறது...

குஞ் : (நிமிர்ந்தவாறே) ஊத்திட்டேன்.

கங் : ம்.

அவன் பார்வை எங்கோ இருக்க, கை தாழ்த்தி அந்தக் காலிப் பாத்திரத்தை நீர் இருப்பதாய் நினைத்து ஜாக்கிரதையுடன் எடுத்துக்கொண்டு போகிறான்.
இப்போது அவள், அந்த ஓட்டை வழியாக அவன் போவதைப் பார்க்கிறாள். அந்தப் பெரிய கருவிழிகளுள் ஒன்று அண்மையில் திரை நிரம்ப நெருங்க ... அதிலே ஆசை ... தாபம் ...
திடீரென்று ஒரு தபேலா இசை ... திரையில் அலையலையாய்க் கோடுகள்... (கார்ட்டூன் காட்சி)

திராட்சைத் தோட்டம். ஒரு நரி. தாவித் தாவிக் குதிக்கிறது. எட்டவில்லை.
தாவித் ... தாவித் ... தாவித் ...

களையெடுத்துக் கொண்டிருந்த புலவர் திடீரென்று உச்ச ஸ்தாயியில் பாடுகிறார்.

புலவர் : சவ்வாரி வண்டிக்காரா(ன்)ய்... ஏ சாமி ஒரு
சலங்க போட்ட... ஐயா, மாட்டுக்காரா(ன்)ய்!
இப்ப நா' என்ன குத்தஞ் செய்தே னய்யா...
எம்முகத்த நீங்க, ஏ றுட்டுத்தான்... ஐயா, பாரு மய்யா...ய்!

□□

குஞ்சரத்தின் நனைந்த முகம்... அதே பார்வை... அதே தாபம்... மீண்டும் அந்தத் தபேலா இசை. மீண்டும் அந்த கார்ட்டூன் காட்சி...


திராட்சைத் தோட்டத்தில் அந்த நரி இப்போது முன்னேவிட வேகமாய்த் தாவுகிறது. இன்னும் வேகமாய்... வேகமாய்...

புலவர் தொடர்ந்து பாடுகிருர்—

புலவர் : ஏ பெண்ணே ஒம் முகத்த நா'
ஏறுட்டுப் பாப்பேன் பெ்ண்ணே...
நா' எடுத்து முத்த(ம்)... தருவேன் பெண்ணே...!—இப்ப
அரம்மன வாச சவைக்கட்டு... ஏ புள்ள நா'
அவசரமா... போயீ... வாரே...ன்!

□□

குஞ்சரத்தின் கண்களில் ஒரு புதுக் கவர்ச்சி!



14

கழுங்கு ராவுத்தரின் வாயிலுள்ள பீடியிலிருந்து புகை, பாம்பு போல் நெளிந்து ஆடுகிறது...

□□

அண்மைக் காட்சியாக, ஏரின் கொழுமுனே தரையை ஆழமாகக் கீற... காட்சி நகரும் போது—

வீரபத்திரன் நிலத்தை உழுதுகொண்டிருக்கிருன். வரப்பில் குடையைப் பிடித்துக்கொண்டு நிற்கிருர் ராவுத்தர். தூரத்தில் பம்ப்செட் கட்டடம் கண்ணில் படுகிறது. ராவுத்தர் அடிக்கடி திரும்பி வரப்புப் பாதையைப் பார்த்துக்கொள்கிருர்.

ராவுத் : ஏண்டா வீரபத்ரா! குஞ்சரத்துட்ட சொன்னியா? சாப்பாடு எடுத்துட்டு வரணுமேடா.

வீர : சொன்னேன்'ங்க மெதலாளி, இப்ப வருவா.

ராவுத் : (சலிப்புடன்) எங்கடா வந்தா! பசிக்குது...

வீர : புழுதி பொரட்றது தானுங்களே! இதுக்கு ஏன் நீங்க வீணுல வெயில்ல நிக்கிறீங்க? நீங்க வேண்ணு வூட்டுக்குப் போங்க மொதலாளி.

ராவுத் : அட மூர்தாரு! இதுக்காகவா நிக்கிறேன்னு பாத்தே? மம்மரான் வயலுக்குத் தண்ணி வுடணுண் டான்! வந்தான்ஞ, பம்பைத் தெறந்து வுட்டு, டயங் குறிக்கணுமே, நீயா செய்வே?

□□

டிபன் கேரியரைத் தூக்கிக் கொண்டு குஞ்சரம் வயல் வெளியில் வந்துகொண்டிருக்கிருள். பக்கத்து வேலியில் நிற்கும் தட்டாரப் பூச்சியைப் பிடிக்க ஒரு சிறுவன் மெதுவாய் அடியெடுத்து நடக்கிருன். அதைப் பார்த்துப் பொருமைப்படும் ஒரு சிறுமி, கையை மெதுவாகத் தட்டிக் கொண்டு பாடுகிருள்.

சிறுமி : தட்டான் தட்டான் டோஸ்
தாலி யறுப்பான் டோஸ்
ஒன்ன ஒருத்தன் புடிக்க வாரான்
ஓடி ஒளிஞ்சுக் கோ!

அந்தச் சிறுவனின் கை (அண்மைக் காட்சியாக) தட்டானை நெருங்க... தட்டான் வேறிடத்திற்குப் பறந்து தப்பிக்கத் தெரியாமல், முள்ளிலிருந்து எழுந்து சிறகைப் படபடத்துவிட்டு, மீண்டும் அதே முள்ளில் போய் அமர்கிறது!

□□

ராவுத் : (முகம் மலர) ந்தா வந்துட்டா!

குஞ்சரம் ஒரு மயில்போல் ஒசிந்து வரப்பில் வந்து கொண்டிருக்கிருள்.

ராவுத் : வெத்தல பாக்கு வாங்கியாந்தியா புள்ள?

அவள் 'இல்லை' என்று தலையசைக்கிருள்.

ராவுத் : பேப்பய மவளே! நெனைச்சேன்... வூட்ல இருக்கிற வள்களுக்கும் யோசனை கெடையாது. சரி சரி. பம்ப் செட்ல கொண்டு வையி. டே வீரபத்ரா! ஒரு ஓட்டத்தில போயி, ந்தா (சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் எடுத்து) நீ ஒரு சாயா குடிச்சிட்டு, செய்யது பீடி ஒரு கட்டு வாங்கிக்க. வெத்தல பாக்கும் வாங்கிட்டு சட்'டுனு வா.

மாடு பூட்டிய ஏரை அப்படியே விட்டுவிட்டு வீரபத்திரன் ரூபாயை வாங்கிக் கொண்டு வரப்பில் ஓடுகிருன்.

ராவுத் : (குரலுயர்த்தி) டேலேய்! வெத்தலய தாள்'ல மடிச்சு வாங்கிட்டு வாடோய். ஒங் கையில வச்சுக்கிட்டு வந்தியிளு, அப்புறம் அத நீ தான் போட்டுக்கணும்.

அவன் திரும்பிப் பாராமலேயே வரப்பில் ஓடிக் கொண்டிருக்கிருன். இது காட்சியாக, அவன் மீது ராவுத்தரின் குரல்—

குரல் : பய புள்ள. மெதுவாத் தாளு போயி, மெதுவாத் தாளு வாடா. அவசரமில்ல.

□□

குஞ்சரம் பம்ப் செட் கட்டடத்திற்குள் டிபன் கேரியரை வைத்துவிட்டு வெளியே வருகிற சமயம், ராவுத்தர் வாசலை நெருங்குகிருர். லேசான உரசலோடு... அவர் உள்ளே, அவள் வெளியே. உள்ளே போடப்பட்டுள்ள அகலமான பெஞ்சில் அவர் அமர்கிருர்.

ராவுத் : ஏ கழுத! ஏன் வெயில்ல காயுறே? உள்ள தான் வந்து இரேன்.

அவள் முகத்தில் மிரட்சி... அவர் முகத்தில் ஒரு அர்த்தமுள்ள சிரிப்பு... வழக்கமான பின்னணி இசையில் ஒரு கார்ட்டூன் காட்சி—

மழை... ஆட்டுக்குட்டி ஒன்று நனைகிறது. பக்கத்துப் பாழ்மண்டபத்தில் நிற்கும் ஒரு ஓநாய் அதைப் பார்க்கிறது.

"ஏன் நனையுறே? இங்க வா!"

ஆட்டுக்குட்டி மிரண்டு கத்துகிறது...

ராவுத் : ந்தா! பசிக்குது. நீதான் சோறுபோடணும். 'ங்க வா.

அவளது நடுங்கும் கால்கள்... வாசல் நிலை தாண்டி உள்ளே செல்கின்றன.

□□

முள்வேலியில் தட்டாரப் பூச்சி... சிறுவனின் கை அதை நெருங்க... பின்னணியில் பாடல்—

பாடல் : தட்டான் தட்டான் டோஸ்
தாலி யறுப்பான் டோஸ்
ஒன்ன ஒருத்தன் புடிக்க வாரான்
ஓடி ஒளிஞ்சுக் கோ!

□□

குஞ்சரத்தின் கவிழ்ந்த முகம். இமை துடிக்கும் அந்தப் பெரிய விழிகள்... பெஞ்சில் அமர்ந்திருக்கும் ராவுத்தர் அவளையே வெறிக்கிறார்.

மருதாணி வைத்த அவளது பாதங்கள்... பாதம் தொடங்கி கேசம் வரை காட்சி அவள் உடலில் மெல்ல ஊர்கிறது... இடையைத் தொட்டு உயரும் போது பின்னணியில் ராவுத்தரின் குரல்—

குரல் : கழுத. எம்புட்டு அழகா இருக்கே! ஒன்னயும் தனியா வுட்டுட்டு ஓடுறதுக்கு ஒம் புருசனுக்கு எப்படித்தான் மனசு வந்துச்சோ!

இப்போது கவிழ்ந்திருந்த அவள் முகம், அந்தப் 'புகழுக்கு' நன்றி சொல்வது போலவோ— அல்லது மயங்கிவிட்டதைப் போலவோ—ஏறிட்டு

அவரைப் பார்க்கிறது. இதயத்துடிப்பு போன்ற ஒரு பின்னணி இசை... திரையில் அலையலை யாய்க் கோடுகள்... ஒரு கார்ட்டூன் காட்சி—

மரக்கிளையில் ஒரு காகம். அதன் வாயில் வடை.. கீழே ஒரு நரி.

"காக்கா காக்கா நீ ரெம்ப அழகா இருக்கியே! ஒரு பாட்டுப் பாடேன்"

காகம் மயங்குகிறது.
"கா... கா... கா... கா..."
வடை கீழே விழுகிறது!

தட்டாரப் பூச்சி இப்போது சிறுவனின் கையில்...

□□

ஏரில் பூட்டிய மாடுகள் இப்போது பக்கத்து வய லில் பயிரை மேய்ந்து கொண்டிருக்கின்றன...

□□

மோட்டர் இயங்கும் சப்தப் பின்னணியில், பம்ப் செட் கட்டடச் சுவரின் வெளியே துருத்திக் கொண்டிருக்கும் குழாயில் நீர் பீறிட்டு விழ, குஞ்சரம் முகங் கழுவிக்கொண்டிருக்கிருள்...



15

குஞ்சரத்தின் குடிசைக்கு முன்னுலுள்ள பொட்டல். வேப்பமர நிழலில் சேரிச் சிறுவர் சிறுமியர்கள் இரு குழுவினராய் நின்று, ஒரு

குழுவினர் இன்னொரு குழுவினரை நோக்கி நகர்ந்து பாடி விளையாடுகிறார்கள். தரையில் புழுதி பறக்கிறது...

ஒரு குழு : அருப்புக் கோட்டையில — நொப்பன்
செருப்புத் தைக்கயில
நானு மில்லாட்டா — நொப்பன்
நாறிப் போவாண்டா!

அங்கே வந்து நின்றிருக்கும் க ங் கா த ர ன் அவர்கள் விளையாட்டைக் கவனித்துக்கொண்டிருக்கிறான். இதைக் கண்டுகொண்ட சிறுவர்கள் கூச்சத்தோடு சலசலக்கிறார்கள்.

கங் : நா' ஒரு வெளையாட்டுச் சொல்லித் தாரேன். ஆடுறீங்களா?

கோரஸ் : சரி.

ஒருவன் : என்ன வெளையாட்டு?

கங் : தவாளடி தவாள!

சிறுமி : ஐ! எங்களுக்குத் தெரியுமே.

ஒருவன் : நல்லாருக்கும்! ஆடுவோம்.

மற்றவன்: ஐயே! அடி வாங்குற வெளையாட்டு.

கங் : அப்படியில்ல. உக்காருங்க சொல்றேன்.

மரத்தடியில் வட்டமாக உட்கார்கிறார்கள்.

□□

வயலில் வீரபத்திரன் உழுதுகொண்டிருக்கிறான். குடை நிழலில் கழுங்குராவுத்தர்.

ராவுத் : கலப்பய அழுத்தமாப் புடிடா. கஞ்சி குடிச்சீல்ல?

மாடு விழி பிதுங்கி, மூச்சடக்கி இழுக்கிறது...

□□

சேரிச்சிறுவர்களிடையே கங்காதரன் துண்டை முறுக்கி ஒரு குறுந்தடி போலச் செய்கிறன்.

கங் : எல்லாருங் கவனிங்க. இதான் ஒங்க முதுகில விழப் போறது. ஒங்கள சுத்தி சுத்தி வர்ரவன் இத ஒங்க முதுகுக்குப் பின்னல வச்சுட்டு, மேக்கொண்டும் சுத்துவான். நீங்க அதுக்குள்ள முழிக்கலேன்ன, ஒங்கள ஓட ஓட வெரட்டி அடிப்பான். நீங்க முழுச் சுட்டீங்கன்ன, நீங்க அவன ஓட ஓட வெரட்டலாம். புரிஞ்சுதா? எல்லாரும் அவன வெரட்ற மாதிரி விழிப்பா இருக்கணும். ஒருத்தன் வாடா.

விளையாட்டு ஆரம்பிக்கிறது.

சுற்று : (சுற்றுபவன்) தவாளடி தவாளே...

கோரஸ் : சென்ன பட்டணம் தவாளே!

சுற்று : ஏ ஏ ரோசிக்கா...

கோரஸ் : ஏ ஏ ரோசிக்கா!

சுற்று : அந்தா போகுது இந்தா போகுது...

கோரஸ் : அந்தா போகுது இந்தா போகுது!

சுற்று : அடுத்த வூட்ல களவு போகுது...

கோரஸ் : அடுத்த வூட்ல களவு போகுது!

குஞ்சரம் சோர்ந்தநடையுடன் அங்கே வருகிறள். கண்களில் எதையோ இழந்த தவிப்பு... பயம்...

வட்டத்தில் ஒருவனய் அமர்ந்திருக்கும் குஞ்சரத்தின் மகனின் பின்னல், சுற்றுபவன் துணிப்புரியை வைத்துவிட்டு, முன்போலவே பாடிக் கொண்டு மெதுவாய்ச் சுற்றுகிறன். கங்காதரன் ஜாடை காட்ட, சிறுவன் எழுந்து துணிப்புரியை ஓங்கி, சுற்றுபவனை அடிக்கத் துரத்துகிறன். எல்லோரும் சந்தோஷத்தில் ஆரவாரிக்கிறர்கள்.

அதைப் பார்த்து நிற்கும் குஞ்சரத்தின் சோர்ந்த முகம் களையேறிச் சிரிக்கிறது. கங்காதரன் அவளைப் பார்த்து முறுவலிக்கிருன். அவளுக்கு அங்கே நிற்க முடியாத தவிப்பு... பரபரப்புடன் குடிசையை நோக்கி நடக்கிருள்— ஓடி ஒளிந்து கொள்ளத் துடிப்பவளைப் போல!


□□

குடிசைக்குள் அவள் முகம்... அழுவதற்குத் தயாராகும் ஒரு குழந்தையின் முகம் போல... பின்ஞெலியாய் அந்தச் சிறுவர்களின் பாடல்—

பாடல் : அந்தா போகுது இந்தா போகுது...
அடுத்த வூட்ல களவு போகுது!
கொல்ல கொலையா முந்திரிக்கா...
நரிய நரிய சுத்திவா!

தபேலா இசையில் அவளின் இமை துடிக்கும் விழிகள்... ஒரு கார்ட்டூன் காட்சி—

திராட்சைத் தோட்டம். அந்த நரி சோர்வுடன் மெல்ல மெல்லத் தாவுகிறது. பின்னர்... தாவுவதை நிறுத்தி திராட்சையை அண்ணுந்து ஏக்கத்துடன் வெறித்துப் பார்க்கிறது...



16

இருட்டி விட்டது. ஊருக்குப் புறத்தேயுள்ள சித்திவிநாயகர் கோயில். விநாயகர் சிலைக்கு முன்னுள்ள தீப மாடத்தில் விளக்கு எரிகிறது. அதில் எண்ணெய் ஊற்றுகிருன் தனக்கோடி.

தனக் : நேத்திக்கடன முடிச்சாச்சு! மெடிக்கல்ல ஸீட் கெடைச்சுட்டா... புள்ளேயாருக்கு எண்ணெய் ஊத்துரதா வேண்டிருந்தேன்.

பக்கத்தில் கங்காதரன் மௌனமாய் நிற்கிருன்.

தனக் : போகலாமா?

கங் : ஒங்கிட்ட... ஒன்னு பேசணும்!

தனக்கோடி அவன் முகத்தை உற்றுப் பார்க்கிருன். இருவரும் பக்கத்திலுள்ள பெரிய பாறையில் அமர்கிருர்கள்.
இப்போது அழுத்தமான 'வயலின்' இசைப் பின்னணியில், கங்காதரன் ஏதோ பேசுவது போலவும், தனக்கோடி மௌனம் சாதிப்பது போலவும்... தொடர்ந்து ஒரு கார்ட்டூன் காட்சி—

ஒரு எருமை மாடு. அதன் மேல் மழை பெய்கிறது. அது அசையவில்லை...

காட்சி பழையபடி—

கங் : இந்தப் பறச்சேரில ஒன்ன ஒருத்தன மட்டும் டாக்டருக்குப் படிக்க வச்சுட்டதால, இந்தச் சேரியையே உருப்பட வச்சுட்டதா ஆயிடுமா?

தனக்கோடி மௌனம் சாதிக்கிருன்.

கங் : நீயும் என்ன, படிச்சுட்டியினு, இந்தச் சேரிக்கு வந்தாதொழில் நடத்தப்போறே? ஸிட்டில இருப்பே ஆயிரம் ஆயிரமா சம்பாதிப்பே. உன் சந்ததி வேணுன்னு நல்லா'ருக்கும்! ஆனு, இந்தச் சேரி? எப்பவுமே சேரிதான்! உன் அம்மா கக்கூஸ் அள்ளாட்டாலும், இன்னெருத்தனேட அம்மா கக்கூஸ் அள்ளிட்டிருப்பா. இத மாத்தறதுக்கு உன்னுல முடியுமா?

அந்த எருமை மாடு... மழை முன்னே விட அதிகமாய் ... ம்ஹூம். எருமை அசையவில்லை!

கங் : தான் செயல்படுத்தறது ஓட்டை சித்தாந்தம்னு தெரிஞ்சிருந்தாக் கூட இந்த கவர்மெண்டால அத மாத்திக்க முடியாது. ஏன் தெரியுமா? ஒங்கிட்டே யும் எங்கிட்டேயும் ஓட்டுக்கு யாசிக்கிற கவர்மெண்ட் தான இது? இதால நமக்குப் பணத் தக் கொடுத்து திருப்திப் படுத்த முடியலாம். ஆனா, மத்தவங்க நம்மளைத் தாழ்வா, எளக்காரமா மதிக் கிருங்களே, அத மாத்திட முடியுமா? அதுக்கு நாம நெனைச்சாத் தான் முடியும்!


□□

கல்லுப் பிள்ளையாரின் பருத்துத் துருத்திய வயிற்றைத் தும்பிக்கை தடவிக் கொடுக்கிறது...

□□

கங் : இதுக்கு ஒரு திட்டம் வச்சிருக்கேன். இப்பசொல்லு. உன் படிப்பை தியாகம் பண்ணிட்டு நீயும் எங்கூட இருக்கியா? நாம ரெண்டு பேரும் அத ஆரம்பிச்சு வெற்றிகரமா நடத்திக்காட்டலாம்!

கல்லுப் பிள்ளையார்... வயிறு ...



17

புகைக்குள் மூழ்கிக் கிடப்பது போல் அந்தச் சேரி பனிமூட்டத்தில் தூசிபடிந்த ஓவியமாய்த் தெரிகிறது. ஈர வெளிச்சம்...

சேரியின் பிரதானத்தெரு. வேஷ்டியை அவிழ்த்து, பிடரிவரை உயர்த்திப் போர்த்தியவர்களாகவும், கைகளைத் தோள்களில் மாற்றிப்போட்டுக் குளிருக்கு இதமாய்க் கழுத்தைக் கட்டிக்கொண்டவர்களாகவும் சோம்பேறிகள் பலர் அந்தத் தெருவில் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கிடையே, ஒரு தகரப் பெட்டியைச் சுமந்துகொண்டு தனக்கோடியும், அவனோடு கங்காதரனும் நடந்து வருகிறார்கள்...

□□

சேரியின் குளத்தங்கரைப் புளியமரத்தடியில் ஒரு கிழவி மொச்சைப்பயற்றுக் 'கடை' பரப்பியிருக்கிறாள். ஒரு பொக்கைவாய்க் கிழவர் அவளிடம் பயறு வாங்கி, இருமலுக்கு இடையே அதைக் கொறித்து அசைபோடுகிறார். அந்த வழியாகத் தனக்கோடியும் கங்காதரனும்...

கிழவர் : ஆருடா? செவப்பி மயனா?

தனக் : ஆமா தாத்தா.

கிழவர் : தூரமா?

தனக் : மெட்ராசுக்குப் போறேன் தாத்தா. டாக்டருக்குப் படிக்கப் போறேன்.

கிழவர் : அடி சக்கே! டாக்டருக்கா படிக்கிறே... (இருமல்) போ போ. நீ வந்து ஊசிபோட்டுத் தான்... (இருமல்) எம் பொகச்ச நிக்கப் போகுது...!

மீண்டும் இருமல்... அவர் பேச்சுக்கு நிற்காமல் அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

□□

பனைமரங்கள் செறிந்த காட்டுப் பாதையில் அவர்கள் நடக்கிறார்கள். ஒரு பெண் பதனீர் விற்றுக்கொண்டிருக்கிறாள். இரண்டு கிராமவாசிகள் பனை ஓலையில் 'பட்டை' பிடித்துப் பதனீர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தனக் : கங்காதரா, பதனி சாப்பிடுவமா?

கங் : வேணும். ஸ்டேஷன்ல காபி சாப்பிடலாம்.

தனக் : பதனில ஒரு வசதி என்னன்னு, பட்டைல குடிச்சுட்டுத் தூக்கி எறிஞ்சுட்டுப் போயிடலாம். காபி'ன்னு அப்படியில்ல! எங்க சாதிக்கு மட்டும் துண்டு கிளாசிலே'ல குடுக்குருங்க?

கங் : இன்னிக்கு, துண்டு கிளாஸ் இல்லாம காபி வாங்கிக் குடுக்கறது எம் பொறுப்பு! வா.

தனக் : உன் தயவில நா' ஒருத்தன் மட்டும் அப்படிக் குடிச்சுட்டாலே போதுமா?

கங்காதரன் அவனை அர்த்தத்தோடு பார்க்கிறான். அந்தப் பார்வையில் அவன் நேற்றுச் சொன்ன வார்த்தைகள் பின்குரலாய் ஒலிக்கின்றன.

குரல் : இந்தப் பறச்சேரில ஒன்ன ஒருத்தன மட்டும் டாக்டருக்குப் படிக்க வச்சுட்டதால, இந்தச் சேரியையே உருப்பட வச்சுட்டதா ஆயிடுமா?

□□

ரயில் நிலையத்திற்கு முன் உள்ள காபி ஹோட்டல்.

கங் : ரெண்டு காஃபி குடுங்க.

'கல்லா'வில் அமர்ந்திருக்கும் ஹோட்டல்காரர் தனக்கோடியை உற்றுப் பார்க்கிறார்.

அவர் : அதோ, துண்டு கிளாஸ் இருக்கு. எடுத்துட்டு வா.

கங் : வட்டாவ்ல தான் வேணும்.

அவர் : நீயும் அந்த வர்ணசிரந் தானா? துண்டு கிளாஸ்ல குடிச்சா குடி. இல்லே, நடயக்கட்டு.

இப்போது அங்கே டிப்போ பால் 'கேன்' ஏற்றிய சைக்கிள் வந்து நிற்கிறது. கேனை இறக்கி உள்ளே கொண்டுபோகிறான் சைக்கிள்காரன்.

கங் : ஏன், நாங்க வட்டாவ்ல குடிச்சா ஒட்டிக்குமா?

அவர் : ஆமடா. ஒட்டிக்கும். ஒட்டிக்கத்தான் செய்யும்!

கங் : அப்படியா... நீங்க வாங்குறீங்களே டிப்போ பாலு. அது சேரில சாக்கடை அள்றவங்க கையால பீச்சி வாங்கிட்டு வந்ததுதான்'னு ஞாபகம் வச்சுக்கங்க.

இப்போது உள்ளே அமர்ந்து காபியை வாயில் ஊற்றிக்கொண்டிருந்த ஒரு ஆசாரப் பிராமணர் 'ப்பூ...' என்று அசூசையுடன் கொப்பளிக்கிறார்.

கங் : ஏன் சாமி, ஒங்க ஆத்து சாக்கடையத் தான சுத்தம் பண்றீங்க? அது தோஷம்னு, அதெல்லாம் ஒங்க அசுத்தம் தான்!

அவர் : என்னடா சொன்னே?!

'பளார்!...'

□□

அண்மைக் காட்சியாக, ரயில்எஞ்சின் பிஸ்டனின் விசையான அழுத்தம்... நீராவிப் பெரு மூச்சு... புகைவண்டி வந்து நிற்கிறது. இது காட்சியாக, தனக்கோடியின் நடுங்கும் குரல்—

குரல் : நா' வர்ரேன்'டா.

மீண்டும் எஞ்சினின் பெருமூச்சு... பிஸ்டனின் அழுத்தம்... எஞ்சின் புகைபோக்கியிலிருந்து 'குப் குப்' என்று மேல் கிளம்பும் புகை... அந்தப் புகைவண்டி நகர்ந்து போகிறபோது, தண்டவால இசையோடு பின்னணியில் ஒரு பாடல்—

பாடல் : வலிமையற்ற தோளினாய் — போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் — போ போ போ
பொலிவிலா முகத்தினாய் — போ போ போ
பொறியிழந்த விழியினாய் — போ போ போ
இலிபிடித்த நெஞ்சினாய் — போ போ போ
கிழ்மை என்றும் வேண்டுவாய் — போ போ போ
இன்று பாரதத்திடை நாய் போல
ஏற்ற மின்றி வாழுவாய் — போ போ போ!...

இப்போது கடைசிப் பெட்டியின் பின்புறம் அதோ தூரத்தில் போய்க்கொண்டிருப்பது தெரிகிறது.
□□

எஞ்சின் புகைபோக்கி 'அண்மைக் காட்சி)... அதில் 'குப் குப்' என்று கிளம்பும் புகை...



18

'குப் குப்' என்று புகை... காட்சி எட்டத்தில் நகரும்போது—

குஞ்சரத்தின் குடிசை முன்னுள்ள விளக்குக் கம்பத்தில் புலவர் சாய்ந்து உட்கார்ந்திருக்கிறார். கங்காதரன் உட்பட அந்தச் சேரியின் ஆடவர்கள் பலரும் அங்கே கூடி ஏதோ விவாதிப்பது தெரிகிறது. இரவு நேரம்.

ஒருவர் : இது என்ன இன்னிக்கி நேத்தா இருக்கு? ஊர் வழக்கந் தானே?

2-வது : (மனுவில் கைநாட்டு வாங்க வந்த கிழவர்) ஊர் வழக்கந்தான். தெரியாமய இருக்கு. இப்ப, தம்பி சொல்றது என்னன்னா, அத மாத்தணும்னு தான். அதுக்கு ரோசனையா ஏதாச்சும் சொல்லுங்க.

3-வது : ரோசனை என்ன ரோசனை, நம்ப சாதிக்கு'ன்னு ஏற்பட்ட தான? துண்டு கிளாசுல தர்ராங்க. மறுகா, காப்பியே தரலே'னு சொல்லலியே?

4-வது : (இளைஞன்) அதான? வக்காலி அவன் வட்டாவ்ல தரலேன்னா என்னா, காபி தொண்டைல எறங்க மாட்டேங்குதா? வுடுவியா...

2-வது : டேலே! மருவாதியாப் பேசுடா. சொல்ற சங்கதிய மருவாதியாத்தான் சொல்லேன். அவுக காதுக்குப் போனு, பொழப்பில மண்ணு தான்! அப்பறம் நக்கிக்கிட்டுத் திம்பான்.

3-வது : அதான? டங்குவாரு அந்து போயிடும்!

வெட்டி : (வெட்டியான்) ந்தா! நா' சொல்றேன் கேளுங்க. சாதி மானம் சந்நாசிக்கும் உண்டு. இப்ப என்னங் கடா ஆச்சு? துண்டு கிளாசுல குடுக்குறுன். அதக் குடிச்சா என்ன, கொடலா கறுக்குது? நா' இம்புட்டு புள்ளயா இருந்ததிலிருந்து இது தான்'டா வழக்கம், இத மாத்த முடியுமா? வெவகாரந்தான்'டா வரும்!

2-வது : ஆமா ஆமா... வெவகாரந்தான் வரும்!

அமைதி நிலவுகிறது. புலவர் தொண்டையைச் செருமிக் கொள்கிருர்.

புலவர் : அபயம்! அபயம்! ஊரான்கிட்ட அபயம் தேடுகிற மனிதர்கள்! அபயம்—அதுக்குள்ள இருக்கறதப் பாருங்க. அது தான் 'பயம்'! ஹஹ்ஹஹ்ஹா...

அவர் சிரிப்பு அடங்கும்போது மீண்டும் அமைதி. அவர் தொடர்ந்து சுருட்டுப் புகைக்கிருர்.

கங் : கொஞ்சம் பொறுமையாக் கேட்டீங்கன்ன நா' ஒன்னு சொல்றேன். இப்படி நாம பயப்படணும்னு அவசியம் இல்லே. நாம இப்படி ஆயிட்டதுக்காக வெக்கப்படணும். நம்மள மத்தவங்க இவ்வளவு கேவலமா மதிக்கிருங்களே, ஏன்? சொல்லுங்க.

ஒரு விஞடி அமைதிக்குப் பின்—

ஒருவர் : ஏன்... நம்ப சாதி பறச்சாதி! சக்கிலச்சாதி!

கங் : நம்ம ஜாதிலேயே, உத்தியோகத்தில இருக்கறவங் களுக்கும் பெரிய வியாபாரியா இருக்கறவங்களுக் கும் மரியாதை இருக்குதே, அது மட்டும் ஏன்'னு யோசிச்சீங்களா?... (மௌனம்... யாரும் பேசவில்லே) எல்லாம் நம்ம தொழில் தான் காரணம்!

மலம் அள்ளுறோம்! சாக்கடை அள்ளுறோம்! குப்பை அள்ளுறோம்! பிணத்த எரிக்கிறோம்! இதெல்லாமே ஊரைச் சுத்தம் செய்ற வேலை. மேடைல பேசச் சொன்னா, புனிதம் அது இது'ம்பாக. ஆனா, அதுக்குள்ள உண்மையான மரியாதை இது தான். அப்படீன்னா, இந்த ஊருக்கு நாம எவ்வளவு முக்கியம்னு புத்தி புகட்ட வேணுமா?

கூட்டத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள். உணர்ச்சிவயப்பட்ட வீரபத்திரன் திடீரென்று எழுந்து—

வீர: என்ன செய்யணும்? சொல்லுங்க.

கங்: நீங்க'ல்லாம் இனிம அந்த வேலைக்குப் போகக் கூடாது! செய்வீங்களா?

கூட்டத்தில் சலசலப்பு. ஆட்சேபிக்கும் குரல்கள்... நின்றுகொண்டிருக்கும் வீரபத்திரனின் முகத்தில் வீர உணர்ச்சிகள் கொஞ்சங் கொஞ்சமாய் வடிய, அவன் மனக் குரல்—

குரல்: போகாமலே இருந்துடலாமா?... போ கா ம லே இ ரு ந் து ட லா ம ா ?... போ கா ம

'லப்—டப்... லப்—டப்...' ஓசை. அவன் இதயம் அடித்துக்கொள்கிறது. லப்டப்லப்டப்லப்டப்லப்

□□

லப்—டப்... லப்—டப்... லப்—டப்...ல ப்—டப்... ஒரு ட்ராக்டரின் நிமிர்ந்து நிற்கும் புகைபோக்கிக் குழாயில் 'லப்—டப்... லப்—டப்...' என்று மூடி துடிக்கப் புகை வருகிறது. திடீரென்று புகையை அதிமாகக் கக்கிக்கொண்டு, அந்தக் குப்பை ஏற்றிய ட்ராக்டர் கடமை வேகத்தோடு ஓடத் தொடங்குகிறது.


□□

அதே போலவே, மலவண்டிகள், சாக்கடை வண்டிகள், குப்பை வண்டிகள் எல்லாம் தெருவில் ஓடுகின்றன. ஊர்ச் சுத்திகரிப்புக் காட்சிகள்...

வீடுகளின் முன்நின்று தட்டுக்களை ஏந்தி, பழைய கஞ்சிக்கு யாசிப்பதும், கும்பிடுவதும், கைகட்டு வதுமான காட்சிகள்... பின்னணியில் பாடல்—

பாடல் : அச்சம் நீங்கினையோ? — அடிமை!
ஆண்மை தாங்கினையோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும் — ஆசை
பேணுதல் ஒழித்தாயோ!

சேனை நடத்துவாயோ? — தொழும்புகள்
செய்திட விரும்பாயோ?
ஈனமான தொழிலே — உங்களுக்கு
இசைவதாகும் போடா!



19


காலை நேரத்து மூடுபனி. சேரியின் பிரதானத் தெரு. வெட்டியான் கழுத்தில் பறை தொங்க, அதை முழக்கிக்கொண்டு வருகிறான். நிறுத்தி—

வெட்டி : இதனால் ஊரு சனங்களுக்கு அறிவிக்கிறதாவது நாளக்கி தினத்தில, நம்ப கலக்கட்டரு எசமானும் மந்திரி அவுகளும், நம்ப சேரிக்கு விசயஞ் செஞ்சு நம்ப சனங்களுக்கு, காலனி கட்டிக் குடுக்க, வானந் தோண்டப் போறாக. ஆகையினால, தெருவுல சாக்கட தண்ணி தேங்காம, சுத்தமா வச்சிக் கிறணும்னு பஞ்சாயத்து உத்தரவூஉ...

'டம் டம் டடம்...'

அந்தப் பறையோசைப் பின்னணியில், ஆடை யில்லாத சிறுவர்கள் ஆனந்தமாய்த் தெருவில் ஓடும் சாக்கடை ஓடையில் மண் அள்ளிப் போட்டுத் தூர்க்கிறார்கள்... பறட்டைத்தலைச் சிறுமியர் தெருவில் சாணம்பொருக்குகிறார்கள்...

குஞ்சரம் குடிசைச் சுவரில் ஒட்டியுள்ள சிவப்பு முக்கோண விளம்பரம்... அதன் அடியில் சுவர் ஓரமாய், பத்துப் பதினைந்து குட்டிகள் பின்தொடர ஒரு தாய்ப்பன்றி கடமையுணர்வோடு உறுமிக் கொண்டு தெருவைச் சுத்தம் செய்யும் பணியில் தீவிரமாக இறங்குகிறது...



20

மாலைநேரம். கழுங்கு ராவுத்தர் வீட்டுமுன் ராவுத்தர் பீடி புகைத்தவாறே வாசலில் நிற்கிறார். வாய் வெற்றிலை குதப்புகிறது. தெருவில் அவர் வீட்டுச் சிறுவர்கள் 'கிரிக்கெட்' ஆடுகிறார்கள். பந்து உருண்டு போய் சாக்கடைத் தொட்டியில் விழுகிறது. கூடவே ஓடிய சிறுவன் பந்தை எடுப்பதற்கு முனையும் போது—

ராவுத் : டே டே சைத்தான்! சாக்கடை'லயா கையை ஓட்றே?

சிறுவன் : பந்து வுழுந்துடுச்சு!

ராவுத் : அதுக்கு—?

அவன் பயந்து நிற்கிறான். அங்கே வீரபத்திரன் புதுவேஷ்டி புதுச்சட்டை சகிதமாய், கையில் ஒரு வண்ணப்பெட்டியுடன் வருகிறான்.

ராவுத் : என்னடா, வெள்ளையுஞ்சள்ளையுமா, விசேஷமா?

வீர : (வெட்கத்துடன்) வர்ர வெள்ளிக்கி எனக்குக் கண்ணாலங்க மொதலாளி. அதான், வெத்தல பாக்கு கொண்டுவந்தேங்க!

ராவுத் : சரி சரி அத வச்சுட்டு, சாக்கடைல என்னத்தையோ போட்டுட்டானுகளாம், அத எடுத்துக் குடு.

வீர : (தயங்கி) நாலு வூட்டுக்குப் போவணும் மெதலாளி.

ராவுத் : அதுக்கென்னடா ?

வீர : கோயிலுக்கும் போவணும்... சாக்கடைல கைய வுட்டா அப்புறம் குளிக்கணும் மொதலாளி... (கெஞ்சலாக) வாணுங்க மொதலாளி...

ராவுத் : (அதட்டலாக) எடுத்துக் குடுத்துட்டுப் போடா!

வீர : வாணுங்க மொதலாளி...

ராவுத் : எடுத்துக் குடுத்துட்டுப் போடா'ங்கறேன்...

வீர : வாணுங்க மொதலாளி...

ராவுத்தரின் வெற்றிலை நிரம்பிய வாய் பாய்ந்து நெருங்கி (dollying) திரை நிரம்புகிறது...

□□

வீரபத்திரனின் சட்டை, வேஷ்டி, முகம் எல்லாம் ஒரே வெற்றிலை எச்சில்! அவன் முகம்... (freezing)

பாடல் : புல்லடிமைத் தொழில் பேணிப் — பண்டு
போயின நாட்களுக்(கு) இனிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர — இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி...



21

சேரிக் களத்துமேட்டுப் பொட்டலை அடுத்து

கரிமூட்டம் போட்டுள்ள விறகுக் குவியல் தூபம் போல் புகைந்துகொண்டிருக்க, பின்னணியில் கங்காதரன் குரல்—

குரல் : ''வந்தே மாதரம் என்போம்—எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்'' என்று நாட்டை வணங்கி சேரியின் வரவேற்புப்பணியைத் தொடங்கு கிறேன். தலைமையுரையாற்றிய ஊராட்சித் தலைவர் அவர்கள் 'புரட்சி' வந்தது என்றூர்கள்! 'சமம்' வந்தது என்றூர்கள்! சமம் எங்கே வந்திருக்கிறது?

காட்சி களத்துமேட்டுப் பொட்டலுக்கு நகரும் போது, அங்கே ஒரு மேடை. மேடையில் அமைச்சர் எனத் தோன்றும் ஒருவர், கழுங்கு ராவுத்தர், இன்னும் சிலர். பொட்டல் தரையில் சேரி மக்கள். மைக் முன்னுல் கங்காதரன்.

கங்கா : குடிசையாக இருக்கும் போது, இது 'ஹரிஜன்' சேரிதான்; கல்லுவீடாகிக் காலனியாஞலும் இது 'ஹரிஜன்' காலனி தான்! இப்படி எங்களை ஊருக்கு வெளியே ஒதுக்கித் தள்ளி, 'இவர்கள் ஒதுக்கப்பட் டவர்கள்' என்று பளிச்சென்று தெரியும்படி செய்வதற்குப் பெயரா சமத்துவம்? சிந்தியுங்கள். அமைச்சர்களே! உங்களைப் போன்ற அந்தஸ்தில் உள்ளவர்களும் எங்களைப் போன்ற எளியவர்களின் வீடுகளுக்கு இடையிடையே குடிவந்து வாழ்ந்து காட்டுங்கள்! அதைப் புரட்சி என்கிறோம். அதை விட்டு விட்டு இப்படி வெறுமனே புரட்சி என்று பெயர்பண்ணி...

இப்போது மேடையிலும் கூட்டத்திலும் சலசலப்பு. 'போதுண்டா போ' என்ற அதட்டல்கள்... அவன் தயங்கி நிற்கும் போது அமைச்சர் எழுந்து 'மைக்'கைப் பிடித்து—

அமைச் : புரட்சி என்ற நான்கெழுத்தை, முதல் எழுத்தான புகரத்தை நீக்கி மூன்றெழுத்தாக்கினுல், மிஞ்சு வதோ— 'ரட்சி'! ஆமாம். உங்களை ரட்சிப்பதே எங்கள் புரட்சி!

கூட்டத்தில் கைதட்டல். புலவர் சிரிக்கிருர்.

அமைச் : புரட்சியை யாரும் புதிதாய் எங்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டாம். இந்தச் சிறுவன் சொன்ன இடைவீடுத் திட்டம் ஏற்கெனவே எங்கள் சிந்தனை வட்டத்திலே உள்ளதுதான் ஆதலினால் அதனைக் கால கட்டத்திலே கொண்டுவரும் காலம் வரும்வரை இந்தக் காலனியின் அடிக்கல் நாட்டு விழாவினை ஒத்திப் போடுகிறேன் எனச் சொல்லி உங்களிட மிருந்து விடைபெறுகிறேன்! புரட்சி வாழ்க வாழ்க! வணக்கம்.

விருட்டென்று இறங்கி வெறுப்போடு காரில் ஏறுகிறார். கார் பறக்கிறது !

அதே நேரம் மேடையில் கங்காதரன் மீது ஆத்திரத்தோடு பாய்கிறார்கள் சிலர். மிருதங்க ஓசை... கார்ட்டூன் காட்சி—

மழை... மரக்கிளையில் நடுங்கும் ஒரு குரங்கு. அருகில் தூக்கணாங்குருவிகள்...

"நீயும் எங்களைப் போல வீடுகட்டிக்கொள்ளேன்"

"எனக்கா உபதேசம் பண்றே? எனக்கு வீடு கட்டத் தெரியாது; ஆனா பிரிக்கத் தெரியும்!"

குரங்கு நெருங்குகிறது. குருவிகள் இரைகின்றன...

அடிபட்ட கங்காதரனைக் குஞ்சரம்குடிசைக்கு முன்னால் கயிற்றுக் கட்டிலில் கிடத்தியிருக் கிறார்கள். குஞ்சரம் ஒத்தடம் கொடுக்கிறாள். சுற்றிலும் சேரி மகாஜனங்கள். விசனத்தோடும் வேகத்தோடும் வாதப்பிரதிவாதங்கள்...

1–வது : நம்ப பயலுகளும் அடிச்சிருக்கானய்யா! முட்டாப் பயமக்க !

2–வது : அட, மந்திரி கோவிச்சுட்டுப் போயிட்டார்'ல? கல்லூடு போச்சே'ன்னு வகுத்தெரிச்சல்ல அடிச் சிருப்பான். வுடு !

வீர: வுடுறதா? மந்திரி போனு போருரு! இப்படியே போயிருவாரோ? கொளத்தோட கோவிச்சுட்டு... போனுப்ல! மறுவடியும் ஓட்டுக்கு இங்கதான வரணும்?

1-வது: அட அத வுடு. இப்ப என்ன கேட்டாச்சு? நீங்களும் வாங்க, எங்க கூட வீடுகட்டிக்கங்க, இது தானப்பா? இதுக்கு மேலே மறு சொல்லு இல்ல. அட நம்ப ளுக்கு ஏத்துக்கிட்டுத் தானப்பா பேசுச்சு? நம்ப சாதிக்காரனும் அடிச்சான்னு இவன்க சோத்தத் திங்கிருன்களா, இல்லே...

4-வது: மொதல்ல அடிச்சது ஆரு?

2-வது: நா'ம் பாக்கல.

5-வது: நா'ம் பாத்தேன். கண்டா லெக்குக் காட்டிருவேன்.

வீர: எல்லாம் அந்த ஊர்க்காரன் தான் மெசாரிட்டி.

5-வது: ஆமா, நா' மட்டுக்கும் பொசுக்குண்டு ஊட வுழுந்து தாங்காட்டிக்கி செத்துப்போயிருக்கும்!

1-வது: இங்க பாருங்கப்பா நா' சொல்றத. இத இந்த மட்டுக்கும் வுடக்கூடாது. ஏதாச்சும் செஞ்சாகணும்!

2-வது: அதான் மஞ்ச அரைச்சு...தேச்சுவுடச் சொல்லிருக் கு'ல்ல, தேவலயாப் போயிரும்.

1-வது: அட ஆர்ரா இவன்? குருடு குருடுனு செவிடு செவி டுங்கருன். (குரலுயர்த்தி) இப்படி நம்ப சேரில வந்து நம்ப கூட இருக்கிற புள்ளய, கைநீட்டிட்டுப் போயிருக்கான்க. இதுக்குப்பதிலுக்குப்பதிலு செய்யணும்னு ரோசத்தைக் காணோம். பேசுரான்களாம் பேச்சு!

கொஞ்சம் அமைதி நிலவுகிறது.

4-வது: கலகம் பண்ணணுங்கிறியா?

வீர: ஏன்பண்ணுனு என்ன? நாம எவ்வளவு முக்கியம்னு

தான் இந்த ஊருக்குக் காட்டுவோமே?

பலர் : ஆமா, ஆமா.

1-வது : கலகம் பொறந்தாத்தான் நியாயம் பொறக்கும்!


4-வது : அய்யய்யோ, ஊர் கெட்டுப்போகும்!

நிசப்தம். எல்லோர் முகத்திலும் பீதிக்களை... புலவர் மட்டும் நிதானமாய்ச் சுருட்டுப்புகை யைக் 'குபுகுபு' வென்று விட்டவாறிருக்கிருர்.

1-வது : (முனகுவது போல) ஹூம்! பல்லக்கு ஏற யோகம் இருக்கு; உன்னி ஏறச் சீவன் இல்ல!

புலவர் : (எதையோ சிலாகித்து) புரட்சி!... புகரம் கெட்டால் ரட்சி! ம்... (திடீரென்று உரக்க) நகரம்! 'ந'கரம் கெட்டால்...?கரம்! (புயம் உயர்த்தி) ஆமாம். நகரம் கெட்டால் கரம் பதில் சொல்லட்டும்! (சிரிக்கிருர்.)

சிரிப்போடு சிதறும் புகையில்சுருட்டின் நெருப்புப் பொறி பறக்கிறது... கூடிநிற்போர் ஒவ்வொருவர் முகமும்... அனைத்துமுகங்களிலும் ஒரு ஆவேசம்!



22

மயானம். எரிந்துகொண்டிருந்த ஒரு சிதை 'கப்' என்று அணைந்து, படுத்திருந்த பிணம் எழுந்து பேயாட்டம் ஆடுகிறது...

□□

ஊர்த் தெருவில் குப்பைத்தொட்டி நிரம்பி வழிகிறது... காட்சி எட்டத்தில் நகரும்போது—

அந்தத் தெருவே குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது! சாக்கடைச் சிற்ருறுகள்... ஈ மொய்க்கும் எடுப்புக் கக்கூஸ்கள்... தெருவிலே போவோர் வருவோர் மூக்கிலே துணிவைத்து, சுத்தமான இடம் பார்த்து பவ்யமாய் நடக்கும் காட்சி...

□□

ஊரின் கடைசித் தெரு... கங்காதரனின் அப்பாவும் சித்தியும் ஆளுக்கொரு குப்பைவாளியும் மலவாளியுமாகத் தூக்கிக்கொண்டு நடந்து வருகிருர்கள். அவர்களைப் போலவே இன்னும் சிலர்... அவர்கள் முன்னே கிழவன் சங்கிலி சுதந்திரமாய் நடந்து போய்க்கொண்டிருக்கிருன்.

அவள் : அட அப்பா! இதத் தூக்கிக்கிட்டுப் போயிக் கொட்டிட்டு வந்துடேன், ரெண்டு ரூபா தாரேன்.

சங்கிலி : (நடந்தவாறே) அட போமா! லெச்ச ரூவா தந்தாலும் இந்த வேல இனிமேலிக்கி வேணும்!

அவர் : (பெருமூச்சுடன்) முருகா!

அவள் : அவன ஏன் கூப்புடுறீங்க?

அவர் : அதான? அவனால என்ன முடியும்? (வாளியை முக்கி முனங்கித் தூக்கியவாறு) கடவுளே வந்து பொறந்தாலும் அவனுக்கும் இத்தக் கதிதான்!

□□

ஆஸ்பத்திரி வாசலில் கூட்டம். இருமல், தும்மல், கக்கல், கதறல்... ஒரே நோய் ஆரவாரம்!

□□

பஞ்சாயத்து போர்டு அலுவலக காம்பவுண்டுக்குள் தோட்டிகள் கைகட்டி வரிசையாக நிற்கிருர்கள். நிசப்தம். காட்சி சற்று நகர—

அவர்களுக்கு எதிரே கோபாவேசமாக கழுங்கு ராவுத்தர் நிற்கிருர். கம்பளிப்போர்வை தோளில் தொங்குகிறது. 'ஷேவ்' பண்ணுத தாடை. வாயில் பீடி...

ராவுத் : நாளைக்காவது வேலைக்குப் போறீங்களா, என்னடா சொல்றீங்க?

அவர்கள் மௌனமாய்... தலைகுனிந்து...

ராவுத் : என்னடா, பேசாம இருந்தா என்ன அர்த்தம்? வாயத் தெறந்து சொல்லுங்க.

இன்னும் மௌனம்.

ராவுத் : டே சங்கிலி, நீ என்னடா சொல்றே?

சங்கிலி : நா' என்னங்க எசமான் சொல்றது... எல்லாரும் சொல்றது தானுங்க.

ராவுத் : எல்லாரும் என்னடா சொல்றான்க?

சங்கிலி : என்ன சொல்றான்க சம்பளத்தக் கேக்குறான்க !

ராவுத் : சம்பளத்த ஒசத்திக் கேக்குறான்களா?

சங்கிலி : இல்லீங்க. போனமாசச் சம்பளம்... இன் னு ங் குடுக்கலீங்க.

ராவுத் : குடுத்தா வேலைக்குப் போவீங்களாடா?

சங்கிலி : இதோட நின்னுக்கிறோம்'ங்க !

ராவுத் : (ஆத்திரம் பீறிட) அப்ப எம் மசுத்தத் தருவேன் தப்பிலிப் பயல்களா ! நின்னுக்கிறான்களாமில்ல, என்ன திமிரு ! நீங்க என்னங்கடா நின்னுக்கிறது, உங்க அத்தன பேருக்கும் சீட்டக் கிழிச்சாச்சுடா. போங்கடா... மசுரு ஒன்னே போச்சு. அவனவன் வேலயில்லாமக் கஞ்சிக்குச் சாகுறான், கொழுப்பப் பாரேன் ! தாய்லி பட்டினி கெடந்து செத்தாத் தான்'டா புத்தி வரும் ஒங்களுக்கு!

ஒருவன் : நாங்க அப்படி பட்டினி கெடக்க மாட்டோம் எசமான். எங்களுக்கு கையிருக்கு !

ராவுத் : எதுக்கு, செரைக்கிறதுக்கா?

வீர : செரைக்கிறதுன்ஞ என்னங்க, சுதந்திரமான தொழிலு !

ராவுத் : தொழிலு! ஒங்களுக்குப் பீ அள்ளத் தானடா தெரியும், வேற என்ன தெரியும் ?

செவப்பி : பொட்டி மொடஞ்சு, பாய் நெஞ்சு, மாடு கண்டு வளத்துப் பொழச்சுக்கிறதா முடிவு செஸ்ஸுட்டோம். இந்த ஈனப்பட்ட தொழிலு இனிமேலிக்கி வாணும்!

ராவுத் : முண்ட முண்ட, கீர முண்ட! நீ பொட்டி மொடஞ்சா என்ன, பாயி மொடஞ்சா என்ன், எங்க போயி விப்ப? நாங்கதான முண்ட வாங்கணும்? ஊர்ல ஒரு பய வாங்காதடா'ன்னு கட்டுப்பாடு போட்டுட்டா நீ பொழப்பியா?

சங்கிலி : எசமான், ராவஞவரத்து சந்தைல, இல்லாட்டி பரம்பக்குடி சந்தைல போயி விப்போமுங்க. ஒங்க கட்டுப்பாடெல்லாம் செல்லாதுங்க.

'பளார்' என்று அவன் கன்னத்தில் அறைகிருர் ராவுத்தர். கிழவன் கீழே விழ, பக்கத்தில் நிற்கும் வீரபத்திரன் பாய்ந்து முன்வந்து—

வீர : மொதலாளி. அவர ஏன் அடிச்சீங்க?

ராவுத்தர் அதிர்ந்து நிற்கிருர்.

ஒருவன் : மொதலாளியா? இன்னும் என்னடா மொதலாளி?

2-வது : அதான? இங்க என்ன பேச்சு? வாங்க'யா போலாம்.

வீர : நில்லுங்க. சம்பளத்த வாங்காம போ'க்கூடாது!

4-வது : பெரிய சம்பள்ம்] வாடா. அந்த சம்பளத்த வாங்கித் தான் சீமாஞப் போப்போறே! அது இல்லாம இத்தினி நாளு செத்தா போயிட்டே? வாரீயா...

எல்லோரும் திரும்பி நடக்கிருர்கள்.

ராவுத் : ஸ்ட்ரைக்காடா பண்றீக? பங்காளத்து நாயி சிங்காசனம் ஏறுச்சுன்னு, வண்ணாங் கழுத வெள்ளாவிப் பானையில ஏறுச்சாம்! கூறுகெட்ட முண்டைகளா! பேசாம வேலயப்பார்த்துட்டுக் கூலிய வாங்கிட்டுப் போங்க.

ஒருவன் : நுரையத் திண்டா பசி போகாதுங்க.

ராவுத் : கேப்பாரு பேச்சக் கேட்டுக் கெட்டழிஞ்சு போகாதீங் கடா. பொழைக்கணும்னா நாயி மாதிரி சொல்றதக் கேட்டு நடங்க.

வீர : (நடந்தவாறே) அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சுங்க.

ராவுத் : போங்கடா. அடுப்பெரிஞ்சாத் தானடா பொரிப் பொரியும்? போங்க.

வீர : ஒங்க தயவு இல்லாமயே எங்க வூட்டு அடுப்பு எரியுதா இல்லையா'ன்னு பாக்கலாம்.

ராவுத் : பாக்கலாண்டா. அறுதலி! அறுதலி! ஒங்க வூட்டு அடுப்பு மட்டுமாடா எரியும்? பாக்கலாம்!

வாயிலிருந்த பீடித்துண்டை வீசி எறிகிறார். அது குப்பை வண்டி மாடுகள் மேய்ந்துகொண் டிருக்கும் வைக்கோல் குலியலில் போய் விழுந்து புகைகிறது ... அவர்கள் நடக்கிறார்கள் ...

□□

இப்போது களத்துமேட்டுப் பொட்டல் வழியாக அவர்கள் போகிறார்கள். அங்கே நெல் காயப் போட்டு, காக்கைகளை விரட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறுவன் —

சிறுவன்: காக்கா வூட்ல தீ எரியுது, கள்ளப் பராந்து சொல்லாதே!
காக்கா வூட்ல தீ எரியுது, கள்ளப் பராந்து சொல்லாதே! ...

இதையே அவன் பாடிக்கொண்டிருக்க, அந்தக் கும்பல்மௌனமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

□□

இரவு. எங்கோ லாவணிப் பாட்டுக்காரர்கள் 'டேப்' அடித்துப்பாடும் ஆர்ப்பாட்டங்கள் தூரத்து ஓசையாய்க் கேட்க, குஞ்சரம் தன் குடிசைக்குள் 'சுடுதண்ணி' தயாரித்துக்கொண்டிருக்கிறாள்.

வெளியே கயிற்றுக் கட்டிலில் அடிபட்ட காயங்களுடன் கங்காதரன் படுத்திருக்கிறான். அவன் அருகில் குஞ்சரத்தின் மகன் கண்களைக் கசக்கிக் கொட்டாவி விட்டவாறு சிணுங்குகிறான்.

கங் : பாட்டு'லாம் பாக்கப் போகவேணும். நா'ம் பாடுறேன். நீ திருப்பிச் சொல்லணும். சரியா?

சிறுவன் : சரி.

கங் : ம்... அம்மா—இங்கே—வா வா!

சிறுவன் : ம்மா இங்க வா வா.

கங் : ஆசை—முத்தம்—தா தா!

சிறுவன் : ஆச முத்தம் தாத்தா.

□□

அடுப்புக்கு முன் குஞ்சரம்... பின்னொலியாக—

குரல் : (கங்காதரன்) ஆசை முத்தம் தா தா! ஆசை முத்தம் தா தா! ஆசை முத்தம் தா தா!...

அடுப்பில் வெந்நீர் கொதிக்கிறது.

□□

சேரிக் கருப்பணசாமிக் கோயிலுக்கு முன்னால் லாவணிப் பாட்டு... எரியாக் கட்சி வாதம்... 'மன்மதன் எரியவில்லை' என்று...

□□

வெந்நீர் கொதிக்கிறது. பின்னணியில்...

குரல் : அம்மா இங்கே வா வா! ஆசை முத்தம் தாதா!
அம்மா இங்கே வா வா! ஆசை முத்தம் தாதா!

குஞ்சரத்தின் முகத்தில் ஒரு தாபம். மெல்ல எழுந்து வெளியே வருகிறாள். வெளியே—

கட்டிலில் படுத்திருக்கும் கங்காதரனின் மார்பில் சாய்ந்து அவள் மகன் உறங்கிக்கொண்டிருக்கிறான். அவனருகில் வருகிறாள். நிற்கிறாள். அவனும் அவள் பக்கம் திரும்புகிறான்.

கங் : தூங்கிட்டான்.

குஞ் : ம்.

பிள்ளையைத் தூக்கிக்கொண்டு குடிசைக்குள் போகிறாள். அவள் திரும்பும்போது அவள் கையில் வெந்நீர்ச் செம்பு ...

கங்காதரன் மாத்திரை சாப்பிட்டு வெந்நீர் குடிப்பதையே அவள் வெறித்துப் பார்த்து நிற்கிறாள். பின்னணியில் லாவணிக் குழுவின் 'எரியாக் கட்சி'ப் பாடல் —

பாடல் : பாகமாகும் மீனக்கொடி தாழைகட்டி யோடுபெண்கள்
பட்டாளங்கொண் டதாகவே வேதம் வேதம்! — அன்ன
பாடுவதை யறியாமல் எரிந்தான் மாறன்எனவே
பாடத்துணிந் தீரே, ஏட வாதம் வாதம்! ...

கங்காதரன் அவளிடம் செம்பை நீட்ட, அவள் நடுங்கும் கரங்களால் வாங்கி —

குஞ் : கூத்து நடக்குது. போயிட்டு வர்ரேன் ...

கங் : ம்.

அதோ அவள் இருட்டில் மெல்லப் போய்க் கொண்டிருக்கிறாள். அவள் முகம் ...


திராட்சைத் தோட்டம் ஏக்கத்தோடு நிற்கும் நரி ... இப்போது அது போகிறது, திராட்சையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே ...

லாவணி... மும்முரமாக... இப்போது 'எரிந்த கட்சி' வாதம்... கூட்டம் ரசிக்கிறது. 'மன்மதன் எரிந்துவிட்டான்' என்ற வாதம் சூடு பிடிக்கும் போது — தூரத்தில் கங்காதரனின் அலறல்!

குரல் : ஐயோ! குடிசை எரியுது! ஓடியாங்க ஓடியாங்க.

□□

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண...' சுவரொட்டியும் எரிந்துகொண்டிருக்கிறது.



23

தீச்சட்டியில் புகை எழுந்து நெளிய, பக்கத்தில் மலர் அலங்காரப் பாடையில் ஒரு 'பணக்காரப் பிணம்'... ஊருக்குள் ஒரு வசதியான வீடு. வீட்டுக்கு முன்னால் அந்தப் பாடை. பாடையைச் சுற்றி மேள வாத்தியக் காரர்களால் 'மாரடிப் பாட்டு' நடக்கிறது.

பாடல் :

நேத்தி ருந்த அய்யா வுக்கு...
என்ன விதி நேர்ந்த தய்யா— அய்ய

தலைய னல்ல நோகு துன்னு...
தாம்ப டுத்தார் கட்டி லில்ல— அய்ய

மேலு னல்ல நோகு துன்னு...
போய்ப்ப டுத்தார் மெத்த யிலே— அய்ய

மூங்கெ முள்ளு பள்ளத் திக்கி...
மோங்க மூவப் போன வர்தான்— அய்ய

மூங்கெ முள்ளு தச்ச துன்னு...
மொகஞ்சாஅச்ச மாய மென்ன— அய்ய

தாழ முள்ளு பள்ளத் திக்கி...
தலைக்கு ளிக்கப் போன வர்தான்— அய்ய

தாழ முள்ளு தச்ச துன்னு...
தலைசாஅச்ச மாய மென்ன!...

அங்கே காரியங்களைக்கவனிக்கும் விறுவிறுப்பில் தெரியும் ஒரு மனிதர்...

□□

அவர் சேரிக்குள் விரைவாக வருகிறார்...

□□

பாதிக்குமேல் எரிந்துபோன குடிசைகளுக்குமுன் குஞ்சரம் அழுதுகொண்டிருக்க, பலரும் கூடியிருக்கிறார்கள். அவள் மகன் குற்றுயிராய்க் கிடக்கிறான். வெட்டியான் வேகிற நெஞ்சத்துடன் இடிந்த குடிசைச் சுவரில் சாய்ந்திருக்கிறான். அவனை 'அந்த மனிதர்' ரகசியமாக நெருங்கி, சுவரின் பின்னால் கூட்டிப்போகிறார்.

அவர் : இங்க பாரு. மாட்டேன்னு சொல்லாதே. பெரிய பணக்கார வூட்டு கேதம். ந்தா! பிடி. இது... அட்வான்ஸ்! இன்னும் கெடைக்கும். பொறப்படு.

வெட்டியானின் முகம்... பழி தீர்க்கும் வெறி...

குரல் : (அவன் மனக்குரல்) பெரீய எடத்துப் பொணமா?

கூரையில் எரியாது மிஞ்சியிருந்த ஒரு நீண்ட மூங்கிலை 'விருட்'டென்று உருவி எடுத்துக் கொண்டு அதிகபட்ச வேகத்துடன் நடக்கிறான்.

□□

ஊருக்குள், அந்தப் பணக்காரப் பிணம் ஊர்வலம் வருகிறது. சங்கு...சேகண்டி...அதிர்வேட்டு... மேள தாளங்கள் ... வயசுப் பொண்ணுகளின் கரகாட்டம் ...

□□

சுடுகாட்டில் அந்தச் சிதைக்குக் கொள்ளி வைக்கும்போது இருள் பரவுகிறது ... இப்போது அங்கே வெட்டியான் மட்டும். அவன் முகத்தில் கொலைவெறி. சிதை நெருப்பின் ஜுவாலையும் புகை நிழலும் அவன் முகத்தில்படிந்து பயங்கரத் தோற்றத்தைத் தருகின்றன. அந்தச் சிதையிலிருந்து பிணம் முறுக்கித் திமிறிக்கொண்டு எழுகிறபோது அவன் அதற்காகக் காத்திருந்

தவன்போலத் தன் கையிலிருக்கும் மூங்கில் தடியை ஓங்கி, ஒரு பைத்தியக்காரனைப்போல் முகம் குதூகலிக்க, அந்தப் பிணத்தை அடிக்கிறான்; அடித்துக்கொண்டே இருக்கிறான்! பின்னணியில் வஞ்சம் தீர்க்கும் பேய்ச்சிரிப்பு ...

□□

அதே இரவு. சுவர்க் கடிகாரத்தில் மணி 8. காந்திஜியின் பொக்கைவாய்ச் சிரிப்புப் படம் ... அது பஞ்சாயத்து போர்டு அலுவலக ஹால். கழுங்கு ராவுத்தர் மத்தியில் இருக்க, உறுப்பினர்கள் கூடியிருக்கிறார்கள்.

ராவுத் : ஒங்க அபிப்பிராயத்தைச் சொல்லுங்க.

உறு-1 : சொல்றதென்ன, அவன்க வரமுடியாது'ன்னு ஒருதலையாச் சொல்லிட்டான்க. இது மத்த எவனும் நா-நீ'ன்னு முந்தியடிச்சு வர்ரமாதிரி வேலயுமில்ல. செல்லஞ் செட்டியார் கூட சொன்னாரு, ரயில்டேசன்ல பாத்த குறவன்க கிட்ட கேட்டுப் பாத்தாராம். 'அட போ சாமி'ன்னு போயிட்டானுங்களாம் ...

உறு–2 : சரி சரி. கதய வுட்டுட்டு விசயத்துக்கு வாங்க.

ராவுத் : ஏன், சொல்லட்டும் சொல்லட்டும்.

உறு–2 : அட, ராத்திரி நேரமா இருக்கு'ல்ல? காலாகாலத்தில போயிச் சாப்பிட்டிட்டுப் படுக்க வேணா ?

உறு–3 : தலைக்கி மேல பிரச்சனைய வச்சுக்கிட்டு, இப்பப் படுக்கறதுதான் பெருசாப் போச்சு !

உறு–2 : இப்ப என்னங்கானு அப்படிப் பிரச்சனை? நா'ஞ் சொல்றேன் கேளும். அவன்க வரமாட்டேன்கிறான்க. வுடு. மிச்சம்! இப்ப என்ன கெட்டுப் போச்சு? நம்ம அசிங்கத்த நாமளே துப்புரவு பண்ணிக்கிறது? தப்பா'ங்கறேன்?

சுவரில் காந்தி புன்னகைக்கிறார் ...

உறு-4 : தப்பில்லே... அது சாத்யமோ ? சொல்லுங்கோ.

உறு-2 : நாம நெனைச்சுட்டா எல்லாம் சாத்தியந் தான்! முதல்காரியமா, தெருவுலயாரும் மலஜலம் கழிக்கப் படாதுன்னு தண்டராப் போட்டுட வேண்டியது ...

உறு-5 : தண்டராப்போடுறதுக்கும் அவன்கதான வரணும்!

□□

காந்தி படம் ... (க்ளோசப்) முறைக்கிருர் ...

□□

உறு-2 : அட யாருயா நீ, வெங்காயம்! அண்டத்தைச் சுமக் கிறவனுக்குச் சுண்டக்காயா பாரம்? தண்டராப் போடுறதுக்கு அவன்க வரணுமாக்கும்? நா'ம் போடுறேன்யா! போதுமா?... இன்னும் கேளும். அவனவன் வூட்டுக்கு முன்ஞல அவனவன் பெருக்கி சுத்தமா வச்சுக்கவேண்டியது. மலஜலம் கொட்றதுக்கு ஊருக்கு வெளில ஒரு கெடங்கு வெட்டி வச்சிட வேண்டியது.

□□

காந்தி படம் ... (க்ளோசப்) புன்னகைக்கிருர்.

□□

உறு-3 : நடக்கக் கூடியதாப் பேசுங்க.

உறு-2 : எல்லாம் நடக்கக்கூடியது தா'ங்கானும்!

உறு-6 : குப்ப விஷயத்திலே நீங்க சொல்றது ஒரு வகைல சாத்யம்னு வையுங்கோ. சாக்கடைத் தொட்டி ரொம்பி ஓடுறதே. இதுக்கு என்ன பண்ணுவேள்?

உறு-2 : அள்ளிச் சொமக்கணும்.

பலரும் : ஆங்... நல்ல கதையா இருக்கே!

உறு-1 : இதெல்லாம் முடியிற காரியமா?

உறு-3 : சிந்திச் செதறி தெரு நாறிப் போகும்.

உறு-4 : தெருவுக்குத் தெரு சண்டை வரும்.

உறு-5 : வூட்டுக்கு வூடே சண்டை வரும்.

உறு-6 : மொத்தத்தில் ஊரே களேபரமாகும்!

உறு–2 : அப்புடீன்ஞ ட்ரெயினேஜ் கட்டுங்க.

உறு-1 : அதுக்கு எவ்வளவு செலவாகுறது? இப்போதைக்கு நடக்குமா அது?

உறு-2 : (எரிச்சலுடன் எழுந்து) அப்ப என்ன எழவை யாவது பண்ணித் தொலேங்கய்யா. எனக்குத் தெரிஞ்சதச் சொல்லிட்டேன். நா' வர்ரேன்'பா கழுங்கு! முக்கியமா ஒரு வேல இருக்கு.

ராவுத்தரின் முகம் அழுது வடிகிறது ...

□□

சுடுகாட்டில் இன்னும் வெட்டியான் அந்தச் சிதையை அடித்துக்கொண்டே இருக்கிருன் ... இப்போது அவனே ஒரு லாந்தர் வெளிச்சமும் பல நிழல்களும் நெருங்க ... அவன் அடிப்பதை நிறுத்தி ஏறிட்டுப் பார்க்கிருன். எதிரே —

குஞ்சரத்தின் மகனே —பிணமாக— கையில் ஏந்தியவாறு வீரபத்திரன் கண்ணில் நீர் சொரிய நிற்கிருன். அவன் பின்ஞல் கங்காதரன் உட்பட அந்தச்சேரி ஆடவர்கள்! ... பின்னணியில் குஞ்சரத்தின் நெஞ்சையுருக்கும் ஒப்பாரி...



24

ஒரு காடா விளக்கு பெரிய சுடருடன் புகை கக்கி எரிந்து கொண்டிருக்கிறது...இரவு நேரம். குஞ்சரத்தின் குடிசைக்கு முன்னுள்ள விளக்குக் கம்பத்தில் விளக்கு எரியவில்லே. கம்பத்தின் கீழ் சேரி மக்கள் கூடியிருக்கிருர்கள்.

மௌனம். குஞ்சரத்தின் விசும்பல் மட்டும்...

வெட்டி : நிண்ட வெள்ளத்தயும் வந்த வெள்ளம் கொண்டு போயிருச்சி! (பெருமூச்சு...)

கங்காதரன் தலை கவிழ்ந்திருக்கிறுன்.

வெட்டி: சாமி!... நாங்க வசதியா வாழாட்டாலும், வம்பு தும்பில்லாம இருந்தோம். நீங்க வந்து எங்களுக்கு மானமில்ல மருவாதில்லன்னு இல்லாதுபொல்லாத சொன்னதும், இப்ப இந்தக் கதிக்கு ஆயிருச்சி!

வீர : ஆங்... பேசுறதப் பாரேன். அவரு என்னம்பாரு?

முதியவர்: நொப்பு சொல்றது நாயந்தான்யா? கையில்லா தவன் கரணம் போடலாமா?

வீர : நாயம் என்னங்க நாயம்? மானம் போகையில உசிரா பெருசு? அதான்... ஆளோட எளக்காரங் கண்டு ஆவாரையும் பீவாரியடிக்கிது!

மீண்டும் மௌனம்.

கங் : இப்ப நாம படுற கஷ்டமெல்லாம், நம்ம விடிவு காலத்துக்குத்தான்!

முதியவர்: ஆமா, கோழி கூவித்தான் விடியுது!

கங் : நாளைக்கு நம்ம சந்ததி நல்லா'ருக்கப் போகுது! அத நெனச்சுப் பாருங்க.

வெட்டி : பூண்டோட செத்துப் போறவனுக்கு, சந்ததி ஏது சாமி, சந்ததி? (அங்கே மௌனம் நிலவுகிறது.) நாட்டுக்கு நல்லதொரை வந்தாலும், தோட்டிக்குப் புல்லுசும போகாதுன்னு ஒவகதை சாமி. நாங்க எப்பவுமே அடிமையாத்தான் சாமி இருக்கணும். சென்மத்திலே பொறந்தது செருப்பா லடிச்சாலும் போகுங்களா?

மறுபடியும் ஒரு கனத்த மௌனம்... கூட்டத்தில் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்திருப்பவர்கள் தங் களுக்குள் ஏதோ விவாதிக்கிறுர்கள்...

ஒருவன் : சோணையன் நாளக்கி வேலக்கித் திரும்பப் போரு ணும். செலம்பனும் நானும் வாரேன்னுன். கடசிக்கி நாமதான் இளிச்சவாயன்க!

2-வது : டே! அப்படி நெனைக்காதே. பட்டினி கெடக்கிற வன் அப்படித்தான் பொலம்புவான். அதுக்காக? சனப்பலம் இருந்தாத்தான்'டா மனப்பலம் வரும் !

3-வது : இப்ப என்னங்கறே? சோனையனு பட்டினி கெடக் காங்கறே? வெறகு வெட்டியாந்து இந்தா மூனு ரூவாய்க்கி போட்டுட்டுத்தான் வந்தான். கருவைக் குள்ள போயி அருவாப் புடிக்க வலிக்கிது! ஒழச்சா சோறு வராமையா போவுது? இவன் கறிவலிக்காம ஊர்க்காட்ல வண்டியப் பத்திக்கிட்டு, அம்மாக்க மார்கிட்ட கஞ்சித்தண்ணி வாங்கித் திங்கலாம்'னு பாத்தா? வாங்கித்தின்னிப்பய! இந்தப் புத்தி இருந்தா எப்படி உருப்படுறது?

முதியவர்: டேல! இந்தாடா, இம்புட்டுப் பேசுறியே, இதுக்கு சங்கதி சொல்லு. நேத்தக்கித் தீய வச்சுட்டான்! கருவலமா வளத்த புள்ள ஊர்வலமாப் போயிருச்சி! இப்ப பொம்பள புள்ளைங்க ஒண்ட எடமில்லாம இந்தா, தெருவுல நிக்கிது! இதுக்கு என்ன சொல்றே? ஆங்!... ஒங் குடிசைலே எடம் இருக்கா, இல்ல எங் குடிசைலே எடம் இருக்கா? சொல்லு.

மீண்டும் ஒரு அமைதி. வானத்தில் 'பளிச்' என்று மின்னல்... தூரத்தில் எங்கோ உருளும் இடியோசை... கங்காதரன் சிந்திக்கிருன்.

ஒருவர் : சரி. பொக்குத் தக்குண்டு எங்காவது ஏற்பாடு பண்ணுங்க. மழையும் வரும்போல இருக்கு.

அமைதி. புலவர் செருமிக்கொள்கிருர்.

புலவர் : சாத்திரத்தைச் சுட்டுச் சதுர் மறையைப் பொய்யாக்கிச் சூத்திரத்தைக் கண்டு சுகம்பெறுவ தெக்காலம்?...

கங் : நா' ஒரு முடிவுக்கு வந்துட்டேன். (எழுந்து) உங் களுக்கு தைரியம் இருந்தா, இப்ப என்கூட வாங்க! உங்க அத்தனை பேருக்கும் ஊருக்குள்ள பாதுகாப் பான வீடு நாந்'தர்ரேன்!

ஒருவன் : ஊருக்குள்ளயா !?!

2-வது: இன்னும் வெவகாரத்துக்கா?

3–வது . அதான?

வீர : என்ன'யா அதான? இப்படிப் பயந்து பயந்து செத்து என்னத்த'யா கண்டோம்?

வெட்டியான் உணர்ச்சிவயத்தில்வேட்டெழுகிறான்.

வெட்டி : ந்தாங்க சாமி! நா' வாரேன். எங்க வரணும், சொல்லுங்க.

கங் : எங்க வீட்டுக்கு! என் பின்னால வாங்க.

நடக்கிறார்கள். குஞ்சரமும் செவப்பியும்கூட!...

புலவர்: நில்லுங்க.

நிற்கிறார்கள். அனைவர் கவனமும் புலவர் மீது...

புலவர் : இங்கே உட்கார்ந்திருக்கிறவங்க கிட்ட ஒன்னு கேக்கப்போறேன்... (விழியுருட்டி அனைவரையும் பார்க்கிறார்.) நா'ந்தான் முதன் முதலாக இங்கே குடிசை போட்டவன்! அந்த உரிமையிலே ஒன்னு கேக்கப்போறேன். எம்பேச்சக் கேப்பீங்களா?

பலரும் : கேப்போம் கேப்போம்! சொல்லுங்க.

புலவர் : (எழுந்து) நாம இப்ப வைசியர்களாயிட்டோம்! இந்தச் சேரியை நம்ம கையாலேயே தீய வச்சுக் கொளுத்துவோம். நாம எல்லாருமே இவங்ககூடப் புறப்படுவோம். எழுந்திருங்க!

□□

ஊருக்குள் ஒரு இருண்ட தெரு. நாய்கள் குரைக்கின்றன ... ஒரு குடுகுடுப்பைக்காரன் —

குடுகுடு : குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்ல காலம் வருகுது, நல்ல காலம் வருகுது;
சாதிகள் சேருது, சண்டைகள் தொலையுது;
சொல்லடி சொல்லடி சக்தி மாகாளீ!
வேதபுரத் தார்க்கு நல்லகுறி சொல்லு ...

□□

சேரி மக்கள் உற்சாகமாய் ஆரவாரித்து... தங்கள் உடைமைகளைப் பரபரப்புடன சேகரிக்கிறார்கள்...

அந்த ஓலைக் குடிசைகளுக்கு சந்தோஷத்துடன் தீ வைக்கிறார்கள்...

புலவரின் முகம் பூரிக்கிறது. எதிரே புன்னகையோடு வெட்டியான் ... அவனைப்பார்த்து புலவர் தன் வாயில் புதிய சுருட்டு ஒன்றை வைத்து—

புலவர்: கூரை பத்தி எரியுதா? கொஞ்சம் நெருப்புக் குடு.

சொல்லிவிட்டு 'ஹோ' ... வென்று சிரிக்கிறார். பின்னணியில் குடுகுடுப்பைக்காரன் குரல்--

குரல்:
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
சொல்லடி சொல்லடி மலையாள பகவதி!
அந்தரி, வீரி, சண்டிகை, சூலி
குடுகுடு குடுகுடு...

ஒரு வலைக்குள் மாட்டிய புறாக்கள்...ஒற்றுமையாய்ச் சிறகடித்து எழுந்து வானத்தில் சுதந்திரமாய்ப் பறக்கின்றன...

அதோ அவர்கள் அணிவகுத்து ஊரை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்கள் — புகை மண்டலத்தைக் கிழித்துக்கொண்டு!

தூரத்து நாய்களின் குரைப்பொலி இப்போது அடங்குகிறது. பின்னணியில் குடுகுடுப்பை—

குரல்:
சாத்திரம் வளருது, சாதி குறையுது;
நேத்திரம் திறக்குது, நியாயம் தெரியுது;
பழைய பயித்தியம் படீலென்று தெளியுது;
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது;
சொல்லடி சக்தி, மலையாள பகவதி!
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது!

சுடர்விட்டு எரியும் தீபத்தை ஊதினால்
அது அணைந்து புகையும்.
ஆனால் புகையும் அடுப்பை ஊதினால்...
கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கும்!

ஓ! இது ஓ! 6

ஓ! வெளியீடு-1

இந்த ‘ஓ!’ வுக்கு ஒரு கனவு உண்டு. ஆண்டுக்கு மூன்றென— ஒரு படைப்பிலக்கியம், ஒரு திறனாய்வு, ஒரு நல்ல மொழி பெயர்ப்பு இப்படி— இது பிரசவிக்கும். மூன்றுக்குப் பிறகு இப்போது வேண்டாம்.

இது ‘ஓ!’வின் தலைப்பிள்ளை. ஓ... தூபம் போட்டுப் ‘புகை’ யோடு ஆரம்பித்திருக்கிறோமோ?...

‘புகை’— ஷாஜகானுக்கு இரண்டாவது நூல். இவர் தமிழில் ‘திரை நாடகம்’ என்ற புதிய இலக்கிய வகைக்கு வித்திட்டவர். இவரது முதல் திரை நாடகமான ‘கற்புகள் கற்பனைகள்’ (அகர வெளியீடு) இவரை ஒரு புதிய சிந்தனையாளராய் அறிமுகப்படுத்தியது. ‘புகை’ அதை உறுதிப்படுத்துகிறது.

சுடர்விட்டு எரியும் தீபத்தை ஊதினால், அது அணைந்து புகையும். ஆனால் புகையும் அடுப்பை ஊதினால்... அது கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கும்! இந்தச் சமுதாயத்தின் ஒளி விளக்குகளை ஊதிப் புகைக்க இவருக்கு எண்ணமில்லை. மாறாக, வெந்து புகையும் நெஞ்ச அடுப்புக்களின் மூட்டத்தை ஊதி, ஆக்க ரீதியான அக்கினியைத் தோற்றுவிக்க முனைந்திருக்கிறார். நெருப்பில்லாமல் புகை ஏது?...

நம் தேசத்தில் காந்தி மகானால் கூடத் திட்டவட்டமான தீர்வு கொடுக்க முடியாத ஒரு பிரச்சனைக்கு இவர் தீர்வு காண முயன்றிருக்கிறார். அதைப் பரீட்சார்த்தமாய் பிரயோகித்துப் பார்ப்பதோ அல்லது விட்டுவிடுவதோ நமது மேன்மை கீழ்மையைப் பொறுத்தது.

